THE SUDAROLI

REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA

# சுடர் ஒளி


30.00

பக்கங்கள் -28


வார சஞ்சிகை

செப்ரெம்பர் 12- செப்ரெம்பர் 18, 2012

September 12 - September 18, 2012



## கூட்டமைப்புடன்–மு.காங்கிரஸ் இணையுமா?







## யானையின் முன்வரும் மணியோசை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிமான

அரச ஊழியர்களின் உன்னத சேவைக்காக

Sri Lanka Telecom
ஒரே தேசம். ஒரே குரல்.



## அபிமானத்திற்குரிய அரச சேவையாளர்களாகிய நீங்கள் நாட்டுக்காகச் செய்கின்ற உன்னத சேவைக்காக

நாட்டுக்காகவும் எமக்காகவும் அர்ப்பணிப்புடன் கடமையாற்றும் அரச ஊழியர்களாகிய நீங்களே இத்தேசத்தின் உறுதித்தூண்கள். அபிவிருத்தியோடு கூட வேகமாக முன்னோக்கிப் பயணிக்கும் எமது நாட்டின் சக்தியும் நீங்களே. உங்களது உன்னத சேவையை கௌரவிக்கும் பொருட்டே, நிலையான, தடங்கலற்ற, அதிவேக இணைய வசதியைக் கொண்ட 'அபிமான' SLT புறோட்பேன்ட் புதிய பக்கேஜினை, உங்களுக்கே உரிய விஷேட விலையில் வழங்குகிறோம்.

**ரூ. 6,990/- பெறுமதிமிக்க வயர்லஸ் ரவுடரானது, 'அபிமான' பக்கேஜிற்காக அதிவிஷேட விலை ரூ. 1,990/-* ற்கு**



*வரையறுக்கப்பட்ட கொடுப்பனவு

| அபிமான பக்கேஜ் விபரங்கள் | |
|---|---|
| ஆரம்பக் கட்டணம் | ரூ. 1,000 |
| மாதாந்த கட்டணம் | ரூ. 390 |
| டவுன்லோட் வேகம் | ஆகக்கூடிய 2 Mbps<br>ஆகக்குறைந்த 512 kbps |
| அப்லோட் வேகம் | 512 kbps |
| மாதாந்த பாவனை அளவு* | 1.5 GB |
| இலவச பாவனை: அப்லோட் (நெருக்கடி மற்றும் நெருக்கடியற்ற) டவுன்லோட் (நெருக்கடியற்ற) | 0.5 GB |
| மாதாந்த பாவனை (மொத்தம்) | 2.0 GB |
| மேலதிக பாவனை | • மேலதிக 1 MB க்கு 25 சதம்<br>• 10 GBக்கு பின் வேகம் 64kbps ஆகும்<br>• 10 GBக்கு பின் மேலதிக கட்டணம் இல்லை |
| விசேட சலுகைகள் | 3 ஈ-மெயில் கணக்கு மற்றும் 2 MB web space |

* மாதாந்த பாவனை அளவு (நெருக்கடி நேரங்களில் டவுன்லோட் செய்யக்கூடிய அதிகபட்ச அளவு):
அப்லோட் - நெருக்கடி மற்றும் நெருக்கடியற்ற, டவுன்லோட் - நெருக்கடி மற்றும் நெருக்கடியற்ற

உங்கள் நிறுவனத்தினால் உங்கள் சேவையை உறுதிப்படுத்திய கடிதத்துடன் தேசிய அடையாள அட்டையையும் நீங்கள் சமர்ப்பித்தல் போதுமானது. நீங்கள் ஓய்வூதியம் பெறுபவராயின், உங்கள் ஓய்வூதிய அட்டையுடன் தேசிய அடையாள அட்டையையும் சமர்ப்பித்தல் வேண்டும். உரிய மெகாலைன் இணைப்பினை உங்கள் பெயரின் கீழ் பெற்றிருத்தல் வேண்டும்.

கவனிக்க வேண்டியவை:

1. அரச துறையின் ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியம் பெறுவோர் மட்டுமே 'அபிமான' பக்கேஜினைப் பெற்றுக்கொள்ள முடியும். தற்போதைய பக்கேஜிலிருந்து 'அபிமான' பக்கேஜிற்கு மாறுவதற்கு ரூ. 500/- மட்டுமே அறவிடப்படும். (புதிய ரவுட்டர் ஒன்றை விஷேட விலையான ரூ. 1,990/- ற்கு பெற்றுக்கொள்ள விருப்பம் எனின், பக்கேஜ் மாற்றத்திற்கு ரூ. 1,000/- அறவிடப்படும்)
2. வேகமானது இணைப்பின் தூரம் மற்றும் நிலமைக்கு ஏற்ப மாறுபடலாம்.
3. டவுன்லோட் மற்றும் அப்லோட் செய்வதற்கான நெருக்கடியற்ற நேரம் (ஓ.ஃப்-பீக்), நள்ளிரவு 12 முதல் காலை 6 மணி வரையான காலமாகும்.

**உங்கள் 'அபிமான' பக்கேஜினைப் பெற்றுக்கொள்ள,**
**அருகிலுள்ள டெலிஷொப் அல்லது பிரதேச டெலிகொம் காரியாலயத்திற்கு விஜயம் செய்யுங்கள்!**

* இக்கட்டணங்களுக்கு அரசாங்க வரிகள் மற்றும் கட்டணங்கள் உள்ளடக்கப்படும். * நிபந்தனைகளுக்கு உட்பட்டது

www.slt.lk துரித அழைப்பு 1212

**BROADBAND**
சக்தியளிப்பது Megaline


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யானையின் முன்வரும் மணியோசை!



• சந்திரசேகர ஆசாத்

'யானை வரும் பின்னே மணியோசை வரும் முன்னே' என்றொரு பழமொழி தமிழில் உண்டு. ஒரு விடயம் நடைபெறப் போகிறது என்றால் அது நடைபெறுவதற்கான அறிகுறிகள் தோன்றுவதை இப்பழமொழி குறிக்கும்.

கடந்த பல வருடங்களாகவே இலங்கையைச் சுற்றி நாலு பக்கங்களிலும் மணியோசைகள் கேட்க ஆரம்பித்து விட்டன. பல யானைகள் பல வழிகளாலும் இங்கு உட்புகுந்து நிலைகொள்ளப் பல்வேறு விதமான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. அண்மைக் காலங்களில் இம்முயற்சிகளில் சீன யானைகளின் கரங்களே மேலோங்கி நிற்பதாகத் தெரிய வருகிறது.

அண்மையில் சீனப் பாதுகாப்பு அமைச்சரான ஜெனரல் லியாங் குவாங் லீ தலைமையிலான குழுவினர் இலங்கைக்கு விஜயம் செய்தனர். வழமையாக ஒரு நாட்டின் பாதுகாப்பு அமைச்சர் இன்னொரு நாட்டுக்கு விஜயம் செய்தால் அந்நாட்டு அதிபர், பாதுகாப்பு அமைச்சர், பாதுகாப்புப் பிரிவின் உயர்அதிகாரிகள் ஆகியோரைச் சந்தித்து பாதுகாப்பு தொடர்பான உறவுகள் பற்றிப் பேசுவதுண்டு. இச்சந்திப்புகள் இராஜதந்திர அடிப்படையில் அமைந்திருக்கும். பிறநாட்டு படைத்தளபதிகள் வந்தாலும் கூட அவர்களின் சந்திப்பும் பாதுகாப்பு அமைச்சு சம்பந்தப்பட்டவர்களுடனும் உள்நாட்டு படைத்தளபதிகளுடனுமே அமைந்திருக்கும்.

ஆனால் சீனப் பாதுகாப்பு அமைச்சரின் விஜயம் அந்த எல்லைகளைத் தாண்டிப் பலபடிகள் விரிவடைந்துள்ளன. தியந்தலாவை இராணுவப் பயிற்சிக் கல்லூரி, பனாகொடை இராணுவ முகாம் போன்ற பல இடங்களுக்கும் அவர் சென்று கலந்துரையாடல்களை நடத்தியுள்ளார். சில இராணுவத் தொடர்பற்ற, சீனாவால் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்களையும் அவர் சென்று பார்வையிட்டதாகச் சில தகவல்கள் கசிந்துள்ளன.

**இலங்கைக்கும் சீனாவுக்குமிடையிலான சிநேகபூர்வ ராஜதந்திர உறவுகள் என்ற எல்லையைக் கடந்து, சீன இராணுவத்திற்கும் இலங்கை இராணுவத்திற்கும் இடையேயான நேரடி உறவுகள் உருவாகி வருகின்றனவா என்ற கேள்வி எழுகிறது. இது இலங்கையின் பாதுகாப்புக்கும் இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் அமைதிக்கும் பங்கம் விளைவிக்கக் கூடும் என்றொரு கருத்து எழவும் வாய்ப்பளிக்கக் கூடும்.**

இவரின் வருகைக்கு சில நாட்கள் முன்பாகவே வடக்குக் கிழக்கில் உள்ள இராணுவ முகாம்களை வலுப்படுத்தவும் இராணுவக் குடியிருப்புகளை அமைக்கவும் நூறு கோடி அமெரிக்க டொலர்களை இலங்கைக்கு வழங்கவுள்ளதாக சீனா அறிவித்தது.

இலங்கைக்கும் சீனாவுக்குமிடையிலான சிநேகபூர்வ ராஜதந்திர உறவுகள் என்ற எல்லையைக் கடந்து, சீன இராணுவத்திற்கும் இலங்கை இராணுவத்திற்கும் இடையேயான நேரடி உறவுகள் உருவாகி வருகின்றனவா என்ற கேள்வி எழுகிறது. இது இலங்கையின் பாதுகாப்புக்கும் இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் அமைதிக்கும் பங்கம் விளைவிக்கக் கூடும் என்றொரு கருத்து எழவும் வாய்ப்பளிக்கக் கூடும்.

அவர் திரும்பிச் சென்ற கையுடனேயே இலங்கை நாடாளுமன்றத்தின் சபாநாயகர் சமல் ராஜபக்ச அவர்களின் அழைப்பின் பேரில் சீன மக்கள் காங்கிரசின் தத்துவார்த்தக் குழுவின் தலைவர் தலைமையிலான ஒரு குழு இலங்கைக்கு விஜயம் செய்துள்ளது. இவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்படப் பல தரப்பினருடனும் கருத்துப் பரிமாற்றங்களை மேற்கொண்டனர்.

சீனப் பாதுகாப்பு அமைச்சர் லியாங் குவாங் லீயின் இராணுவ அடிப்படையிலான வருகை, சீன மக்கள் காங்கிரசின் தத்துவார்த்தக் குழுவின் விஜயம் என்பன இலங்கை சீன உறவ ஒரு புதிய பரிணாமத்தை நோக்கி நகர்வதாகவே கருத முடிகிறது. ஒரு பெரும் வல்லரசு நாட்டின் பாதுகாப்பு அமைச்சர் சிறிய படைமுகாம்களுக்குச் சென்று அங்கு கலந்துரையாடல்களை நடத்துவது ஒரு சாதாரண விடயம் எனக் கூறி விட முடியாது. அதேவேளையில் ஒரு நாட்டின் அரசியலை வழிநடத்தும் உயர்மட்ட தத்துவார்த்தக் குழு இலங்கையின் அரசியல்வாதிகளுடன் சந்திப்புகளை நடத்துவது உள்நோக்கம் அற்றது என்று சொல்லி விடவும் முடியாது. ஒரு நாட்டின் கட்டுப்பாடு என்பது அரசியல், இராணுவம் என்ற இரு துறைகளுக்குள்ளேயும் அடங்குகின்ற காரணத்தால் இந்த இரு பிரிவுகளிலும் சீனா ஏற்படுத்தும் நெருக்கம் இலங்கையின் போக்கில் ஒரு வலிமையான பாத்திரத்தை வகிக்கும் என்பதை எவரும் மறுத்துவிட முடியாது.

இலங்கையில் இடம்பெற்ற போரின் போதும் சரி, போர் முடிந்த பின்பும் சரி சீனா இலங்கை அரசுக்கு மிகவும் காத்திரமான உதவிகளை வழங்கி வந்தது. போருக்காக ஆயுதங்கள், போர்த் தளபாடங்கள், ஆலோசனைகள் என அமைதியான முறையில் ஆனால் ஆணித்தரமான வகையில் எந்தவித நிபந்தனையுமின்றி சீனா இலங்கைக்கு வழங்கி வந்தது. அதேவேளையில் பெரும் அபிவிருத்தித் திட்டங்களையும் சீனா இலங்கையில் மேற்கொண்டது. குறிப்பாக அம்பாந்தோட்டைத் துறைமுகம், விமான நிலையம் என்பன பெரும் பொருட் செலவில் அமைக்கப்பட்டன. அத்துறைமுகத்தில் இரண்டாம் கட்டப் பணிகளும் விஸ்தரிக்கப்படவுள்ளன. இலங்கை முழுவதுமே நெடுஞ்சாலை அபிவிருத்தி வேலைகளையும் சீன நிறுவனங்களே மேற்கொண்டு வருகின்றன. நுரைச்சோலை அனல் மின் நிலையம் சீனாவாலேயே அமைக்கப்பட்டது. இவை எல்லாவற்றையும் விட சீனாவால் கொழும்பில் அமைக்கப்படும் தாமரைக் கோபுரம் ஆசியாவிலேயே மிக உயரமான தொலைத்தொடர்புக் கோபுரம் எனக் கருதப்படுகிறது. இதன்மூலம் அதிஉயர் வலுவுள்ள தொலைத் தொடர்புகளைப் பேண முடியும் என்பதுடன், அதன் மூலம் இந்து சமுத்திரத்தையும், இந்து சமுத்திரப் பிராந்திய நாடுகளையும் கண்காணிக்க முடியும் எனக் கூறப்படுகிறது. மேலும் கொழும்பின் மையப்பகுதியில் சீன நிறுவனம் ஒன்றினால் முந்நூறுக்கு மேற்பட்ட அறைகளைக் கொண்ட நவீன ஆடம்பர வசதிகளைக் கொண்ட பெரும் நட்சத்திரச் சுற்றுலா விடுதி ஒன்று அமைக்கப்படவுள்ளது. இன்னும் சொல்லப் போனால் இலங்கையின் அபிவிருத்திக்கு இந்தியாவை விட 5 மடங்கு உதவிகளை வழங்கி வருவதாகக் கூறப்படுகிறது. எனினும் பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபம், தாமரைக் கோபுரம் என இரு திட்டங்களையும் விட ஏனைய சகல உதவிகளும் ஐந்து வீத வட்டியுடன் கூடிய கடன் அடிப்படையிலேயே வழங்கப்படுகின்றன. உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் என்பன ஒன்றரை அல்லது இரண்டு வீத அடிப்படையிலேயே கடன்களை வழங்குகின்றன என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் பாரிய அபிவிருத்திக்கு சீனா நட்புறவு அடிப்படையில் பெரும் உதவிகளை வழங்குவதாக இலங்கையின் ஆட்சியாளர்கள் கூறி வருகின்றனர். இந்து சமுத்திரத்தில் இலங்கையின் கேந்திர முக்கியத்துவம் காரணமாக எந்த ஒரு வல்லரசும் இலங்கையைத் தனது கட்டுப்பாட்டுக்குள் அல்லது விலக முடியாத ஒரு உறவுக்குள் வைத்திருக்க விரும்புவது ஆச்சரியமல்ல. அந்த விஷயத்தில் சீனா வெற்றி பெற்று வருவதுடன் மேலும் அதை வலுப்படுத்தியும் வருகிறது.

மியன்மார், பங்களாதேஷ், இலங்கை உட்பட இந்து சமுத்திரம் தொடர்பான சீனாவின் முத்துமாலைத் திட்டத்தில் அம்பாந்தோட்டைத் துறைமுகம் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த மையப் புள்ளியாகும். அம்பாந்தோட்டைத் துறைமுகம் முற்று முழுதாகச் சீனாவினாலேயே வடிவமைக்கப்பட்டு கட்டப்பட்டது என்பதால் சீனா அதை எந்த நேரமும் எவ்வித முன்தயாரிப்போ, தடங்கலோ இன்றிப் பாவிக்க முடியும். தேவையேற்படும் பட்சத்தில் இதில் மையங்கொண்டவாறே முழு இந்து சமுத்திரத்தின் கடல்வழிப் பயணங்களைக் கண்காணிக்கவும் முடியும். கட்டுப்படுத்தவும் முடியும். இதேபோன்று கொழும்பு லோட்டஸ் தொலைத்தொடர்பு கோபுரத்தின் மூலமாக இந்து சமுத்திரத்தையும் அண்மித்த பிராந்திய நாடுகளையும் அவற்றின் நகர்வுகளையும் கண்காணிக்க முடியும். தேவையேற்படும் போது பல தொலைத்தொடர்புகளைக் கட்டுப்படுத்தவும் குழப்பவும் முடியும்.

இலங்கையின் நெடுஞ்சாலைகள், வலைப்பின்னல் தொடர்பான சகல விபரங்களும் சீனாவிடம் உண்டு. அவற்றை அமைத்தவர்கள் என்ற முறையில் அவற்றை எந்நேரம் எப்படிப் பாவிப்பது போன்ற தெளிவான திட்டங்கள் இருக்கும். ஒரு சர்வதேச நெருக்கடி எழும்போது இலங்கையின் ஒவ்வொரு அடி மண்ணையும் சீனா தனக்குச் சாதகமாகப் பயன்படுத்த முடியும்.

இவ்வாறு இன்று சீனா தனது பிராந்திய மேலாதிக்கத் தேவைகளுக்காக இலங்கையைப் பயன்படுத்தக் கூடிய ஒரு புறச்சூழல் இலங்கையின் ஆட்சியாளர்களால் உருவாக்கப்பட்டுள்ள வேளையில் அதற்கான உள்நாட்டு மக்களின் மனநிலையைச் சீரமைப்பதிலும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஐ.நா.சபையும், மேற்கு நாடுகளும், இந்தியாவும் நியாயமான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதை வலியுறுத்தியதை அடுத்து அந்த நாடுகளுக்கு எதிராக பலவிதமான பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டன. அமெரிக்க, இந்திய எதிர்ப்புணர்வு மக்கள் மத்தியில் ஊட்டப்பட்டது. தேசப் பற்றுள்ள தேசிய இயக்கம், விமல் வீரவன்ச ஆகியோர் இதில் தீவிரமாக நின்றதுடன் சீன ஆதரவுக் கருத்துகளையும் விதைத்தனர்.

ஒரு காலத்தில் சீனா, ஏகாதிபத்திய எதிர்ப்பில் உறுதியாக நின்றதும் ஏகாதிபத்தியங்களால் பாதிக்கப்படும் நாடுகளுக்கும் விடுதலைப் போராட்டங்களுக்கு ஆதரவு வழங்கியதும் உண்மைதான். அணிசேரா நாடுகளை ஒரு வலுவான அமைப்பாக உருவாக்கியதிலும் சீனாவுக்கு காத்திரமான பங்குண்டு. ஆனால் மாஓசேதுவ அவர்களின் இறப்பின் பின்பு அதிகாரத்தைக் கைப்பற்றிய டெங்சியாபெங் பொருளாதாரச் சீர்திருத்தம் என்ற பேரில் சீனா அதன் நிறத்தை முற்றாக மாற்றிக் கொண்டது. வளர்ச்சியடையும் நாடுகளைப் பொருளாதார உதவி என்ற அடிப்படையில் தனது மேலாண்மைக்குள் கொண்டு வரும் ஒரு பாதையைத் தேர்ந்தெடுத்தது. இன்னும் சொல்லப் போனால் ஆசிய, ஆபிரிக்கப் பிராந்தியத்தில் ஒரு பிராந்திய வல்லரசாக உருவாகும் நிலையில் திட்டமிட்டுக் காய்களை நகர்த்தி வருகிறது.

ஆனால், இலங்கை அரசும் அதனுடன் ஒட்டி நிற்பவர்களும் இன்றும் சீனாவை ஒரு நம்பிக்கையான நண்பனாக சிங்களமக்கள் மத்தியில் காட்டி வருகின்றனர். சீனாவின் உண்மையான முகம் மறைக்கப்பட்டு முன்னைய புரட்சிகர முகமே அவர்களுக்குக் காட்டப்படுகிறது. இதன் தொடர்ச்சியாகவே இலங்கை இராணுவத்தினர் மத்தியில் ஒருமுறை ஆதரவு அலையை உருவாக்கும் நோக்கிலேயும் இலங்கைப் படையினருக்கு சீனா மீது விசுவாசத்தை ஏற்படுத்தும் முகமாகவுமே சீன வெளியுறவு அமைச்சரின் விஜயம் அமைந்துள்ளது. அதற்கு வலுச்சேர்க்கும் வகையிலேயே வடக்குக் கிழக்கில் படைமுகாம்களின் உட்கட்டமைப்புகளை மேம்படுத்தவும் இராணுவக் குடியிருப்புகளை அமைக்கவும் சீனா 100 கோடி டொலர்களை வழங்கியுள்ளது.

தமிழ் மக்களின் நிலங்கள் அபகரிக்கப்பட்டு சிங்கள இராணுவக் குடியிருப்புகள் அமைக்கப்படுவதாலும் தமிழர்களின் வாழிடங்கள் அபிவிருத்தி என்ற போர்வையில் பறிக்கப்பட்டு தொழிற்சாலைகள், சுற்றுலா விடுதிகள் அமைக்கப்படுவதாலும் சிங்களக் கடும் போக்காளர்கள் பெரும் மகிழ்ச்சி கொள்ளலாம். வெற்றிக் கூத்தும் ஆடலாம்.

ஆனால் இலங்கையின் இறைமை பறிபோய்க் கொண்டிருக்கிறது என்பதை இப்போது அவர்கள் உணரத் தயாரில்லை. ஆனால், இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் ஒரு நெருக்கடி நிலை எழும்போது சீன இராணுவப் பிரசன்னம் இல்லாமலே இலங்கை சீனாவின் ஒரு தளமாக மாறிவிட்டதை உணர்வார்கள்.

இப்போ மணியோசை வந்துவிட்டது. யானை வருவதற்கான புறச்சூழலும் மிக நேர்த்தியாக உருவாக்கப்பட்டது. யானை அயலில் உள்ள பயிர்களுக்குத் தொல்லை கொடுக்கும் போதும், பாதைகளில் குழப்பம் விளைவிக்கும் போதும் யானை பற்றிப் [illegible] என்றுதான் எமது நாடு தனித்துப் போய்விட்ட அவலத்தைச் சிங்கள மக்கள் புரிந்து கொள்வார்கள்.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொலையா நினைவுகள்...

# வழக்கும் கணக்கும்!


எங்கள் ஊரின் காணிகளுக்கு எல்லைகளாய் மதில்களும் கிடுகு வேலிகளும் பாதுகாப்பாக உயர்ந்து நிற்கின்றன. எனது நிலத்தின் கிழக்கு எல்லையிலே மதிற்சுவர் அழகாகக் கட்டப்பட்டிருந்தது. அதனை வலுக்கட்டாயமாகத் தகர்த்தெறிந்து எனது நிலத்திற்குள் அயல் வீட்டுக்காரன் கால் பதித்தான். நானோ காணிக்கான உறுதிகள், வரைபடங்கள், மற்றும் ஆவணங்களைக் காட்டி காணியின் உரிமையை எனதென நிச்சயித்தாலும் அவனோ ஆதாரமற்ற பொய்யான வார்த்தைகளால் எனது நிலத்தை அபகரிக்கும் அக்கறையோடு செயற்பட்டான்.

அவனது செயற்பாடுகள் யாரோ சொல்லி வைத்த தவறான வழிகாட்டல்களோடும் பிழையான நோக்கத்தோடும் முன்னெடுக்கப்படுகின்றன என்பதைத் தெரிந்து கொண்டபோது, அவற்றை நியாயமான முறையில் தடுக்க முயன்றேன்.

அவனோ எனது நிலத்தில் வாழைகளையும் தென்னம்பிள்ளைகளையும் நாட்டினான். அதன் மூலம் எனது நிலத்தில் தனது ஆதிக்கத்தை நிலைநிறுத்தலாம் எனத் திட்டமிட்டான்.

இவை அனைத்தையுமே நியாயமான வழிகளில் நான் தடை செய்தபோது என்னை நேரிலே சந்தித்த அயல்வீட்டுக்காரன் தனது காணியில் வீடு கட்டுவதற்குப் போதிய நிலம் இல்லை எனவும் தனது காணி பரப்பளவில் மிகச்சிறியது எனவும் கூறித் தனக்கு உதவும்படி வேண்டினான். இந்நிலையில் அவனது காணியின் எல்லையோடிணைந்த எனது நிலத்திலிருந்து மூன்றடி அகலமான இடத்தைத் தரும்படி கேட்டான்.

அவனது வேண்டுகோளையும் விருப்பத்தையும் மனிதாபிமான அடிப்படையில் ஏற்றுக்கொண்டேன். எனது நிலத்தில் மூன்றடி நிலத்தை அவனுக்கு விட்டுக் கொடுத்து எனது நிலத்தின் எல்லை மதிலைக் கட்டத் தொடங்கினேன். தொழிலாளர்களைக் கொண்டு அத்திவாரம் வெட்டியபோது அவன் எனது தொழிலாளர்களை மதில் கட்டவிடாது தடுத்தான். எனது காணி முழுவதுமே தனக்குச் சொந்தமானதென வாதிடத் தொடங்கினான். எல்லை மீறிச் சண்டைக்கும் இழுத்தான். நானோ எனது நியாயத்தையும் உரிய



ஆவணங்களையும் கிராமசேவகர் தொடக்கம் காவற்றுறையினர் வரையும் எடுத்துக் கூறினேன்.

எனது நியாயத்தை ஏற்றுக் கொள்ளும் வகையில் அவனுக்கு வழங்கப்பட்ட எந்த அறிவுரையையும் அவன் நியாயமாகக் கொள்ளவில்லை. இதனால் எமது பிணக்கைத் தீர்த்துக் கொள்ள நீதிமன்றுக்குச் செல்லவேண்டியதாயிற்று. எனினும் தீர்ப்பு நீதியானதாக இருந்த காரணத்தால் எனது ஆவணங்களின்படி காணிக்கான உரிமை எனக்காகியது.

இது ஒரு காணி வழக்கு என்ற காரணத்தால் மாதங்கள் பலவாக இதன் விசாரணைகள் நீண்டு சென்றது. இருவருமே மன்றில் வழக்குரைஞர் ஒவ்வொருவரை ஒழுங்கு செய்வதும் அவசியமாகியது. இந்த வழக்கை நியாயமான தீர்ப்புக்கு இட்டுச் செல்வதற்காக உரிய ஆவணங்களைத் தேடிப் பெறுவதும் அவற்றின் பதிவுகள் பிரதிகள் எனப் பலவற்றுக்காகவும் காலமும் நேரமும் கடந்து போனதுடன் ஒரு தொகைப் பணமும் செலவாகியது.

இந்நிலையில் அயல் வீட்டுக்காரன் தான் எதிர்பார்த்த தீர்ப்புக் கிடைக்காமையால் காணியின் உரிமையை நீதியற்ற வழிகளில் பெறமுடியாது என்பதை இறுதியில் கற்றுத் தேர்ந்தான்.

இப்பொழுது அவன் எனக்கு நண்பனாகி முன்னே வந்து அன்று அவன் கேட்டு நான் கொடுப்பதற்குச் சம்மதித்த அந்த மூன்றடி நிலத்தையும் தருவீர்களா? எனக் கெஞ்சி நிற்கிறான்.

ஏழு எட்டு வருடங்களுக்கு முன்னரே நாம் இருவருமே இணங்கித் தீர்த்துக் கொள்ளக்கூடியதாக இருந்த இந்தக் காணிப் பிரச்சினையை நாமோ வழக்குக் கணக்கென அலைந்தும் இத்தனை காலங்களைக் கொன்றும் எத்தனையோ துன்ப துயரங்களை அனுபவித்தும் ஆயுளில் நீண்ட பகுதியை இழந்தும் கற்க வேண்டியதாக இருந்த உண்மை எதுவெனச் சிந்தித்துப் பார்க்க வேண்டிய நேரமாக இது உள்ளது என்பதை அவனுக்கு உணர்த்தினேன்.

பிரச்சினைகள் பிரச்சினைகளையே பிரசவித்துக் கொண்டிருக்கத் தீர்வுகள் தூரமாகிப் போயின. பிரச்சினைகளை விளங்கிக் கொண்டு அவற்றுக்குத் தீர்வு காண்பதைத் தவிர்த்தோம். பிரச்சினைகள் பலவாகக் கிளை பரப்ப மேலும் மேலும் சிக்கல்களுக்குள் நாம் உள்ளாகினோம். இப்பொழுது மீண்டும் நாம் பிரச்சினை தொடங்கிய பழைய இடத்துக்கே வந்திருக்கிறோம்.

வாழ்வு மத்தியில் எழுகின்ற ஒவ்வொரு விடயம் தொடர்பான குறித்த அறிவும் தெளிவும் இன்மையே இத்தகைய பிரச்சினைகள் உருவாகக் காரணமாகின்றன.

**நெடுந்தீவு மகேஷ்**

இவ்வாறே உலகில் எழுந்துள்ள பிரச்சினைகள் பலவும் ஒரு விடயத்தை நியாயமானதாகவும் சரியானதாகவும் விளங்கிக் கொண்டு தீர்வை நோக்கி நகர்த்தப்படாமையால் காலங்கடந்தும் தொடர்வதற்குக் காரணமாகின்றன.

நாம் பிரச்சினைகளை விளங்கித் தெளிந்து இணங்கிச் செயற்பட்டு விரைவாகவே தீர்வுகாண முயற்சிக்காது போனால் பிரச்சினைகள் தீர்க்கப்படாமை மாத்திரமல்ல, அது வேறும் பல புதிய பிரச்சினைகளை உருவாக்கும் வகையில் விரிவடைவதும் நிச்சயமாகும். எனவே பிரச்சினைகளைத் தீர்க்கப் புத்தியுடன் விரைந்து செயலாற்றுவோம். வாழ்வு மிகவும் சொற்பமானது. காலம் என்றுமே பொன்னானது.

# நல்லம்மாவின் நெருப்புச் சட்டியுடன்

- கவிஞர் அ.யேசுராசா



அன்னையெனும் தெய்வம் இந்த அகிலத்தின் மூலவேர். அவளது அசைவுகள் யாவுமே தனது உயிரெனப் பாதுகாத்து வளர்க்கும் பிள்ளைகளின் வளர்ச்சியிலும் உயர்ச்சியிலுமே ஊன்றி நிலைத்திருக்கிறது. ஒரு குடும்பத்தின் இயங்கு நிலைக்கு ஆதாரம் அவளே. அந்த அம்மாவின் நெருப்புச் சட்டியைப் பாடும் ஒரு உன்னதமான கவிஞரின் கவி வரிகள் எங்கள் இதயத்தை வருடுகின்றது.

**இன்றுமிந்தப் பின்னிரவில்**
**அலாம் அலறி ஓய்கையிலே**
**திகைச்செழுந்த நல்லம்மாள்**
**பாயிருந்து**
**சோம்பல் முறிக்கையிலே**
**எங்கிருந்தோ நாயொன்று**
**ஊளையிட்டுக் கேட்கிறது**

**"எழும்பு பிள்ள..!**
**மணியடிக்கப் போகுது**
**நேரம் போகுது"**

**கடைசியா**
**எழுந்த மகள்**
**பின் தொடரத் தான் நடந்து**
**குசினிக்குப் போகிறாள்**
**"சிரட்டை உடை**
**அடுப்பு மூட்டு**
**தேங்காயுடை**
**பனைப்பிழி**
**மணி**
**இரண்டடிச்சுப் போட்டுது**
**சந்திக்கடை ராசதுரை**
**கடைதிறக்க நாலுமணி**
**ஆகும் அதுக்கு முன்னம்**
**அப்பஞ் சுட்டுப் போடோணும்"**

**பால் பிழிந்த மாக்கரைச்ச**
**அலுப்புடனே முதிர்ச்ச மகள்**
**தூங்கியெழ போய்ப்படுக்கச்**
**சொல்லியவள்**
**அப்பம் சுடுகின்றாள்**

அன்னை தன் குடும்ப பாரத்தைக் காலையிலெழுந்தே சுமக்கத் தொடங்குகிறாள். அதற்கென விழித்தவள் ஓர் இயந்திரமாகி அப்பம் சுடும் தொழிலுக்கு ஆயத்தமாகிறாள்

**ஓம்..!**
**பின்னிரவின் இரண்டுமணிப்**
**பொழுதிருந்து முற்பகலின்**
**பத்து மணிப் பொழுதுவரை**
**அவள் அப்பம் சுடவேண்டும்**
**மூத்த மகன் பள்ளியில**
**பத்துப் படிக்கிறான்**
**சின்னவனும் இன்னும்**
**இரண்டு**
**பிள்ளைகளும் கூட**
**பள்ளிக்குப் போகின்றனர்**
**கூலிக்குப் போற அவள்**
**புருஷன் பின்னேரம்**
**கொண்டுவரும் நாலைந்து**
**ரூபாய்கள்**
**பற்றியெரி**
**ஆறு வயிறுகளின்**
**நெருப்பணைக்கக் காணாது**
**பள்ளிச் செலவுக்கும்**
**வழி காண ஏலாது**

விடிகாலையிலிருந்தே அவள் வேலை தொடங்குகிறாள். அவள் கணவன் கூலித்தொழிலுக்குச் சென்று கூலியாகப் பெற்று வரும் நாலைந்து ரூபாயும் அவள் பிள்ளைகளின் படிப்புக்கும் அவர்தம் வயிற்றுக்கும் போதாது.

**ஆதலினால்**
**வாழ்வு தணித்த அந்தச்**
**சுமைச் சட்டி நெருப்பேந்த..**
**பற்றியெரி சிரட்டைத் தணல்**
**கரிப்பற்றித் தணல் நிறைந்த**
**நெருப்புச் சட்டிகள்**
**வீசுகிற பெரு வெக்கை**
**நெஞ்சினிலும் முகத்தினிலும்**
**முன்னெழுந்து தாக்கத்**
**தன்னுடலைத் தீய்வதிலும்**
**கருகி இருந்தபடி**
**அவள் அப்பம் சுடுகின்றாள்**

ஆதலினால் அவளும் அந்த அப்பச்சட்டி ஏந்திய நெருப்போடு குடும்பத்தின் வறுமை நெருப்பணைக்க நெஞ்சிலேந்திய துயர் நெருப்போடு அடுப்பினிலும் அப்பச் சட்டியிலும் இருந்து வீசும் வெப்பத்தில் கருகி உடல் வேக அவள் ஓய்வின்றி அப்பம் சுடுகிறாள்.

**நாளைக்கும்**
**மீண்டுமங்குப் பின்னிரவில்**
**அலாம் அலறி ஓய்கையிலே**
**திகைச்செழுந்து நல்லம்மாள்**
**பாயிருந்து**
**சோம்பல் முறிக்கையிலே**
**எங்கிருந்தோ நாயொன்று**
**ஊளையிடும் குரல் கேட்கும்..!**

நாளைக்கும் என்றென்றும் அப்பம் சுட்டுத் தம்மை வாழவைத்த அன்னையின் அன்பையும் துணிவையும் அந்தத் தாயின் தனிப் பெருமையையும் பாடுகிறார் கவிஞர் அ.யேசுராசா. சிறந்ததோர் சிந்தனையாளரும் இலக்கிய பணிகளின் ஊடாக மக்கள் வாழ்வில் மறுமலர்ச்சியைக் காண முன்னின்று செயலாற்றும் எழுத்தாளராகவும் திகழ்பவர் அந்தனிஸ் யேசுராசா. அலை இதழின் இணையாசிரியர் கவிதை மாத இதழை வெளியிட்டவர். இவர் யாழ்ப்பாணம் குருநகரைப் பிறப்பிடமாகக் கொண்டவர். 1946இல் பிறந்தவர் அஞ்சலதிபராகப் பணி தொடர்ந்தவர் அறியப்படாதவர்கள் நினைவாக, பனிமழை என்பன அவரது நூல்களாகும் பல்துறைசார் ஆற்றலும் அறிவும் கொண்ட அவரது ஆக்க இலக்கியப் பணி தொடர வாழ்த்துகிறோம்.

**மைதிலி தேவராஜா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் – கொழும்பு

# மனஉளைச்சல் தரும் பயணம்!

**ஏறக்குறைய பன்னிரண்டு மணித்தியாலங்களாவது எடுக்கும் இந்நீண்ட பயண சேவையில் பெரும்பாலும் ஒரு சாரதியே பேரூந்தினைச் செலுத்தும் பணியில் ஈடுபட்டிருப்பார். இது உலகின் எப்பகுதியிலும் சட்டத்தில் அனுமதிக்கப் படாததாகும்.**

கொழும்பிற்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையிலான ஒவ்வொரு பாதையிலும், ஒவ்வொரு இரவும் கிட்டத்தட்ட ஐம்பது வரையிலான பேருந்துகள் சேவையில் ஈடுபடுகின்றன. அதிலும் வார இறுதி நாட்களில் அவை இன்னும் அதிகளவிலேயே சேவையில் உள்ளன.

ஏறக்குறைய அவையெல்லாமே பயணிகளை விரட்டியடிக்கும், தோழமை உணர்வற்ற முறையிலேயே இயங்குவதாகக் காணப்படுகின்றன. ஏற்கனவே பல மோசமான விளைவுகளை ஏற்படுத்திய விபத்துகள் இடம்பெற்றுள்ளன. ஆனால் பொதுமக்கள் அவை குறித்து இன்னமும் எதிர்ப்பு நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ளவில்லை. இது ஒன்றும் சாதாரண விடயமல்ல. பயணிகளின் வாழ்விற்கும் சாவிற்குமான ஓர் விடயமாகும்.

மக்களைக் கவர்ந்திழுக்கும் வகையில் தத்தமது பேரூந்துகளில் குளிரூட்டி வசதி, தொலைக்காட்சி வசதி மற்றும் நவீன இருக்கை வசதிகள் உண்டெனக் கூறிப் பயணிகளை பேருந்துகளில் சேர்த்துவிடுகின்றனர். ஆனால், இவ்வளவு தொலைதூரப் பயணங்களில் ஈடுபடும் எந்த ஒரு பேருந்திலும் கழிப்பறை வசதிகள் இல்லவே இல்லை. கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் செல்லும் பயணத்தில் முறுகண்டிக் கோவிலடியில் கிடைக்கும் கழிப்பறை வசதியைத் தவிர வேறெங்கும் இல்லை. அதனைக் கூடப் பயன்படுத்துவதற்கு ஒருசில வாரங்களுக்கு முன்னர் ரூபா 5/- ஆக இருந்த கட்டணம் தற்சமயம் ரூபா 10/- ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

அங்குள்ள கழிப்பறைகள் நரகத்தின் வாசல்கள் போன்று துர்நாற்றம் வீசுபவையாகவுள்ளன. பயணிகள் மிகுந்த சிரமத்துடனும் அவதானத்துடனும் அவற்றினைப் பயன்படுத்தியாக வேண்டியுள்ளது. இல்லையேல் நிச்சயம் அவர்கள் தொற்றுநோய்த் தாக்கத்திற்குள்ளாக வேண்டி நேரிடும்.

சில பேருந்துகள் அங்கு தரிப்பதைப் புறக்கணிக்கின்றன. தற்போது முறிகண்டி ஆலயத்தைப் பரிபாலிப்பவர்கள் சிரத்தை எடுத்து ஒழுங்கான விதத்தில் ஆலயச் சுற்றாடல் பேணப்படுவதை உறுதிசெய்வதுடன், ஆங்காங்கே தேவைப்படும் இடங்களில் குப்பைத் தொட்டிகள் வைக்கப்படுவதையும் கண்காணித்துக் கொள்ளுதல் அவசியமானதே. இவ்வாறு பரிபாலகர்களைக் கோருவது அளவிற்கு மீறியதேயாகும். எனினும் தவிர்க்க முடியாததாகவுள்ளது



சுற்றிவர வெளிச்சமற்ற பகுதிகளில் உள்ள உணவு நிலையங்களில் பிரத்தியேக நோக்கங்களுக்காகத் தமது பேருந்துகளை நிறுத்துகின்றனர். அத்தகைய வெளிச்ச வசதியற்ற வெளியான இடங்களில் இயற்கை உபாதைகளைக் கழிக்கச் செல்லும் பயணிகள் அங்கு பற்றைச் செடிகளுக்குள் மறைந்திருக்கும் பாம்புகளினால் தீண்டப்படும் அபாயங்கள் நிறையவே உள்ளன. இதனை யாருமே கருத்திலெடுப்பதில்லை.

இதைவிட தரகுப்பணம் பெறுவதற்காக பேருந்துகளுக்குப் பயணிகளைச் சேர்த்துக் கொடுக்கும் தரகர்கள் சிலர் முன்கூட்டியே பேருந்தின் ஆசனங்களைப் பதிவு செய்துவிடுகின்றனர். இதன் நிமித்தம் சில பயணிகள் தாங்களாக முற்கூட்டி ஆசனங்களைப் பதிவு செய்து கொள்ள இயலாது போகின்றது. அப்படிக் கூடப் பதிவினை மேற்கொண்ட போதும் தரகர்களின் செல்வாக்கினாலும், தலையீட்டினாலும் தரகர்களிற்கு வேண்டப்பட்டவர்களான இளம்பெண்களுக்கு அல்லது நண்பர்களுக்கு ஆசனங்களை மாற்றிக் கொடுக்கும்படி வலியுறுத்தப்படும் சம்பவங்களும் நடைபெற்ற வண்ணமுள்ளன. இதன்காரணமாக பேருந்து நடத்துநர்களுக்குத் தாங்கள் அதிகாரம் செலுத்தக் கூடியவர்கள் என்ற ஒரு கர்வ மனப்பாங்கு ஏற்பட்டு விடுகின்றது.

அதுவும் விசேடமாக யாழ்ப்பாணத்தில் வைத்துப் பேருந்து புறப்பட முன்னர் பயணிகளை பேருந்துகளில் ஏற்றும் அந்த அரை மணிநேரப் பொழுதிற்குள் அவ்விடத்தில் வைத்து நடத்துநர்கள் மற்றும் தரகர்களால் கையாளப்படும் ஒழுங்கீனங்கள் என்பதே உண்மையாகும்.

நீண்டதூர சேவையில் ஈடுபடும் பேருந்துகளை நெடுஞ்சாலையில் தரித்து நிற்பதற்கு ஒழுங்கான உணவகங்கள் மற்றும் கழிப்பறை வசதிகளுடன் பிரதான நகர்புற இடங்களாக புத்தளம், அநுராதபுரம், மதவாச்சி மற்றும் வவுனியா என்பன அமைந்துள்ளன. ஆயினும் பல பேருந்துகளைச் செலுத்துபவர்கள் அவ்விடங்களைத் தவிர்த்து எங்கேனும் ஏற்பற்ற, நேரத்திற்குப் பொருத்தமற்ற அத்துடன் துப்பரவற்ற,

**தமிழில் ஜஸ்ரின்**

முறைகளும் ஏழும் காட்டுக்கத்தல்களும் எளிதில் கூறமுடியாதவையாகும்.

அத்துடன் இரவுநேரப் பயணம் முழுவதும் வெறுப்பூட்டக் கூடிய மோசமான வன்செயல்கள் நிறைந்த திரைப்படங்களே அதுவும் பலத்த சத்தத்துடன் தொலைக்காட்சித் திரைகளில் ஆரம்பத்திலிருந்து முடிவுவரை ஓடிக் கொண்டிருக்கும்.

சொகுசு வசதிகளற்ற இரவுநேரப் பயணத்தில் இத்தகைய மன உளைச்சல்களுடனும், வேதனையுடனும் அன்றைய இரவு முழுவதையும் கழிக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமைக்குப் பயணிகள் உள்ளாகுகின்றனர்.

ஏறக்குறைய பன்னிரண்டு மணித்தியாலங்களாவது எடுக்கும் இந்நீண்ட பயணசேவையில் பெரும்பாலும் ஒரு சாரதியே பேருந்தினைச் செலுத்தும் பணியில் ஈடுபட்டிருப்பார். இது உலகின் எப்பகுதியிலும் சட்டத்தில் அனுமதிக்கப்படாததாகும்.

களைப்படைந்த சாரதி சில சமயங்களில் அவரது கண்களைத் திறந்து வைத்துக் கொள்ள இயலாமையால் சில இடங்களில் பேருந்தினை நிறுத்துவதும் கீழிறங்கிப் பேருந்தினைச் சுற்றிச் சில நடைகள் நடப்பதும் அதன் பின்னர் பேருந்திலேறித் தொடர்ந்து செலுத்துவதையும் காணக் கூடியதாகவுள்ளது. இத்தகைய சமயங்களில் பேருந்தினுள் உள்ளவர்களின் கதி என்ன? இது முற்றிலுமாக ஏற்றுக் கொள்ள முடியாததொன்றாகும்.

ஆகக்கூடியது ஏழுபேருக்கு ஐந்து மணித்தியாலங்கள் என்ற வீதத்தில் இரண்டு சாரதிகளாவது இரவு நேரச் சேவையில் ஈடுபடுத்தப்படுதல் வேண்டும். பயணிகளின் இயற்கை உபாதைகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு குறைந்தது இரண்டு இடங்களிலாவது பேருந்துகள் தரித்து நிற்பதை உறுதிசெய்தல் வேண்டும்.

அவ்வாறு தரித்து நிறுத்தப்படுவதற்குத் தெரிவு செய்யப்படும் இடங்களில் ஒழுங்கான உணவகங்கள் மற்றும் கழிப்பறை வசதிகள் கிடைக்கக் கூடியதாக இருத்தல் மிக அவசியமானது.

பயணவழிப் பாதைக்கான அனுமதிப் பத்திரத்தை வழங்கிடும் பொழுதுகளில் இதுவும் ஒரு நிபந்தனையாகக் கட்டாயமாக அமைந்திருத்தல் வேண்டும். அத்துடன் பயணவழியில் தரித்து நிறுத்தப்படும் இடங்களின் விபரம் பயணிகளுக்குத் தெரியக்கூடியதாக பேருந்தினுள் உட்புறத்தில் காட்சிப்படுத்தப்படுதல் வேண்டும். அதுகுறித்துப் பயணிகள் முற்கூட்டியே அறிந்திருப்பின் அவ்விடங்களில் இறங்கித் தமது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குரிய தயார் நிலையில் இருப்பதற்கு ஏதுவாக உதவும்.

அதைவிடுத்து இப்பொழுது நடைமுறையில் உள்ளது போல இரவுகளில் நிறுத்தப்படும் இடங்களில் பயணிகள் அவதிப்பட்டு இறங்கி தூக்கக் கலக்கத்தில் வீதியைக் கடக்கும் சமயங்களில் நெடுஞ்சாலையில் வேகமாகப் பயணிக்கும் வாகனங்களினால் மோதப்படும் ஆபத்தும் உள்ளது.

அனைத்திற்கும் மேலாகப் பயணிகளுடன் மரியாதையுடனும், நட்புணர்வுடனும் பழகத் தெரியாத அத்துடன் இனிய சொற்களைப் பயன்படுத்திப் பேசத் தெரியாத பேருந்து நடத்துநர்களை இப்படியான நெடுந்தொலைவு கடுகதிச் சேவைகளில் ஈடுபடுத்தவே கூடாது. அதுமட்டுமன்றி பேருந்தில் பயணிகள் ஏறும்போதும் இறங்கும்போதும் விரைந்து ஏறும்படி கடுமையான தோரணையில் அதிகாரமாகக் கட்டளையிடும் தன்மையும் ஏற்றுக் கொள்ள முடியாததொன்றாகும். ஏனெனில் பயணக்களைப்பினால் அசதியுற்று அரைத்தூக்கத்தில் இருக்கும் அவ்விரவு வேளைகளில் அவர்களை அவ்விதம் நெருக்குதல் ஒரு நல்ல மனப்பாங்குடைய முறையெனக் கூறிவிட முடியாது.

கொழும்பில் ஓரிடத்தில் இருந்து புறப்படும் பேருந்து பயணிகளை ஏற்றுவதற்காக வீதி வீதியாக ஊர்ந்து ஊர்ந்து செல்வது கூடாது. அதே போன்று யாழ்ப்பாணத்திலும் ஒரே இடத்திலிருந்து புறப்படுதல் வேண்டும். பயணிகளை ஏற்றியபின் ஒரு சிலருக்காக ஊர்ந்து சென்று ஏற்றுதல் என்பது ஏனைய பயணிகளுக்குச் சங்கடத்தையும் மன உளைச்சலையும் ஏற்படுத்தும் செயலாகும்.

சில பேருந்துகள் அத்தியாவசியமெனக் கருதப்படும் பயணவழி அனுமதிப் பத்திரங்கள் இன்றிச் சேவையில் ஈடுபடுவதாக அறிய முடிகின்றது. இது குறித்து போக்குவரத்துத் திணைக்கள ஆணையாளரும் அண்மையில் தெரிவித்திருந்தமை பத்திரிகைகளில் வெளிவந்தது. இதுவும் ஒரு வகையில் பயணிகளுக்கு வீணான பயணத் தாமதங்களையும் தலையீடுகளையும் விளைவிக்கக் கூடியவையாகும்.

எது எப்படியிருப்பினும் தனியாரது பேருந்துச் சேவையாயினும் சரி, அரச பேருந்துச் சேவையாயினும் சரி பயணிக்கும் பொதுமக்களுக்கு மன உளைச்சலை விளைவிக்காத பாதுகாப்பான பயண உத்தரவாதத்தை உறுதிசெய்வது அரசாங்கத்தின் கடமையாகும்.

பயணிகளுக்குத் தேவையானது எவை? வாகனங்களை நிறுத்துவதற்கு இடவசதி கொண்ட பேருந்து நிலையங்கள், பேருந்து புறப்படும் சென்றடையும் நேர அட்டவணை விபரங்கள், தரிக்கும் இடங்கள் என்பவற்றின் விபரங்களைக் காட்சிப்படுத்த வேண்டும். அதுமட்டுமன்றி பேருந்துகள் வாகனத் தொடரணி பாணியில் ஒன்றன்பின் ஒன்றாக அடுத்தடுத்துப் புறப்படுவதும் பலராலும் விரும்பத்தகாததொன்றாகும்.

எதற்கும் விரைவில் யாழ். கொழும்பு தொடருந்து சேவை ஆரம்பிக்கப்படுமா என்பதே அனைவரினதும் எதிர்பார்ப்பு.

***சண்டேலீடர் பத்திரிகையில் விக்ரர் கருணைரத்னன் எழுதிய கட்டுரை.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடர்ஒளி

12, செப்ரெம்பர் - 18 செப்ரெம்பர், 2012

96, ஜெயந்த மல்லிமாரச்சி மாவத்தை,
கொழும்பு-14, டெலிபோன்: 0115798006
பக்ஸ்: 0115517944 -5
E-mail: editorial@sudaroli.com

## தமிழ் மக்களின் உணர்வு வெளிப்பாடு!

கிழக்கு மாகாண சபை ஆட்சியை முஸ்லிம் காங்கிரசுடன் இணைந்து ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியே அமைக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. இத்தேர்தலிலும் அரசாங்கம் முன்னைய தேர்தல்கள் போல அனைத்து வளங்களையும், வழிமுறைகளையும் பயன்படுத்தியது. அவ்வகையில் போனஸ் தவிர்த்து 14 ஆசனங்களை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பெறக்கூடியதாக இருந்தது. தமிழ் தேசியக் கூட்டமைப்பு மூன்று ஆசனங்கள் வித்தியாசத்தில் 11 ஆசனங்களை பெற்றுள்ளது. இது கூட்டமைப்பின் வெற்றி என்பதை விட தமிழ் மக்களது உணர்வு வெளிப்பாடு என்று கூறுவதே பொருத்தமானது.

இத்தேர்தல் பரப்புரைகளின் போது அரசாங்கக் கட்சி அபிவிருத்தி தொடர்பாக மட்டுமே பரப்புரை செய்தது. ஆளும் கட்சியின் ஆட்சி அமையாவிட்டால் கிழக்கின் அபிவிருத்தி நடவடிக்கைகள் தடைப்படும் என்பதான அச்சமூட்டும் கருத்துக்கள் மக்கள் மனங்களில் விதைக்கப்பட்டன.

கூட்டமைப்பு தமிழர் உரிமைகள் பற்றி பரப்புரை செய்தது. தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வை அரசாங்கம் இழுத்தடித்து வருகின்றதோடு இருக்கின்ற நிலங்களும் பறிபோகின்ற நிலைமைகள் குறித்து கூட்டமைப்பு உச்சப் பரப்புரையை மேற்கொண்டது. தமிழ் மக்கள் அரசாங்கத்தின் மீது கொண்டுள்ள அவநம்பிக்கை, வெறுப்பு என்பவற்றின் வெளிப்பாடாகவே கூட்டமைப்பிற்கான வாக்குகள் கிடைத்தன. கிழக்கில் 75 வீதமான வாக்காளர்கள் வாக்களித்திருந்தால் கூட்டமைப்பு முதல்நிலைக்கு வந்திருக்கலாம். ஆனால், ஐம்பது சதவீதமான வாக்காளர்களே வாக்குப்பதிவில் கலந்து கொண்டனர்.

முஸ்லிம் காங்கிரஸ் பள்ளிவாசல்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களின் பின்னான முஸ்லிம் மக்களின் உணர்வுகளை அதன் பரப்புரையின் பிரதான வைப் பொருளாகப் பயன்படுத்திக்கொண்டது. இந்நிலையிலேயே அது 7 ஆசனங்களைப் பெற்று மூன்றாவது இடத்திற்கு வந்துள்ளது.

ஒட்டுமொத்தமாக சிறுபான்மை மக்கள் மீது பெரும்பான்மையினர் மேற்கொண்டு வரும் ஒடுக்குமுறைகளின் பரிமாணம் குறித்தும், அம்மக்களின் எதிர்காலம் குறித்தும் தொலைநோக்குச் சிந்தனை இருந்தால் மட்டுமே கூட்டமைப்பும் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியும் இணைய முடியும். ஆளும் தரப்பை எதிர்க்கும் ஐக்கிய தேசியக் கட்சியை இக்கூட்டுடன் இணைப்பதென்பது சிக்கலான காரியமல்ல. இவ்வாறு இணைந்தால் இக்கூட்டு கிழக்கு மாகாணத்தின் ஆட்சியைக் கைப்பற்றலாம்.

நீதிமன்றத் தீர்ப்பின்படி பிரிக்கப்பட்டுள்ள வடக்கு, கிழக்கு மாகாணங்கள் ஒரு உணர்வு நிலையில் ஒன்றிணைவதற்கு வடக்கு கிழக்கில் தமிழ் பேசும் தரப்பு ஆட்சியைக் கைப்பற்றுவது இன்றியமையாத ஒன்றாகும். ஆனால், தனிப்பட்ட பதவிகளும் அதிகாரங்களும் அதனால் கிடைக்கும் நன்மைகளும் சலுகைகளும் இதற்கு இடம்கொடாது.

மூவினத்தவரும் செறிவாக வாழும் கிழக்கு மாகாணத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கு தமிழ் மக்கள் வழங்கியுள்ள ஆதரவை வைத்துக் கணிப்பிடும் போது வடமாகாண சபைக்கான தேர்தலில் கூட்டமைப்பே அதிக ஆசனங்களைப் பெறும் என்பதை எதிர்வுகூறக் கூடியதாகவுள்ளது.

இந்நிலையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கு பொறுப்புக்கள் அதிகரித்துள்ளன. தமிழ் மக்களின் அரசியல் தீர்வுக்கான நகர்வுகளை தீவிரப்படுத்துவது மட்டுமல்லாமல், தமிழர்களின் நிலங்கள் அபகரிக்கப்படுவதைத் தடுப்பதற்கும் பல போராட்டங்களை அர்ப்பணிப்புடன் முன்னெடுக்க வேண்டிய கடமையினை தமிழ் மக்கள் அவர்களிடம் சுமத்தியுள்ளனர்.

கோவிலில் தேங்காய் உடைக்கும் போராட்டங்களை விடுத்து, உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் என்னென்ன காரியங்களை மேற்கொள்ள வேண்டும் என்பது குறித்த சரியான திட்டங்களை வகுத்து செயற்பட வேண்டும். கூட்டமைப்பினர் மக்களுக்காக அதிக அர்ப்பணிப்புகளை மேற்கொள்ள வேண்டிய முக்கிய காலகட்டம் ஒன்றிற்குள் பிரவேசிக்கின்றனர் என்பதை உணர்ந்து செயற்பட வேண்டும்.

# கூட்டமைப்புடன் - மு.காங்கிரஸ் இணையுமா?



உள்நாட்டிலும், சர்வதேசத்தாலும் பரபரப்பாக உற்றுநோக்கப்பட்ட கிழக்கு மாகாணசபைத் தேர்தல் முடிவுகள் ஞாயிறு அதிகாலையில் முழுவதுமாக வெளிவந்த நிலையில், முடிவுகள் ஓரளவுக்கு எதிர்பார்க்கப்பட்டதே.

ஐ.ம.சு.மு. 14 ஆசனங்களையும், தமிழ் தேசியக் கூட்டமைப்பு 11 ஆசனங்களையும், முஸ்லிம் காங்கிரஸ் 7 ஆசனங்களையும், ஐக்கிய தேசியக் கட்சி 4 ஆசனங்களையும், விமல்வீரவன்ச தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி 1 ஆசனத்தையும் பெற்றுள்ளன.

இதனடிப்படையில் ஆளும் ஐக்கிய சுதந்திர முன்னணியே கிழக்கில் ஆட்சியமைக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. ஐக்கிய சுதந்திர முன்னணியின் ஆசனங்களுடன் முஸ்லிம் காங்கிரசின் ஆதரவும் சேரும் போது இது சாத்தியமாகும். ஆனால் கூட்டமைப்பு, முஸ்லிம் காங்கிரஸ், ஐக்கிய தேசியக் கட்சி என்பன இணைந்தால் இதனைத்தடுக்க முடியும். அவ்வாறு நடைபெறுமா என்பது தான் கேள்வி.

கிழக்கு மாகாணசபைத் தேர்தல் குறித்து அரசாங்கம் அறிவித்த உடன் தமிழ் கூட்டமைப்பும் கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் என்று கூட்டமைப்பு கடந்த மே மாதமே அறிவித்தது. அன்று முதல் கூட்டமைப்புடன் மு.கா. இணைய வேண்டும் என்பதை கூட்டமைப்பின் தலைவர் திரு.இரா சம்பந்தன் சகல தேர்தல் மேடைகளிலும் கூறி வந்தார். மு.கா. கூட்டுச் சேர வேண்டும் என்ற கருத்து கிழக்கு மாகாணம் முழுவதும் தமிழ், முஸ்லிம் பகுதிகளிலும் வலுப்பெற்று வருகின்றது. மட்டக்களப்பு நகரில் 12.08.2012 அன்று மாலை மக்கள் மத்தியில் உரையாற்றிய சம்பந்தன் கூட்டமைப்பு மு.கா.வுடன் தான் கூட்டுச்சேரும் என்று பகிரங்கமாக அடித்துக் கூறினார். ஆனால், கூட்டமைப்பு பகிரங்கமாகவே அறைகூவல் விடுத்தும் ஹக்கீம் எதுவுமே சொல்லாமல் மௌனமாகவே இருந்து வருகின்றார். இதேநேரம் மு.கா. தனியாக வேட்பு மனுத்தாக்கல் செய்தவுடன் ஊடகத்திற்கு கருத்துத் தெரிவித்த ஹக்கீம் மு.கா. தேர்தலின் பின்பு அரசுடன்தான் கூட்டுச் சேரும் என்று திட்டவட்டமாகத் தெரிவித்தார். ஆக மொத்தத்தில் ஹக்கீம் அரசுடன் இணைவதில்தான் குறியாகவுள்ளார். கூட்டமைப்புடன் கூட்டுச் சேர வேண்டும் என்பதில் மு.கா. செயலாளர் நாயகம் ஹசன் அலி எம்.பி முன்னாள் மாகாணசபை உறுப்பினர் பொத்துவில் மஜீட், கல்முனை மாநகர பிரதி மேயர் நிஸாம் காரியப்பர் ஆகியோர் குறியாகவுள்ளதாக அறியப்படுகின்றது. ஆனால், கூட்டமைப்புடன் இணைவதைத் தவிர்த்து அரசுடன் இணைவதையே ஹக்கீம் பெரிதும் விரும்புகின்றார்.

கூட்டமைப்பினர் தங்களது சகல தேர்தல் மேடைகளிலும் முஸ்லிம்களைக் கௌரவப்படுத்தியும் மு.கா. கூட்டமைப்புடன் இணைய வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்தும்தான் பேசி வந்துள்ளனர். அரசு தவிர்ந்த ஏனைய சகல மட்டங்களாலும் கூட்டமைப்புடன் மு.கா. இணைய வேண்டும் என்ற கோரிக்கை மேலும் [illegible] வருகின்றது. இந்த இறுக்கத்தை உடைப்பதற்காக கடந்தவாரம் ஹக்கீம் அட்டாளைச்சேனை பாலமுனையில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் ஒரு கபடத்தனத்தை திறந்து விட்டார். அதாவது முஸ்லிம்களின் தேசியத்தை மறைத்துப் பேசும் கபடத்தனத்தை தமிழ்த் தேசியம் கைவிட வேண்டும் என்றும், முஸ்லிம்களின் தேசிய உணர்வு தொடர்பான விடயங்களில் ஆளும் தரப்பைப் போலவே தமிழ்த் தரப்பினரும் பெரியளவான அங்கீகாரத்தை வழங்கத் தயாராக இல்லை என்றும் ஹக்கீம் தெரிவித்தார். வட, கிழக்கில் அமையப் போகும் தீர்வில் முஸ்லிம்களும் உள்ளடக்கப்பட்டு அவர்களும் விரும்பக்கூடிய தீர்மானம் தான் முன்வைக்கப்படுமென்று சம்பந்தன் பல தடவைகள் பகிரங்கமாகத் தெரிவித்து வருகின்றார். இந்த நிலையில்தான் ஹக்கீம் வேண்டுமென்றே தமிழ் தேசியக் கூட்டமைப்பு மீது முஸ்லிம்களை பகைமையாக்குவதற்காக, கூட்டமைப்புடன் இணைவதை தவிர்த்துக் கொள்வதற்காக அவரது கபடத்தனத்தை கட்டவிழ்த்து விட்டுள்ளார்.

அதாவது கூட்டமைப்புடன் மு.கா கூட்டுச்சேருமாயின் எந்த விட்டுக் கொடுப்புக்கும் கூட்டமைப்பு தயார் என்று பகிரங்கமாகவே கூட்டமைப்பு சொல்லிவிட்டது. இதற்கு மேலும் ஹக்கீம் என்ன எதிர்பார்க்கின்றார்?

கூட்டமைப்புக்கு அரசாங்கத்தின் வளங்கள் போன்று அங்கு எவ்விதமான வளங்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடையாது. வரண்ட பிரதேசம் போன்றதுதான் கூட்டமைப்பு. இந்த வரண்ட பிரதேசத்துடன் மு.கா இணைந்து என்ன பலன் என்று ஹக்கீம் நினைக்கலாம். ஆனால் அங்குதான் எம்மக்களின் உரிமைக் குரல் உள்ளது. நமது இருப்பிடம் உள்ளது. நமது சுய உரிமை நமது பாதுகாப்பு மறைந்து கிடக்கின்றது. கூட்டமைப்புடன் இணைவதன் மூலம்தான் முஸ்லிம்களின் இருப்பிடத்திற்கான பாதுகாப்பு உள்ளது என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

சில கொள்கைகளை எப்போதும் வைத்திருக்க முடியாது. அந்த வகையில் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள காலங்களில் தமிழ்க் கூட்டமைப்பு முஸ்லிம்கள் பற்றி எதுவும் சொல்லவில்லை, தெரிவிக்கவில்லை என்று ஹக்கீம் அடிக்கடி மேடைகளில் தெரிவித்து வருகின்றார். அப்போதைய நிலைமை வேறு இப்போதைய நிலைமை வேறு என்பதையும் மு.கா வுக்குத் தெரியாதா? புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் ஹக்கீம் வன்னி சென்று சந்திக்க வில்லையா? அப்படியானால் தமிழர்களின் பிரதிநிதிகளுடன் பேசுவதற்கு ஏன் தயங்க வேண்டும்? ஏன் தவிர்க்க வேண்டும்? இதில் அரசியல் உள்நோக்கமும், சுயநலமும் உள்ளது.

கூட்டமைப்புடன் கிழக்கில் இணைந்து ஆட்சியமைப்பதற்கு ஐ.தே.க பகிரங்கமாகவும், தேர்தலுக்கு முன்னரே பேசி வந்தது. தனக்கு முதலமைச்சர் பதவி கிடைக்காது என்றால் வேறு யாருக்கும் கிடைக்கக் கூடாது என்று ஹக்கீம் நினைக்கின்றார் போல உள்ளது. ஏனெனில் ஹக்கீம் அரச தரப்போடு பேச்சுவார்த்தை நடாத்திய போது முஸ்லிம் முதலமைச்சர் விடயம் பற்றி எதுவுமே பேசவில்லையென்று அமைச்சர்களான ரிஷாட் பதியுத்தீன், ஹிஸ்புல்லா ஆகியோர்கள் பகிரங்கமாகவே தெரிவித்திருக்கின்றனர்.

இதே நேரம், கூட்டமைப்பும் மு.கா வுக்கு முதலமைச்சர் வழங்குவதில் எவ்விதமான ஆட்சேபனையும் இல்லையென்று தெரிவிக்கின்றது. தற்போதைய நிலையில் மு.கா கூட்டமைப்புடன் இணைந்து ஆட்சியமைத்தால் மு.கா வுக்கும் அரச தரப்புக்கும் விரிசல் ஏற்படலாம். அதனால் ஹக்கீம் தனது நீதி அமைச்சர் பதவியை இழக்க வேண்டிய நிலை ஏற்படலாம். ஹக்கீம் தனது அமைச்சர் பதவியை விட்டு விலகுவதை தனது அரசியல் தற்கொலையாக நினைக்கலாம். மு.கா. அணியிலுள்ள யாரோ ஒருவருக்கு முதலமைச்சர் பதவியை பெற்றுக் கொடுத்து விட்டு வெறும் எம்பியாக இருப்பது என்பது கஷ்டமானது என்று ஹக்கீம் நினைக்கலாம். அதனால் தான் கூட்டமைப்பு தானாகவே முஸ்லிம் முதலமைச்சர் பதவி தருகின்றோம் என்று பகிரங்கமாக அழைத்த போதும் மௌனம் சாதித்து வருகின்றார்.

கூட்டமைப்பை விலக்கி விட்டு ஹக்கீம் அரசு பக்கம் சாய்ந்தாலும் அங்கும் முதலமைச்சர் தனக்கு இல்லாமல் வேறு ஒருவருக்கு மு.கா அணியில் போவதை விரும்பமாட்டார். ஆனால் அங்கும் மு.கா வுக்கு முதலமைச்சர் வேண்டும் என்று கேட்கமாட்டார். இம்முறை மு.கா ஆட்சிப் பங்காளியாக மாறி முஸ்லிம் முதலமைச்சர் பெற்று விடுவோம் 2012ல் முஸ்லிம்களின் அரசியல் அந்தஸ்து உயரும் என்று கடந்த 3 மாதத்திற்கு முன்பே அஷ்ரப்பின் போட்டோவுடன் கிழக்கு மாகாணம் முழுவதும் போஸ்டர் ஒட்டி விட்டு மு.கா. எப்படி முஸ்லிம் முதலமைச்சர் விடயத்தில் தட்டிக் கழிப்பது மு.கா கட்டுக்குள்ளே முரண்பாடுகள் உருவாகலாம். ஹக்கீம் மு.கா.வுக்கு முதலமைச்சர் பதவி வேண்டாம என்றோ அல்லது முதலமைச்சர் பற்றிய பேரம் அரசு பக்கம் பண்ணாமல் விட்டாலே முஸ்லிம் ஒருவருக்குத் தான் முஸ்லிம் முதலமைச்சர் வழங்கப்பட வேண்டும் என்று ஜனாதிபதி விரும்பினால் அது ஓட்டமாவடி முன்னாள் அமைச்சர் அமீர் அலிக்கே அந்த வாய்ப்பு போய்ச்சேரும் என்று அறியப்படுகின்றது.

மு.கா.வுக்குள் வேறு யாருக்காவது முஸ்லிம் முதலமைச்சர் பதவி சென்றடையுமானால் அது ஹக்கீமின் தலைமைத்துவத்திற்கு பெரும் சவாலாகவும், ஆபத்தாக முடியலாம் என்று ஹக்கீம் நினைக்கின்றாராம். ஏற்கனவே மஹிந்த அரசினால் இரண்டு முழு அமைச்சும் இரண்டு பிரதி அமைச்சும் வழங்க இருந்த போது தனக்கு மட்டும் ஒரு முழு அமைச்சும் பஷீர் சேகுதாவூத்துக்கு அரை அமைச்சும் போதும் என்று சொல்லப்பட்டதாகவும் கதையொன்று உள்ளது. அதனால் ஹக்கீம் கூட்டமைப்பு பக்கமாகவோ அல்லது அரசு பக்கமாகவோ மு.கா.வுக்கு முதலமைச்சர் கேட்கமாட்டார் என்று அடித்துக் கூறினார் பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லா. அதனால்தான் கூட்டமைப்பு பகிரங்கமாக அழைத்தும் கூட அரசு பக்கம் சாய்வதற்காக மௌனம் காத்து வருகின்றார்.

மு.கா. தலைமைகள் எப்போதும் ஆட்சி அதிகாரங்களுடன் அமைச்சுப் பதவியை அதிகம் விரும்புகின்றார்கள். காலம் சென்ற ஜனாதிபதி பிரேமதாஸ ஆட்சிக் காலத்தில் காலம் சென்ற அஷ்ரப்புக்கும் சேகு இஸ்ஸதீனுக்கும் முறுகல் ஏற்பட்டது. அந்த முறுகல்தான் இருவரும் இரு துருவம் ஆனதற்கு வித்திட்டது. அஷ்ரப் பிரேமதாஸ ஆட்சிக் காலத்தில் கல்வி அமைச்சர் பதவி பெறுவதற்கு ஆசைப்பட்டார். ஆனால் அந்த எண்ணத்தை சேகு இஸ்ஸதீன் அடியோடு வேண்டாம் என்றார். அப்படியொரு நிலைதான் இன்று ஹக்கீமுக்கும் ஏற்பட்டுள்ளது. இந்த விடயத்தில் ஹக்கீமுடன் ஹஸன் அலி முரண்படுகின்றார்.

இப்பொழுது ஹக்கீம் தனது சமூகமா அல்லது தனது பதவியா என்று சிந்திக்க வேண்டிய காலகட்டமிது. இந்த அரசு வடக்கு கிழக்கில் தமிழ், முஸ்லிம் சமூகங்களை சிறுபான்மை இனமாக்குவதற்காக திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை செய்து வருகின்றது. அம்பாறையில் சிங்களவர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் இடையில் 6 ஆயிரம் வாக்குகள் தான் முஸ்லிம்களின் வாக்குகள் அதிகமாகவுள்ளது. இன்னும் 2 - 3 வருடத்தின் பின்பு அம்பாறையில் 6 ஆயிரம் வாக்குகள் சிங்களவர்களின் வாக்குகளாக அதிகரித்துக் காணப்படும். அம்பாறை முஸ்லிம்களின் மாவட்டம், அங்கு முஸ்லிம்கள் அதிகம், எங்களுக்கு முஸ்லிம் முதலமைச்சர் வேண்டும் என்று மு.கா. மார்தட்ட முடியாது. மாறாக அடுத்த மாகாணசபைத் தேர்தலின் போது சிங்கள முதலமைச்சர் வந்து விடுவார். இறக்காமம் எல்லை, தீகவாவி எல்லை, பாணமை எல்லை ஆகிய எல்லைக் கிராமங்களுடன் லகுகலை ஹிங்குரானை, உகனை, நாமனை, பதியத்தலாவை, சிபம்பலாந்துவை ஆகிய சிங்களப் பகுதிகளில் தென்பகுதியைச் சேர்ந்த சிங்களவர்கள் பெருமளவு குடியேற்றப்பட்டு வருகின்றார்கள். மற்றும் திருமலையிலும் கந்தளாய், வானலை, புல்மோட்டை, திருமலை, தம்பலகமம், ஹபரனை எல்லைப் பகுதி 5ஆம் கட்டை, மிக விரைவில் குடியேற்றத்திட்டமிட்டுள்ள மூதூர் 5ஆம் கட்டை, கிண்ணியா, கண்டலடி ஆகிய பகுதிகளிலும் மற்றும் வடக்கு கிழக்கில் சீனாவின் உதவியுடன் ராணுவக் குடியிருப்புக்கள் என இரண்டு இனங்களினது விகிதாசார எண்ணிக்கையை குறைப்பதற்காக சிங்கள குடியேற்றங்களை ஏற்படுத்தி சிறுபான்மையினமாக்குவதற்கு பாரிய முன்னெடுப்புக்கள் செய்யப்பட்டு வருகின்றன. இவற்றைத் தடுக்க வேண்டுமானால் முஸ்லிம்கள் கூட்டமைப்புடன் இணைந்து செயற்பட வேண்டும்.



– அட்டாளைச்சேனை எம்.எம்.நிஸாம்டீன் –

முஸ்லிம் சமூகத்தின் நன்மை கருதியும், அவர்களின் எதிர்கால சந்ததியினரின் நன்மை கருதியும், முஸ்லிம்களின் இருப்பிடத்தை தக்க வைத்துக் கொள்வதற்காகவுமான மு.கா.வின் பாரிய பொறுப்பும் சுமையும் ஹக்கீமுக்கு ஏற்பட்டுள்ளது. காலத்தின் தேவையிது. முட்டி மோதி வாக்களிப்பது மட்டும் முஸ்லிம்களின் பொறுப்பாக அமையாது. அரசுடன் மு.கா. இணைவது என்பது பாரிய படுபாதகத்தை தாங்களே தங்களுக்குச் செய்தது போன்று ஆகிவிடும்.

தந்தை செல்வாவுக்குப் பின்பு சம்பந்தன் அவர்கள் நேர்மையான தலைவராக எல்லோராலும் மதிக்கப்படுகின்றார். கிடைக்கவிருக்கும் தீர்வில் முஸ்லிம்களும் ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வாகவே இருக்கும் என்றும் சொல்கின்றார். தமிழ், முஸ்லிம் இன உறவுக்காக எந்த விட்டுக்கொடுப்புக்கும் கூட்டமைப்பு தயார் என்கின்றார். சம்பந்தன் காலத்திற்குள்ளே முஸ்லிம்கள் நல்ல தீர்வை பெற்றுக் கொள்ள வேண்டும். அது ஜின்னா, காந்தி போன்று அமைய வேண்டும். தற்போதைய கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் அவர்கள் செயலாளர் மாவை சேனாதிராஜா ஆகியோரின் காலத்திற்குள் இணக்கத்துடன் செயற்பட்டு முஸ்லிம்கள் எதையும் பெற்றுக் கொள்ள வேண்டும்.

நாங்கள் ஒரு சிறுபான்மை இனம், நாங்கள் சுய உரிமைக்காக நீண்டகாலமாக போராடி வருகின்றோம். அப்படிப்பட்ட நாங்கள் இன்னுமொரு இனத்தின் உரிமைகளை பறிக்கும் முயற்சிகளில் ஈடுபட மாட்டோம் என்று திட்டவட்டமாக கூட்டமைப்பு சொல்கின்றது. இதற்கு மேலும் மு.கா. கூட்டமைப்பை சந்தேகக் கண்கொண்டு பார்ப்பது எந்த வகையில் நியாயமானது?.

வேண்டாம் என்றவனுக்கு கை பட்டாலும் குற்றம் கால் பட்டாலும் குற்றம் என்பது போல்தான் மு.கா. கூட்டமைப்புடன் நடந்து கொள்கின்றது. கெஞ்சினால் மிஞ்சுவார்கள், மிஞ்சினால் கெஞ்சுவார்கள் என்ற நிலைமைக்கு மு.கா. வந்துவிடக் கூடாது.

இது முஸ்லிம் மக்களின் உரிமை சம்பந்தப்பட்டது. முஸ்லிம்களின் மார்க்கம், இருப்பிடம் சம்பந்தப்பட்டது. மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு என்பதுடன் மு.கா.காரர்களின் நாவிலுள்ள மறைந்த தலைவர் அஷ்ரப்பின் வார்த்தைகளில் ஒன்றான 'சரியான நேரத்தில் எடுக்கப்படும் சரியான முடிவுகள் தான் சரியானவை, சரியான நேரத்தில் எடுக்கப்படும்"பிழையான முடிவுகளும், பிழையான நேரத்தில் எடுக்கப்படும் சரியான முடிவுகளும் கூட பிழையானவை தான்' என்ற வார்த்தையினை இங்கு நினைவுபடுத்த வேண்டியுள்ளது.

தேர்தல் முடிவுகள் முழுவதுமாக வெளியான தருணத்தில் எழுதப்பட்ட கட்டுரை இது. இக்கட்டுரை வெளியாகும் போது முடிவுகள் நல்லதாக இருப்பின் வரவேற்கத்தக்கதே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# விழிப்பு

மழை லேசாகத் தூறிக் கொண்டிருந்தது. குடையைப் பிடித்த வண்ணம் வீதியில் இறங்கிய பண்டிதர் தொலைவிலே தெரிந்த கடையைப் பார்த்தார்.

வழக்கம் போல காலைநேரச் சுறுசுறுப்பு கடையில் தெரிந்தது. இரவு பெய்த கடும்மழையிலும் கூட இத்தனை சனம் வந்து போவதென்பது ஒன்றும் புதினமல்ல. அந்தக் கடையை விட்டால் அடுத்த கடைக்கு குறைந்தது ஒரு மைலாவது போக வேண்டும். அந்த ஊர்மக்களது அன்றாட தேவைகளுக்கு அந்தக் கடை தினமும் அவசியம். காலையில் பாலுக்கும், பத்திரிகைகளுக்கும் என்று சனம் முட்டிமோதும். அளவுக்கதிகமான கூட்டம் வருகிறபோது கடைமுதலாளி குலம் படும்பாட்டைப் பார்க்க வேண்டுமே, பாவமாயிருக்கும்! வந்தவர்களையெல்லாம் கவனிக்க வேண்டும். அதுவும் விரைவாக என்றால் அவரால் முடியாது. பதட்டத்தில் அவருடைய கை, கால்கள் உதறும். பத்து வருடங்களுக்கு மேலாகக் கடை நடத்தினும் கூட கணக்குப் பார்ப்பதில் கொஞ்சம் மந்தம்தான்.

அண்மைக்காலமாக குலத்திற்கு பெரிய ஆறுதல் கிடைத்திருக்கிறது.

"இந்தப் பெரிய கடையை எப்படி சமாளிக்கிறியள் கூட ஒரு பொடியனை வச்சிருந்தா நல்லதே வியாபாரமும் எழும்பும்." பலர் இதுபோல் சொல்லி வந்திருக்கிறார்கள். ஆனால் குலம் அதை ஒரு காதால் வாங்கி மறுகாதால் விட்டுவிடுவார். அவருடைய கருமித்தனம் அதற்கு இடங்கொடுக்கவில்லை.

"வாற லாபமே எனக்குப் போதாது. அதுக்க இன்னொருத்தனுக்கு குடுக்கிறதென்டால்"

நெருக்கமானவர்கள் சிலரிடம் சொல்லியிருக்கிறார்.

இப்போது கடையிலே ஒரு பொடியன் நிற்கிறான்.

"யாரு அந்தப் பொடி குலத்தின்ர கடையில நிக்கிறது" பண்டிதர் சிலரின் வாயைக் கிளறிப் பார்த்தார்.

"யாரோ ஒண்டு பாவம் சின்னப்பொடி. குலத்துக்கு நல்ல உதவி" பண்டிதர் கடைக்கு வரும் பொழுதுகளில் அந்தப் பொடியனைக் கவனிப்பார். அவனுடைய சுறுசுறுப்பும் கணக்குப் பார்க்கும் வேகமும் அவருக்கு மிகவும் பிடித்துப்போனது.

"ரவி அந்த அரிசியக் காட்டு..." "அந்த ஐயாவுக்கு பேப்பரக் குடு..."

முதலாளி குலத்தின் கட்டளைகளை அவன் நிறைவேற்றுவதில் தான் எத்தனை நேர்த்தி!

பண்டிதர் மெதுவாகக் கடையை நோக்கி நடந்தார். தூரத்திலேயே அவரை அவன் கண்டிருக்க வேண்டும். அவருக்குரிய பத்திரிகையை தயாராக மடித்து வைத்திருந்தான்.

"இந்தாங்கோ உங்கட பேப்பர்"

பேப்பரை வாங்கிய போது அவன் கண்களைப் பார்த்தார். பள்ளிக்கூடம் போகின்ற வயதில் கடையிலே நிற்பதை எண்ணி ஏங்குவது போல ஒரு பிரமை.

கடைக்கு ஆட்கள் வந்து கொண்டேயிருக்கிறார்கள். "அதை எடு, இதை எடு" என்ற குலத்தின் சொற்கள் கடும்தொனியில் வந்து கொண்டிருக்கின்றன. பொடியனுக்கோ ஓய்வில்லை.

"இவனுக்கென்ன சும்மா ஒரு கொஞ்சக் காசைக் குடுத்து அவனை வேலை வாங்குறான். நாசமாய் போவான்" மனதுக்குள் திட்டியவாறாக வீட்டை நோக்கி நடந்தார்.

காரைநகரை பிறப்பிடமாகக் கொண்ட பண்டிதர் இந்த ஊருக்கு வந்து இப்போது பத்துப் பதினைந்து வருடங்களாகி விட்டன. சொந்த ஊரிலே அவர் முன்பு ஆசிரியராக இருந்தவர். சைவமும் தமிழும் நன்கு கற்றவர். அதனால் பெரியதம்பிப்பிள்ளை என்ற அவருடைய பெயர் பண்டிதர் பெரியதம்பிப்பிள்ளையாக இருந்து பிறகு வெறும் பண்டிதர் என்றாகிவிட்டது. சொந்த ஊரிலே அவருக்கிருந்த மதிப்பும், மரியாதையும் இங்கேயும் அவருக்குக் கிடைத்தன. சண்டைகள், இடம்பெயர்வுகள் என்று அல்லாடி அவர் இந்த ஊருக்கு வந்த போது அவரை ஊர்ப் பெரியவர்களில் ஒருவராகவே ஏற்றுக் கொள்ள நீண்ட காலம் ஆகவில்லை.

பண்டிதரின் நடை, உடை, பாவனைகள் அத்தகையன. பண்டிதருக்கு மூன்று ஆண், ஒரு பெண் என்று நாலு பிள்ளைகள்.



பிள்ளைகளில் ஆண்கள் எல்லோரும் வெளிநாட்டில் மகளுக்கு போன வருடம் தான் திருமணம் செய்து கனடாவிற்கு அனுப்பி வைத்தார். வீட்டில் தற்பொழுது அவரும் மனைவியும் தான் மகனின் "ஸ்பொன்சரை" எதிர்பார்த்தபடி.

வீடு வந்து சேர்ந்த பின்பும் கூட கடையில் அந்தச் சிறுவ படும்பாடு முள்ளாய் உறுத்தியது.

"ஏதாவது வழி கண்டாக வேண்டும்" எண்ணத்தில் எதுவுமே புலப்படவில்லை. மனத்தை ஒருமுகப்படுத்திவிட்டு பத்திரிகையில் மூழ்கினார். திடீரென ஒரு ஆச்சரியம்.

"சிறுவர்களை வேலைக்கமர்த்துவோர் மீது சட்ட நடவடிக்கை" என்ற செய்தியொன்று ஐந்தாம் பக்கத்தில் பிரசுரமாகியிருக்க அதை ஆழ்ந்து கவனமாக வாசித்தார்.

பதினான்கு வயதுக்குட்பட்ட சிறுவர்களை வேலைகளில் ஈடுபடுத்துவது சட்டவிரோதமென்றும், மீறினால் நடவடிக்கை எடுக்க பல அமைப்புகள் முன்வந்திருக்கின்றன என்பதும் விளங்கியது.

"இன்று இதற்கு ஒரு முடிவு கட்டியாக வேண்டும்" திடமான முடிவோடு பத்திரிகையை மடித்து வைத்தார்.

பிள்ளையார் கோவிலுக்குப் பக்கத்தில் இருக்கும் வில்வமரத்தடியில் மாலைநேரங்களில் ஓர் கூட்டம் கூடுவதுண்டு. ஊர்ப் பெரிய மனிதர்கள் என்ற கணக்கில் பலர் கூடி ஊர்ப் புதினங்களையெல்லாம் அலசுவார்கள். அதில் பண்டிதரும் ஒருத்தர். இன்று அங்கே கதைக்க பண்டிதருக்கு ஒரு விடயம் கிடைத்துவிட்டது.

மாலையில் வானம் மப்பும் மந்தாரமுமாக இருந்தது. கோயில் குருக்கள், சிவசாமி வாத்தியார் மற்றும் சிலர் மட்டும்தான். செருமியபடியே பண்டிதர் விஷயத்தைப் போட்டுடைத்தார். தொடர்ந்து மூன்றுநாள் கூட்டத்திற்கு இந்த விஷயம் தான் அவலானது.

"அதென்னண்டு சின்னப் பொடியனை வேல வாங்குறது" பண்டிதர் பக்கந்தான் அனைவரும். அடிக்கடி சில புதுப்புதுச் செய்திகளும் வந்தவண்ணமிருந்தன.

போஸ்ட் பீயோன், உவன் சிவத்தான் மத்தியானம் போனவனாம். குலம் பொடியனைப் போட்டு அடிச்சுக் கொண்டிருந்தானாம். பொடியனுக்கு ஐந்நூறு தான் மாதம் சம்பளமாம். பாவி... நல்லாப் போட்டு வாட்டுறான்.

பதிமூன்று வயசுப் பொடியனாம். தகப்பன் சுனாமியில போட்டுதாம். ஆளாளுக்கு கவலைப்பட்டுக் கொண்டார்கள். பண்டிதர் முடிவாய் சொன்னார்.

"பதினான்கு வயசுக்குள்ள இருக்கிற பொடியனுக்கு அநியாயம் நடக்கேக்க சும்மா விடேலாது. ஏதாவது செய்வம்" அனைவரும் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினார்கள்.

ஒரு கிழமையாக குலத்தின் கடை பூட்டப்பட்டுக் கிடக்கிறது. "யாரோ மனித உரிமை ஆணைக்குழுவாம் பொலிஸாம் வந்து சீல் வச்சிட்டாங்கள்" என்று சனம் பேசிக் கொண்டது. சாமான் வாங்க சனங்கள் தொலைதூரம் போய் வந்தார்கள்.

குலத்தையும் காணவில்லை. வந்தவர்கள் பிடிச்சுக் கொண்டு போனதாக கண்டவர்கள் யாரோ சொன்னார்கள். சின்னப்பொடியன் ரவியையும் காணவில்லை. காலை நேரங்களில் பள்ளிச் சீருடையோடு போகும் பையன்களில் பண்டிதர் ரவியைத் தேடினார். அவன் இல்லை.

வழக்கம் போல மாலை நேரங்களில் கூட்டம் கூடும். ஏதோ ஒரு நற்செயல் செய்த திருப்தி எல்லோர் முகங்களிலும்.

ஒருநாள் மாலை மங்கி இருள் கவிழும் நேரம். கூட்டம் முடியும் நேரம். கோயில் வாசலில் நின்ற பொடியனை பண்டிதர் அடையாளம் கண்டுவிட்டார்.

"ரவி" கூவினார். ஓடி வந்தான். அவன் கண்கள் இரண்டும் கலங்கியிருந்தன.

"பண்டிதரையா ஏன் கடையை மூடினவங்கள். எனக்கு வேலை போச்சே..." அழுதான்.

"தம்பி இப்ப உனக்கு படிக்கிற காலம். இப்ப படி. பிறகு வேலை தேடலாம். அவன் குறுக்கிட்டான்."

"ஐயா வீட்டில அம்மாவும் மூண்டு சின்னத்தம்பி, தங்கச்சிகளும்... நான் படிச்சா... சாப்பிடக் காசுக்கென்ன செய்யிறது? ஏதும் வேலை இருந்தா சொல்லுங்கையா..." விம்மினான்.

"தம்பி நாங்கள் எல்லாம் சேர்ந்து உனக்கு காசுதருவம். நீ படி. அம்மாவுக்கும் குடு என்ன, ஓமெண்டு சொல்லு" என்றவாறாக அவனை தன்னோடு அணைத்துக் கொண்ட குருக்கள் ஆதரவு திரட்டுமுகமாக பண்டிதரைப் பார்த்தார்.


"ஓமோம். வாற கிழமை மட்டில மகன் கூப்பிடுவான் போல கிடக்கு. நானில்லாட்டியுமென்ன நீங்கள் செய்வியள் தானே" என்றார் தலை நிமிர்ந்து உற்சாகமாக. எங்கு சென்றாலும் சின்னப் பொடியனின்ர படிப்புக்கு உதவ வேண்டும் என்பதை அவரின் பார்வை உணர்த்தியது.

**ச.சோ.பதந்தன்**
**கொக்குவில்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைப்புனல்


## நேர்மையான தேர்தலுக்கு உதவுங்கள்




தேர்தல் சட்ட திட்டங்களை
மீறுவது
சிறந்த செயற்பாடல்ல!
பார்வையாளர்கள் உண்மைக்கு
புறம்பான
பங்காளிகள் அல்ல!
அரசியலில் ஜனநாயகம்
அசிங்கப்படுத்தப்படுவது
எந்த வகையிலும் அழகல்ல!
கொள்கைகளைப் பரப்பி
குறைகூறுவதை
நிறுத்தி
வேட்பாளர்கள் வெற்றி
சூடுவதே உண்மை வெற்றி!

கவிக்குயிலன்
சேனையூர் - 06.

## மரணத்திற்கொரு மனு



எத்தனை முறை மனுக்கொடுத்தேன்?
ஏன்? அதை ஒருமுறை கூட
பரிசீலனை செய்யவில்லை?

அப்படியென்ன கேட்டுவிட்டேன்?
பணமா?
பொருளா?
பண்டமா?

இல்லை...
எனது உயிருக்கு
ஒரு பாசக்கயிறு மட்டுமே!

மரணமே!
மறக்காமல் மறுமுறை பரிசீலனைசெய்!
மரணம் வேண்டி நான் கொடுத்த
மனுவை.

- த. செல்வராணி
விநாயகபுரம் - 02
திருக்கோவில்

## புதுக்குடியிருப்புக்கு...



செம்மண் புழுதிகள்
வாரியடித்திட
மீள்குடியமர்வுக்காய்...

விளைச்சல் தந்த
தென்னைமரங்கள்
இன்று
கொட்டுக் காகங்களின்
இருப்பிடங்களாயிற்று.

கும்பிட்ட ஆலயங்களின்
சூழல்
முட்புதர்களின்
வாழ்விடங்களாயிற்று.

கொக்குகளும்
மணிப்புறாக்களும்
பறந்து திரிந்த
வயல் வெளிகள்
இன்று
ஆட்காட்டிகளினதும்
உடலைக் குருவிகளினதும்
பிரசன்னமாயிற்று.

பந்தடித்து
விளையாடி மகிழ்ந்த
திடலில்
சிவத்தப் பலகையின்
எச்சரிக்கை...

என் ஊரின்
தெருக்களில்
நடந்து
செல்கின்றேன்.
ஏதேதோ
நினைவுகள்
என்னைக் கடந்து
செல்கின்றன.

முல்லைமதியன்

## யாரவள்

தாவணி சொர்க்கங்கள்
நடமாடும் சாலையில்
யாரவள் என் கண்களை
மட்டுமல்ல இதயத்தையும்
திருடிச் செல்பவள்...
அமாவாசை அற்ற என்
பௌர்ணமி ராத்திரிகளில்
தினம் தினம் வலம் வரும்
என் கனவுத் தேவதை
அன்று உயிர்வரை ஊடல்
செய்து உணர்வுகளுள்
பூப்பறித்து சென்றவள்
இன்று நினைவுகளை
பரிசளித்து நிஜங்களில்
உறவாட அழைக்கிறாள்...



பிரியா
கொக்குவில் மேற்கு.

## சாதனைப் பெண்



முடியும்
என்பதை நெருப்பாய்க் கொள்!
துணிந்துவா
சாதனைகளால்
அசிவதை நிறுத்தி

வீரத்துக்கு
பெயர் போனவர்கள் - பெண்கள்
என்ற காலமும்
வந்துவிட்டது
சோதனைகளைத் தாண்டி
விரைவாய் வந்துவிடு

உலக
ஆட்சியில் காலடித்து
விண்வெளியிலும் பறந்தவர்களே!
புனிதமானவர்கள் நீங்கள்
என்று சொல்பவர்கள்தான்
கோழைகள்.

பெண்ணே
உரிமைக்காக குரல்
கொடுக்கால் உலகத்தை
அறிவால் வென்று சாதிக்க வா!

தெரிந்து செய்தால் தண்டனை
தெரியாமல் செய்தால் மன்னிப்பு.

காலம் மாறும் போது
நமக்கும் மாறுகிறது.

கூட்டாகக் கழித்ததும்
கொடுத்ததும் சிரித்ததும்
நடைமுறைமாறி
தடம் மாறிவிட்டது.
அதிகாரி ஆணையிட்டு
இறைக்கிறதுண்டைக் காட்டினால்
தெரு நாய்களும்
வீட்டு நாய்களும்
வாலாட்டி
சலாம் போடும்
காலைந்து நேரந்து
உறங்கி விழிக்கும்
சமுதாயமே
உண்மைகள்
எங்கே இருக்கின்றன...?
உங்கள்
மனச்சாட்சிக்குத்தான் தெரியும்!

ஜெ.கலீல்.றஹ்மான்
...

## மனச்சாட்சி



வீ.அருள்ராஜா
கொம்மாத்துறை.

## உன்னைப் போல் வேண்டும்



பௌர்ணமிப் பரவசமே
உன்னைப் போல் - கொஞ்சம்
குழப்பமும் இல்லாமல்
கொதிக்கும் வெயிலும் இல்லாமல்
ஒரு நட்பு வேண்டும்
தாராயோ...?
நீல வான் நிலவே
உன்னைப் போல்
விழி நீரும் சிந்தாமல்
வலுக்கட்டாயமும் இல்லாமல்
ஓர் உறவு வேண்டும்
தாராயோ...?
மேகங்களோடு விளையாடும் பிறையே
உன்னைப் போல்
மறைதலுமில்லாமல் காத்திருப்புமில்லாமல்
ஒரு மனசு வேண்டும்
தாராயோ...?
இரவில் விழித்திருக்கும் சந்திரனே
உன்னைப் போல்
அமைதியுமில்லாமல்
ஆர்ப்பாட்டமும் இல்லாமல்
ஒரு வாழ்க்கை வேண்டும்
தாராயோ...?
விண் தீத்து பூரணையே
உன்னைப் போல்
அடிமையும் இல்லாமல் ஆண்டானும்
இல்லாமல்
ஒரு சமூகம் வேண்டும் தாராயோ...?
மஞ்சளோடு கொஞ்சும் மதியே
உன்னைப் போல்
ஏய்ப்புமில்லாமல்
ஏமாற்றமுமில்லாமல்
ஒரு காதல் வேண்டும்
தாராயோ?......?

எச்.அகதிகா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





12.09.2012 - 18.09.2012



**அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்**

நீங்கள் எந்தத் தொழிலில் ஈடுபட்டிருந்தாலும் உங்களின் முயற்சிக்கு உரிய அங்கீகாரம் கிடைக்கும். தாய்வழி உறவினர்கள் பிரைவும் உதவுவார்கள். திருமண விஷயங்கள் நல்ல முடிவினை எட்டும். தொழில் துறையில் இது வரை காணப்பட்ட தடங்கல்கள் யாவும் நீங்கும். குடும்பத்தினருடன் கோபம் மற்றும் பரஸ்பர எதிர்வாதங்கள் எதுவும் வேண்டாம். பெற்றோர் சம்மதிக்காத திருமணங்களை இந்தக் காலத்தில் தள்ளிப்போடுவது நல்லது.




**கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகிணி மிருகசீரிடம் 1,2 ஆம் பாதங்கள்**

அதிகப்படியான வார்த்தைகளை பிரயோகிக்காமல் இருப்பது நல்லது. பெண்களுக்கு எந்த பெரிய மாற்றமும் இல்லாவிட்டாலும் வீடு வாங்கும் திட்டங்கள் தற்போது நிறைவேறும். வெளிநாட்டு உதவிகள் கிடைக்கும். இரவு நேரப் பிரயாணங்களில் தகுந்த துணையோடு செல்லுங்கள். உறவினர்களின் உதவியுடன் வியாபாரத்தில் முதலீடுகளை அதிகரிக்கலாம். வியாபாரத்தில் லாபம் அதிகமாகும்.




**மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம் பாதங்கள்**

நண்பர்களின் வம்பான சேர்க்கையினால் வசிக்கும் இடத்தில் சண்டை ஏற்படும். பெண்களுக்கு மனம் ஒரு நிலையில் இருக்காது. அமைதி கொள்வது அவசியம். கடுமையான செய்திகளைப் பார்ப்பதைத் தவிர்க்கவும். வழக்கு விவகாரங்கள் ஏற்பாடு சாதகமாக முடியும். பணத் தட்டுப்பாடு ஏற்படும். ஆடம்பரச் செலவுகளைத் தவிர்த்தல் நலம்.




**புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்**

கழுத்தின் மைய எலும்புகளில் வலி ஏற்படும். பிறந்த வீட்டில் சொத்துப் பிரச்சினைகள் ஏற்படும். தங்கள் நிலையில் கொஞ்சம் விட்டுக் கொடுங்கள். பொது வழக்குகளைத் தவிர்க்க உதவும். பணவரவு அதிகரிக்கும். அதிகாரிகளின் கெடுபிடி குறையும். தொழில் முன்னேற்றத்திற்கு குடும்பத்தின் அனுசரிப்பு தேவைப்படும் நேரமிது. தங்களின் உழைப்பு உற்சாகத்தை அளிக்கும்.



**மகம், பூரம், உத்திரம் 1 ஆம் பாதம்**

எந்தச் செயலிலும் கடும் உழைப்பைக் காட்டுவீர்கள். பெண்களுக்கு சுபச் செலவுகள் அதிகரிக்கும். மூத்த சகோதரர் ஆதரவு உண்டு. வருமானம் அதிகரிக்கும். ஆரோக்கியம் நன்றாக இருக்கும். வேலை தேடிக்கொண்டிருப்பவர்களுக்கு ஒப்பந்தத்தின் அடிப்படையில் நல்ல வருமானமுள்ள வேலை கிடைக்கும். புகழ், செல்வாக்கு, அந்தஸ்து போன்றவை உயரும். கவனமாக இருங்கள்.



**உத்திரம் 2,3,4 ஆம் பாதங்கள், அத்தம் 1,2 ம் பாதங்கள்**

தங்கள் பிள்ளைகள் மேல் பெற்றோர் கவனத்தோடு இருக்க வேண்டும். திருமணம், குழந்தைப் பேறுக்கான வாய்ப்புகள் கைகூடும். கணவருக்கு மூட்டுவலி குறையும். தாங்கள் உட்காரும்பொழுது கூர்மையான பொருட்களால் காயம் ஏற்படலாம், எல்லோருடனும் வீணாக சண்டை ஏற்படுத்திக் கொள்வீர்கள். அமைதியை கைக்கொள்வது நல்லது.




**சித்திரை 3,4 ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள்**

எதிலும் மனச்சோர்வு கொள்ள வேண்டாம். சந்தேகப் பேச்சுகளால் குடும்ப ஒற்றுமைக் குறைவு ஏற்படும். எடுத்த காரியங்கள் இழுபறியாக இருக்கும். உழைப்பினால் உங்கள் செல்வாக்கு உயரும். எதிலும் ஒரு ஒழுங்குடனும் கட்டுப்பாட்டுடனும் நடந்து கொள்ள வேண்டும். இதனால் பிரச்சினைகள் தங்களை அணுகாது.




**விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

நினைப்பது நிறைவேறும். குடும்பத்தில் சந்தோஷமும் நிம்மதியும் நிலவும். திருமண விஷயங்கள் நல்ல முடிவினை எட்டும். கௌரவத்திற்கு பங்கம் ஏற்படாமல் இருக்க எல்லோரையும் அனுசரித்துப்போவது நல்லது. தொழில் துறையில் இருந்த தடங்கல்கள் நீங்கும். அமைதி காத்தல் நல்லது. ஆசையும் முற்றிலும் தவிர்த்தல் நல்லது.




**மூலம், பூராடம், உத்திராடம் 1 ஆம் பாதம்**

நண்பர்களின் தொந்தரவு காரணமாக பிரச்சினைகளில் சிக்குவீர்கள். பெண்கள், கணவருக்கு வேண்டிய விஷயங்கள் அனைத்தையும் நன்கு சீராகச் செய்து தருவீர்கள். குடும்பத்தில் சந்தோஷம் மிகுந்திருக்கும். ஆரோக்கியத்தில் குறை இருக்காது. குழந்தைகளுடன் வாகனங்களில் பிரயாணம் செய்யும் பொழுது கவனத்துடன் இருங்கள். வருமானம் அதிகரிக்கும். உணவு வகைகளில் எச்சரிக்கையுடன் இருங்கள்.




**உத்திராடம் 2,3,4 ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1,2 ஆம் பாதங்கள்**

வாக்குத் தவற மாட்டீர்கள். சோம்பல் அகலும். வீட்டிற்குள் அதிகமாக உணர்ச்சிவசப்படுதல், பதட்டம் போன்றவை இருக்கத்தான் செய்யும். இதனால் வைத்தியச் செலவுகள் அதிகரிக்கும். சொத்து விவகாரங்களில் மூத்த சகோதரர்களுடன் சமாதானமாகப் போவது நன்மையைத் தரும். மூத்த சகோதரர்களின் வழிகாட்டுதலால் வருமானம் அதிகரிக்கும்.



**அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள், சதயம் 1,2,3 ஆம் பாதங்கள்**

பெற்றோர் தாங்கள் பிள்ளைகளை கவனமாக இருக்கும்படி அறிவுறுத்துங்கள். பொறுப்புடன் பெரிய செயல்களில் ஈடுபட வேண்டிவரும். தாங்கள் எடுத்த செயல்களில் வெற்றி பெறுவார்கள். கடுமையான பணத் தட்டுப்பாடு ஏற்படும். பணவசதிகளும் லாபமும் அதிகமாக இருப்பதைக் காண்பீர்கள். ஆடம்பரச் செலவுகளைத் தவிர்த்து முதலீடுகளை அதிகப்படுத்தலாம். கோபித்துக் கொள்ளாமல் இருப்பது நல்லது.



**பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

திறமைவாய்ந்தவர் மிகுந்து காணப்படும். பிள்ளைகள் மேலுள்ள கோபத்தை இப்போது வெளிக் காட்டாதீர்கள். இளைய சகோதர வழியில் வரும் பிரச்சினையை வீட்டிற்குள்ளேயே பேசித் தீர்க்கப் பாருங்கள். எதிலுமே கொஞ்சம் பொறுமையைக் கடைப்பிடியுங்கள். திருமணமாகாத பெண்களுக்கு நல்ல ஜாதகங்கள் வரும். பெண் குழந்தைகளால் ஜாதகத்தில் கௌரவம் கிடைக்கும்.




**பா**சம் தான் மனிதனைப் பாடாய்ப்படுத்துகிறது.

மகனென்றும், மகளென்றும், மனைவியென்றும், கணவனென்றும், பெற்றோரென்றும் எத்தனை வகையான உறவுகள்... இவர்கள் பாடியில் கிடந்து விடக்கூடாது. உலகிலுள்ள எல்லா சுகங்களையும் அனுபவித்து விட வேண்டுமென்பதற்காக ஒவ்வொரு குடும்பத்தலைவனும் படும் கஷ்டமென்ன! செய்கின்ற தகிடுதத்தமென்ன!

ஆனால், எனக்கு குடும்பம், நட்பு என்றெல்லாம் பாசமே கிடையாது, நான் பாசத்தை வென்றவன்' என்று சொல்லிக்கொண்ட இளைஞன், ஒரு துறவியைச் சந்தித்தான்.

"துறவியாரே! என் பெயர் ராமன். செவ்வந்தி கிராமத்தைச் சேர்ந்தவன். நானும், என் குடும்பத்தாரும் பாசத்தை துறந்து விட்டோம். நாங்கள் மெய்ஞானமாகிய இறை இன்பத்தை அடைய விரும்புகிறோம். அதற்குப் பாதை காட்டுங்கள்," என்றான்.

"நீ பாசத்தைத் துறந்து விட்டதாகச் சொல்வதை எப்படி நம்புவது! இங்கேயே ஒரு வாரம் தங்கியிரு. அதன்பிறகு யோசிக்கலாம்," என்றவர், சீடர்களிடம் அவனை ஒப்படைத்து விட்டு, அவனுக்கே தெரியாமல் அவனது கிராமத்துக்குச் சென்றார்.

ராமனின் வீட்டைக் கண்டுபிடித்தார். வாசலில், பணிப்பெண் நின்றாள். அவளிடம் ஒரு ரத்தம் படிந்த துணியைக் காட்டி, "அம்மா! இந்த வீட்டில் இருந்த ராமன் காட்டுக்கு வந்தார். சிறுத்தை தாக்கி இறந்து விட்டார். இதோ! அவர் அணிந்திருந்த ரத்தம் படிந்த ஆடை," என்றார்.

அவள் அதைக் கண்டுகொள்ளவில்லை.

"ஐயா! உலகம் என்ற வாடகை வீட்டில் அவர் இத்தனை நாள் குடியிருந்தார். இப்போது உரிமையாளரான இறைவன் அவரைக் காலி செய்யச் சொல்லி விட்டார். அவரும் கிளம்பிவிட்டார். இதெல்லாம் ஒரு பெரிய விஷயமா! இதற்காக நான் என் வேலையைப் போட்டுவிட்டு வீட்டுக்குள் போய் தகவல் சொல்ல முடியாது," என்றாள்.

துறவி ஆச்சரியமாக அவளைப் பார்த்து விட்டு, ராமனின் பெற்றோரிடம் சென்று விஷயத்தைச் சொன்னார்.

ராமனின் தாய் அவரிடம் "துறவியாரே! இதெல்லாம் ஒரு விஷயமென எங்களிடம் சொல்ல வந்து விட்டீர்களா! பிறப்பவர் இறப்பது உறுதி தானே! பிறந்த அன்றே அவனது இறந்த தேதியும் குறிக்கப்பட்டு விட்டது என்பதை நான் ஏற்கனவே அறிவேனே!" என்றாள்.

ஏதோ சத்தம் கேட்டு, ராமனின் மனைவி உள்ளிருந்து வெளியே வந்தாள். விஷயத்தை அறிந்தாள்.

"ஐயா! வாழ்க்கை வண்டிப்பயணம் போன்றது. அவரவர் இடம் வந்ததும் இறங்கிக் கொள்கிறார்கள். என் கணவர் அவரது நிறுத்தத்தில் இறங்கி விட்டார். நான் என் நிறுத்தத்தை நோக்கி போய்க்கொண்டிருக்கிறேன். இறப்பில் என்ன புதுமை இருக்கிறது! இதெல்லாம் வாழ்க்கையில் சகஜமய்யா!" என்று சாதாரணமாகச் சொல்லி விட்டுப் போய்விட்டாள்.

உண்மையிலேயே அவர்கள் பாசத்தைத் துறந்தவர்கள் என்பதைப் புரிந்து கொண்ட துறவி, மீண்டும் தன் இடம் திரும்பினார்.

ராமனிடம், "இளைஞனே! நான் உன் ஊருக்குத் தான் போயிருந்தேன். பாவம்! உன் வீட்டில் எதிர்பாராத விதமாக நெருப்பு பற்றி வீடே எரிந்து விட்டது. உன் பெற்றோரும் மனைவியும் ஏதுமில்லாமல் தெருவில் நிற்கிறார்கள். உடனே செல்," என்றார்.

ராமன் சிரித்தான்.

"துறவியே! பொருட்கள் நிலையற்றவை. வீடு, வாசல், அதிலுள்ள பொருட்கள் அழியக்கூடியவை என்பது நிஜம் தானே! மேலும், என் வாழ்வில் இது ஒரு சம்பவம். மனித வாழ்வில் சம்பவங்கள் தவிர்க்க முடியாதவை," என்றான் மிக அமைதியாக.

பந்த பாசத்தைத் துறந்த அந்தக் குடும்பத்தினர் இறையின்பத்தை அடைய தகுதியானவர்கள் என்பதைப் புரிந்து கொண்ட துறவி அவர்களுக்கு மெய்ஞானத்தைப் போதித்தார்.

## பொறுமையைக் கடைப்பிடியுங்கள்

* இரும்பை இரும்பு கூர்மையாக்கும். மனிதனை அவன் நண்பன் கூர்மை ஆக்குகிறான்.
* கடவுளின் சிருஷ்டி ஒவ்வொன்றுமே நல்லது தான். நன்றியறிதலுடன் பெற்றுக் கொண்டால் எதையும் தள்ள வேண்டியதில்லை.
* நல்ல மனிதன் நல்லவைகளை இருதயத்தின் நல்ல பொக்கிஷத்திலிருந்து எடுத்துக் காட்டுகிறான். தீயவன் தீய பொக்கிஷத்திலிருந்து தீயதைக் கொண்டு வருகிறான்.
* கடவுளின் ஊழியன் வழக்காடும் தன்மையுள்ளவனாய் இருக்கக்கூடாது. எல்லா மனிதர்களிடமும் கண்ணியமாகவும், போதிக்கும் திறமையுள்ளவனாகவும் பொறுமைசாலியாகவும் இருக்கவேண்டும்.
* எனக்கு வறுமையையோ செல்வப்பெருக்கோ தர வேண்டாம். எனக்கு அன்றாடத் தேவையான உணவை மட்டும் ஊட்டும்.
* நண்பன் புண்படுத்தும் காயங்கள் உள்ளூரப் பற்றுதல் உள்ளவை. ஆனால், பகையாளி ஒருவன் வாரி வழங்கும் முத்தங்களோ உள்ளூரப் பிரிவினை மானவை.

— பைபிள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1980** களின் நடுப்பகுதி அடுத்தடுத்து நடந்தேறிய கொடூரக் கொலைகளின் நிமித்தம் லண்டன் மாநகரமும் அதனைச் சுற்றிவர அண்டியிருந்த நகர்ப்புறங்களிலுள்ள மக்கள் அனைவரும் அச்சத்தால் உறைந்து போயிருந்தனர். தெருவில் காண்பவர் முகங்கள் யாவும் பீதியினால் வெளிறிப் போயிருந்தன.

அறிமுகமற்ற எவரைக் கண்டாலும் சந்தேகக் கண்களுடனேயே பார்த்தனர். இயல்பு வாழ்க்கை குழப்பமான நிலைமையிலே இருந்தது. இளங்கன்னியர் அச்சத்தின் மத்தியிலேயே உலாவினர்.

லண்டன் பொலிசாருக்கும் அச்சூழ்நிலை பெரும் தலையிடியாகவும் சோதனைமிக்கதாகவும் காணப்பட்டது. 6 மாத காலத்திற்குள் அடுத்தடுத்து நிகழ்ந்துவிட்ட இளம் பெண்களின் படுகொலைகள் சமூகத்தின் மத்தியில் பெரும் பரபரப்பையும் பயப்பிராந்தியையும் ஏற்படுத்திவிட்டன.

கொலைகள் என்றால் ஏன்றும் சாதாரண முறையில் அமைந்திருக்கவில்லை. அத்தனையும்

இதனையடுத்து பொலிஸ் பிரிவினர் தீவிரமாகக் கண்காணிப்புகளில் ஈடுபட்டதுடன் பொதுமக்கள் மத்தியிலும் விழிப்புணர்வை ஏற்படுத்தினர். ஆயினும் எதுவிதத் தகவலும் கிடைக்கவில்லை. பலன் பூஜ்ஜியமே.

மறுபடியும் இரண்டு வாரத்திற்குள்ளாகவே கம்பேரெட் எனும் இடத்தில் இரட்டைக் கொலைகள் நடைபெற்றன. சடலங்கள் மறுநாள் ஓர் மறைவிடத்திலிருந்து தர்மார்ம் வீசியதிலிருந்து மக்களால் தகவல் வழங்கப்பட்டுப் பொலிசாரினால் கண்டுபிடிக்கப்பட்டன. இத்தடவை கொலைசெய்யப்பட்டவர்கள் 15 வயதும் 18 வயதும் நிரம்பிய நண்பிகளான கல்லூரி மாணவிகள். முன்னரைப் போலவே நிர்வாணப்படுத்தப்பட்ட நிலையிலும் கை, கால்கள் பிணைக்கப்பட்ட நிலையிலுமே சடலங்கள் காணப்பட்டன. ஆனால் ஒரேயொரு வித்தியாசம் மட்டுமே காணப்பட்டது. சடலங்களின் வாயினுள் துணியைத் திணிக்காது பிளாஸ்ரரினால் அவை ஒட்டப்பட்டிருந்தன.

பொலிசாரின் தீவிரமான கண்காணிப்பு 9 சார

பெறமுடியவில்லை. துப்பறியும் பிரிவின் பொறுப்பதிகாரியான பிறைனர் வரவழைக்கப்பட்டார். அவர் அனுபவசாலி என்பதுடன் ஒரு மனோதத்துவவியலாளரும் கூட. விவேகமாகச் செயற்படுபவர்.

பிறைனர் கைதிகள் இருவரையும் முதல்முறையாக நேரில் கண்டதுமே அவரது மூளையின் ஒரு மூலையில் பொறி தட்டியது. அதாவது நொட்டிங்கில் பெண்ணான பூனி என்பவள் கடந்த வாரமளவில் அவளது வீட்டினுள் புகமுயன்று தப்பியோடிய காளிபர்கள் குறித்து வழங்கிய தகவலேயாகும். 'இருவர்களில் ஒருவன் வழமைக்கு மாறாக 6 அடிக்கு மேலாக உயரமுடையவன் மற்றவனின் உயரம் 5 அடிக்கும் குறைந்தவன்' என்பதே அதுவாகும். பிறைனரின் மூளை பலமாக வேலை செய்தது.

உண்மையில் கைதாகி இருந்தவர்களில் ஒருவன் 61/2 அடி உயரத்தை உடையவனாகவும் மற்றவன் 5 அடிக்கும் குறைவான உயரம் உடையவனாகவும் தோற்றமளித்தனர். பிறைனரின் உள்மனம்

# பெண்களைக் கொல்பவர்கள்

நிர்வாணமாக்கப்பட்டுப் பலவந்தமாகக் கற்பழிக்கப்பட்டுக் குரூரமான முறையில் கழுத்து நெரிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டிருந்தன.

கைவிரல் அடையாளங்களோ அன்றி வேறெந்தத் தடயங்களையுமோ கொலைகாரன் தப்பித் தவறிக் கூட விட்டு வைக்கவில்லை. நடந்த கொலைகள் அத்தனையும் ஒரே பாணியிலேயே அமைந்திருந்தன.

பலியானவர்கள் அத்தனை பேரும் 15 வயதிற்கும் 32 வயதிற்கும் இடைப்பட்ட, திருமணமாகாத கன்னிப் பெண்களாகவே காணப்பட்டனர்.

பொலிசாரிடம் அகப்பட்ட பலியானவர்களின் சடலங்கள் அனைத்தும் முழு நிர்வாண நிலையில் பலவந்தமாகக் கற்பழிக்கப்பட்டு கழுத்து நெரித்துக் கொலைசெய்யப்பட்ட நிலையிலேயே காணப்பட்டன.

அத்துடன் கொலையுண்டவர்களின் சத்தம், அலறல்கள் வெளிவரா வண்ணம் அவர்களது வாய்களுக்குள் துணிவைத்து அடைக்கப்பட்டிருந்தது. சில சடலங்களில் ஆங்காங்கே சிறுசிறு காயங்களும் காணப்பட்டன. அதுமட்டுமன்றி அவர்களது கை, மற்றும் கால்கள் நைலோன் கயிற்றினால் இறுகப் பிணைக்கப்பட்டிருந்தன.

எதுவித தடயங்களோ, தகவல்களோ சரிவரக் கிடையாமை காரணமாகப் பொலிசார் பெரும் சிக்கலை எதிர்கொண்டனர். ஆயினும் இக்கொலைகள் யாவும் குரூரமான முறையில் பாலியல் இச்சையைத் தீர்க்க முனையும் காமவெறி தலைக்கேறியவர்களாலேயே புரியப்பட்டுள்ளதென் பதும், அதுமட்டுமன்றி திருமணமாகாத இளம் கன்னியரே இக்கொலையாளிகளின் இலக்காக விளங்குகின்றனர் என்பதும் பொலிசாருக்குத் தெளிவாகப் புரிந்தது. அத்துடன் கொலையாளிகள் மிகுந்த உடற்பலம் வாய்ந்தவராக இருக்க வேண்டுமென்பதையும் முடிவு செய்தனர்.

பொலிஸ் திணைக்களத்திற்கு இவ்விடயம் ஓர் சவாலாகவே அமைந்துவிட்டது. எதுவிதத்திலும் கொலையாளிகளைப் பிடித்துவிட வேண்டுமென சங்கற்பம் பூண்டனர். திறன்வாய்ந்த துப்பறிவாளர்களைக் கொண்ட விசேட பிரிவு ஒன்று இதற்கென உருவாக்கப்பட்டது. அவர்கள் முழுமூச்சுடன் பணியில் இறங்கினர்.

முதலில் கொலைகள் யாவும் லண்டன் நகர மையத்தில் இடம்பெறவில்லையென்பதனையும் அவை யாவும் லண்டன் நகரத்திலிருந்து 30 மைல்களுக்கும் 60 மைல்கள் இடையிலான தொலைவிற்கப்பாலேயே நிகழ்ந்திருப்பதையும் துப்பறிவாளர்கள் கவனத்திலெடுத்தனர்.

1986 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதத்திலேயே முதற்கொலை சம்பவித்தது. லண்டனுக்கு வடமேற்காகவுள்ள கில்பேர்ன் என்ற ஊரிலேயே அது இடம்பெற்றது. 21 வயதான விகி என்ற அழகிய கன்னிப் பெண் அவளது நண்பி வீட்டில் நடைபெற்ற விருந்துபசாரமொன்றில் கலந்து கொண்டு விட்டு ஒரு மைல் தொலைவிலுள்ள அவளது வீட்டிற்குத் திரும்பி நடந்து வருகையில் பலவந்தமாக இழுத்துச் செல்லப்பட்டுக் கற்பழிக்கப்பட்டதன் பின்னர் கழுத்து நெரித்துக் கொலை செய்யப்பட்டாள்.

அவளது சடலம் கொலை செய்யப்பட்ட இரண்டு நாட்களின் பின்னரே ஓர் மறைவான பகுதியில் செடிகளின் நடுவில் கண்டெடுக்கப்பட்டது. சடலம் முற்றிலுமாக நிர்வாண நிலையில் வாயினுள் துணியைத் துத் திணிக்கப்பட்டும் கை, கால்கள் நைலோன் கயிற்றால் இறுகப் பிணைக்கப்பட்ட நிலையிலும் காணப்பட்டது. சடலத்தின் அருகில் ஓர் பொம்மைக் கரடியும் வீசப்பட்டுக் கிடக்கக் காணப்பட்டது. இதனைத் தவிர வேறெந்தத் தடயமும் தகவலும் கிடைக்கவேயில்லை.

இச்சம்பவம் நடைபெற்று எட்டாவது நாளில் இரண்டாவது கொலையும் நடந்தது. இம்முறை பலியானவள் பார்பரா எனும் 28 வயதான ஓர் உணவு விடுதியின் முகாமையாளராவாள். இவள் தினமும் ரயிலில் வேலைக்குச் சென்று வருவது வழக்கம். அவ்விதமே அன்றைய தினத்திலும் அவள் வேலை முடிந்து ரயிலில் வந்து கம்பேரெட் ரயில் நிலையத்தில் இறங்கி வீடு செல்லும் வழியில் அதேபாணியில் கொலை செய்யப்பட்டுச் சடலம் ரயில் தண்டவாளப் பாதையின் அண்மையிலிருந்த பற்றையினுள் கிடந்து எடுக்கப்பட்டது.

கொலையாளி ஆயுதம் எதனையும் பயன்படுத்தவில்லை என்பது தெளிவாகியது. கைவிரல்கள் எதுவும் காணப்படாமையால் கொலையாளி கையுறைகளைப் பயன்படுத்தியிருக்கக் கூடுமெனத் துப்பறிவாளர்கள் முடிவெடுத்தனர்.




1986 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதத்திலேயே முதற்கொலை சம்பவித்தது. லண்டனுக்கு வடமேற்காகவுள்ள கில்பேர்ன் என்ற ஊரிலேயே அது இடம் பெற்றது. 21 வயதான விகி என்ற அழகிய கன்னிப்பெண் அவளது நண்பி வீட்டில் நடைபெற்ற விருந்துபசாரமொன்றில் கலந்து கொண்டு விட்டு ஒரு மைல் தொலைவிலுள்ள அவளது வீட்டிற்குத் திரும்பி நடந்து வருகையில் பலவந்தமாக இழுத்துச் செல்லப்பட்டுக் கற்பழிக்கப்பட்டதன் பின்னர் கழுத்து நெரித்துக் கொலை செய்யப்பட்டாள்.

நடவடிக்கைகள், அத்துடன் பொதுமக்களின் விழிப்புணர்வும் கொலையாளிக்கு எச்சரிக்கையுணர்வை ஏற்படுத்தியிருக்க வேண்டும். அதனால் அடுத்துவந்த இருமாத காலங்கள் வரையில் எதுவித கொலைச் சம்பவங்களும் அப்பிராந்தியத்தில் நிகழ்ந்ததாகத் தகவல் கிடைக்கவில்லை. முன்னைய கொலைகள் பற்றிய விசாரணைகளிலும் எதுவித முன்னேற்றமும் இல்லை.

இரண்டு மாதங்களின் பின்னர் ஒருநாள் லண்டன் மேற்கிலுள்ள நொட்டிங்கில் எனும் இடத்திலுள்ள சுப்பர் பொலிஸ் நிலையத்திற்கு ஒரு பெண்ணிடமிருந்து தகவல் கிடைத்தது. அதாவது நொட்டிங்கில்லில் வசித்துவந்த பூனி என்ற 27 வயதான பெண்ணின் வீட்டிற்குள் அத்துமீறிப் புகுந்த இருவர் அவளை பலவந்தம் செய்ய முற்படுகையில் அவளது அலறல் கேட்டு உதவிக்குவந்த அயலவரைக் கண்டதும் அவ்வீட்டிலிருந்து இருவர் வெளியே ஓடியதாகவும் அதில் ஒருவன் வழமைக்கு மாறாக 6 அடிக்கு மேலான உயரமுடையவனாகவும் மற்றவனின் உயரம் சுமார் 5 அடிக்குக் குறைந்தவனாகவும் இருந்ததைக் கண்டதாகவும் விசாரணைகளில் இருந்து தெரியவந்தது.

இச்சம்பவம் நடைபெற்று இருநாட்களுக்குப் பின்னர் பொலிசாருக்கு அவசரத் தொலைபேசி அழைப்பு ஒன்று வந்தது. நொட்டிங்கில்லில் உள்ள ஒரு மதுபானக் களஞ்சியத்தை யாரோ உடைத்துக் கொள்ளையடிக்கின்றார்கள் என்பதே அந்தத் தகவலாகும். சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிசார் மதுபானக் களஞ்சியத்தை உடைத்துப் புகுந்து மதுபோதையில் மதுபான வகைகளைக் கொள்ளையடித்துக் கொண்டு நின்ற இருவரைக் கைது செய்து பொலிஸ் நிலையம் கொண்டு சென்றனர்.

மறுநாட் காலையில் கைது செய்யப்பட்ட இருவரையும் விசாரித்ததில் அவர்கள் கள்வர்கள் என்பதைத் தவிர வேறு எதுவித தகவலையும் அவர்களிடமிருந்து

**தமிழில் – ஜெகன்**

இளைஞர்களிடம் ஏதோ விடயம் புதைந்துள்ளது கண்டுபிடித்தேயாக வேண்டுமென வலியுறுத்தியது. அவர் உளவியலிலும் கை தேர்ந்தவர் ஆயிற்றே!

ஒருநாள் பூராவும் அவர்களுடன் சரளமாக உரையாடி அவர்களிடமிருந்து உண்மைகளைக் கறந்தே எடுத்துவிட்டார். இருவரில் உயரமாக இருந்தவன் அளித்த ஒப்புதல் வாக்குமூலம் "எனது பெயர் டேவிட் மல்சே. எனது நண்பனின் பெயர் ஜோண் டப்பி. இப்பொழுது எங்களது வயது 27. நாங்கள் இருவரும் சிறுவயது தொட்டே நண்பர்களாகவுள்ளோம். ஆரம்பக் கல்வியுடன் படிப்பை நிறுத்திவிட்டதால் பெற்றோர்களினால் வீட்டை விட்டு விரட்டப்பட்ட நிலையில் எமது போக்கிலேயே கூலிப்பிழைப்பு நடத்தி வளர்ந்தோம். அன்பு என்பதையே அறியாத வகையில் வளர்ந்தோம். இருவருமாக ஒரு சீனரிடம் கராத்தே, ஜூடோ, குங்பூ போன்ற வர்மக் கலைகளைப் பயின்றோம். அழகிய பெண்களைக் கண்டாலே அவர்கள் மீது ஒருவித வெறுப்பு உண்டாகும். அவர்களை வருத்தித் துன்புறுத்தி அவர்கள் வேதனையால் துடிதுடிப்பதைப் பார்த்து ரசிக்க வேண்டுமென்ற உணர்வு மேலிடும். அதனாலேயே நாங்கள் அழகிய பெண்கள் மீது குறிவைத்து அவர்களை பலவந்தமாக இச்சைக்குட்படுத்திக் கழுத்தை நெரித்துக் கொலை செய்தோம். நாம் கையுறைகளையே அச்சமயங்களில் பயன்படுத்துவோம். பின்னர் கையுறைகளை எரித்துவிடுவோம்.

ஆனால் அண்மைய காலமாகப் பொலிசாரின் கெடுபிடிகளால் எம்மால் வெளியில் இலகுவில் நடமாட இடமாது போயிற்று. எமது மன உளைச்சலைத் தீர்க்கவே மதுபானங்களைக் கொள்ளையடிக்கச் சென்றவேளையில் எமது போதாத காலம் மாட்டிக் கொண்டோம்" என்பதாக அமைந்திருந்தது. அதேசமயத்தில் அவர்கள் இருவரும் தாங்கள் செய்த சகல கொலைகளையும் ஒப்புக் கொண்டனர்.

நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டு மூன்று மாதங்கள் வரையில் நடைபெற்றது. வழக்கின் இறுதியில் இருவருக்கும் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுத் தீர்ப்பளிக்கப்பட்ட வேளையில் நீதிபதி "நீங்கள் இருவரும் விலங்குகளைக் கொன்று தின்னும் விலங்குகளை விட மோசமான கொடியவர்கள். உங்களுக்கு இதனை விட வேறு தண்டனை எதுவும் இல்லாமலுள்ளது. இருந்திருந்தால் அதனையே உங்களுக்கு வழங்குவதற்கு நிச்சயம் தயங்கமாட்டேன்" என்று நீதிமன்றில் பகிரங்கமாகக் கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எடுத்துக் கொள்ளுங்கள் அல்லது விட்டுவிடுங்கள்

**உ**ங்களால் தாங்கமுடியாத ஒரு சூழ்நிலையில் சிக்கிக் கொண்டால் விட்டு விடுங்கள்.

கற்சுவர் என்று தெரிந்தும் உங்கள் தலையால் முட்டிப் பெயர்க்க நினைத்தால் அது உங்கள் விடா முயற்சியைக் காட்டுவதாக இருக்கலாம். வலிமை நீங்கள் எவ்வளவு தாங்குவீர்கள் என்று அறிவிப்பதாக அமையலாம். ஆனால் இது வீரமில்லை. வெறும் முட்டாள்தனம்.

இந்த உலகத்தில், நம் ஒவ்வொருவருக்கும் குறிப்பிட்ட அளவு கஷ்டங்கள், ஏமாற்றங்கள், மனவலிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. நாம் நிலை தவறாத ஆளுமையை நிலைநாட்ட வேண்டுமென்றால் வாழ்க்கை நமக்கு அளிக்கும் நம்மால் தாங்கக் கூடிய உதைகளைப் பெற்றுக் கொள்ளத்தான் வேண்டும். நாம் ஏற்றுக் கொள்ள வேண்டியது இவ்வளவே. தவிர்க்க முடியாத துன்பங்கள் எதிர்கொள்ளும் போது நாம் நான்கு விதமாக அவற்றைச் சமாளிக்க வேண்டும்.

1. துன்பத்தை முதல் காரியமாக ஒத்துக் கொள்ளுங்கள். அதை எதிர்கொள்ளாதது போல் பாசாங்கு செய்யாதீர்கள்.

2. வாழ்க்கையின் பல சுற்றுகளில் இது தவிர்க்க முடியாதது என்று ஏற்றுக் கொள்ளுங்கள்.

3. அதற்கேற்ப சமாளியுங்கள். வெற்றிகரமான ஆளுமையின் முக்கிய குணாதிசயமே - மாற்றங்களை - முக்கியமாக மனத்துக்குப் பிடித்தமில்லாத மாற்றங்களைச் சமாளிக்கும் முயற்சியில் வெற்றி காண்பது தான்.

4. சூழ்நிலையை அமைக்கும் விதமாகச் செயல்படுங்கள். எந்தச் சூழ்நிலையையும் மாற்றி அமைக்க நீங்கள் ஏதாவது செய்ய முடியும். அது என்ன என்று கண்டுபிடியுங்கள். உடனடியாகச் செயலில் இறங்குக. தொடர்ந்து புத்திசாலித்தனமாகச் செயல்பட்டால் மனக் கஷ்டம் தீரும். பிரச்சினைக்குப் பரிகாரம் கிடைக்கும்.



இந்த நான்கு நடவடிக்கைகளை - வரிசைப்படி - மேற்கொண்டால் நீங்கள் எப்பேர்ப்பட்ட தவிர்க்க முடியாத துன்பத்தையும் எதிர் கொள்ளலாம். நீங்கள் முடியாத நஷ்டத்தையும் எதிர் கொள்ளலாம்.

துன்பம் தவிர்க்க இயலாதது என்னும் போது திட உணர்வும், மன அளவில், உடல் அளவில் உறுத்தப்படும் ஆன்மிக நம்பிக்கையும் உங்கள் எதிர் கொள்ளும் திறமையை வலுப்படுத்தும்.

ஆனால் எல்லாத் துன்பங்களும் தவிர்க்க இயலாதவை அல்ல. அதை எதிர்கொள்வதா? அல்லது விட்டு விடுவதா? என்பதை உங்கள் சொந்த நன்மையை மனத்தில் கொண்டு நீங்களே தான் தீர்மானிக்க வேண்டும்.

துன்பங்களை எதிர் கொண்டு மோதும் போது உங்கள் மன வலிமை உழைப்பட்டுப் பிரச்சினைக்குப் பரிகாரம் காணும் பயிற்சியாகவும் அது அமையும் என்றால் தாராளமாக எதிர் கொள்ளுங்கள். சவால்களைச் சமாளிப்பதில், இடைஞ்சல்களை மீறி வருவதில் ஒரு வியப்பு உணர்ச்சியால் உந்தப்பட்டால் ரொம்ப நல்லது. வாழ்வின் இன்பமே அதில்தான் அடங்கியுள்ளது.

துன்பத்திற்கு நீங்கள் பலியாவதாக உணர்ந்தாலோ, அல்லது பிறர் முன்னிலையில் பலியானது போல் தோற்றம் கொடுத்து அதனால் அவர்கள் உங்கள் மேல் பரிதாபப்பட்டு, உங்களுக்குச் சில நன்மைகள் செய்யக் கூடும் என்று கணக்குப் போட்டோ எதிர் கொண்டால், நீங்கள் மனத்தளவில் பலவீனமானவர்; உங்கள் மன வியாதியை தக்க நிபுணர்களிடம் காட்டிச் சிகிச்சை பெற வேண்டும் என்பது பொருள்.

உங்கள் விடாமுயற்சியைக் காட்டவோ, வலி தாங்கும் வைராக்கியத்தைக் காட்டவோ, பலியான பிம்பம் உருவாக்கவோ கற்சுவரில் முட்டாதீர்கள். கற்சுவர் என்று தெரிந்தால் முட்டாதீர்கள் - விட்டுவிடுங்கள். ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் ஏராளமான கற்சுவர்கள் இருக்கின்றன. நீங்கள் தொடர்ந்து முட்டினால் உங்களையே அது பலிவாங்கலாம். அதை விட்டு விடுங்கள்.

கற்சுவர் என்றால் என்ன? சில உதாரணங்கள்.

வாழ்க்கைப் பாதையில் சமீபத்திலோ வெகு நாட்கள் முன்னமேயோ நீங்கள் ஒரு தவறான சாலையைத் தேர்ந்தெடுத்து விட்டீர்கள். அந்த நேரம் அது சரியான சாலை என்று தோன்றியது. ஆனால், அந்த சாலையில் இப்பொழுது உங்கள் மகிழ்ச்சியை, வெற்றியை மறைத்து நிற்பது - ஒரு கற்சுவர், அந்த சாலைக்குள் மேலும் நடக்காதீர்கள். சரியான சாலையைத் தேடத் தொடங்குங்கள்.

தவறான உத்தியோகத்தில் நீங்கள் சகிக்க முடியாதபடி மாட்டியிருக்கலாம். விட்டு விடுங்கள். தவறான வியாபாரத்தில் குறைவான லாபம், வாய்ப்புகளின் மத்தியில் நீங்கள் உழைத்து வாழலாம். விட்டு விடுங்கள். பொருந்தாத திருமணங்கள் நிறையத் தம்பதிகளின் வாழ்க்கையில் கஷ்டங்கள். விட்டு விடுங்கள். விறுவிறுப்பான சம்பாதனையோ, சந்தோஷமான அனுபவங்களோ பயனுள்ள தோழமையோ கிடைக்காத ஒரு குழுவில் நீங்கள் சிக்கியிருக்கலாம். விட்டு விடுங்கள்.

துன்பம் உங்கள் பக்கம் வரும்போது - நீங்கள் தீர்மானிக்க முடியும் - எதிர் கொள்வதா, விட்டு விடுவதா என்று, சூழ்நிலை, உங்கள் அறிவு பூர்வமான தீர்ப்பு இரண்டையும் பொறுத்தது இது.

சகிக்க முடியாத சூழ்நிலையிலிருந்து நீங்கள் விலகிக் கொண்டால் உங்களை யாரும் கோழை என்று கூறி விடுவார்களோ என்று அஞ்சாதீர்கள். நீங்கள் அந்தப் பிரச்சினையை எதிர்கொள்ளா விட்டால் யாரேனும் ஏதேனும் சொல்வார்களோ என்று பயந்து கற்சுவரில் மோதி உங்களை நீங்கள் மாய்த்துக் கொள்வதைக் காட்டிலும் விட்டு விடுவது தைரியமான செயல். புத்திசாலித்தனமான செயல். வேறு பயனுள்ள அனுபவங்களை நாடி நீங்கள் செல்ல வழிவகுக்கும்.

விட்டு விடப் பயப்படாதீர்கள்.

வெப்பத்தைத் தாங்க முடியவில்லை என்றால் சமையலறையை விட்டு வெளியேறுங்கள்.

வெற்றி பெறுவது வெகு சுலபம்

டாக்டர் எமிலி கூ என்கிற மனோதத்துவ நிபுணர் தம்மிடத்தில் வரும் நோயாளிகளுக்கு கீழ்க்கண்ட ஆலோசனையை அடிக்கடி கூறுவார்.

"நீ என்ன செய்ய நினைக்கிறாயோ அது மிகச் சுலபம் என்று எண்ணிக் கொள். அது நிஜமாகவே சுலபமாகி விடும்."

டாக்டர் கூ அவர்களின் இந்த மருத்துவ ஆலோசனை வாழ்க்கையில் வெற்றி பெறப் பெரிதும் உதவும்.

வெற்றி காண்பது சுலபம் என்று நினைத்துக் கொள்ளுங்கள்.

வெற்றி பெறுவது சுலபமே - நிரூபிக்கப்பட்ட வெற்றி முறைகள் வாங்குவதோ, புரிந்து கொள்வதோ, கற்பதோ, உபயோகப்படுத்துவதோ கடினமில்லை என்ற அளவில்.

நிரூபிக்கப்பட்ட வெற்றி முறைகளில் ஒன்று கூட யாருக்கும் கிட்டுவது கடினமில்லை. புரிந்து கொள்வதும் கடினமில்லை. கற்பதும் கடினமில்லை. உபயோகிப்பதும் கடினமில்லை. எனவே அந்த நபர் வெற்றி பெறுவது சுலபமாகிறது.

ரொம்ப குறைவான நபர்கள் மன அளவில், உணர்ச்சி அளவில் மந்தமானவர்கள். அவர்கள் வெற்றி பெறுவது அபூர்வம். அவர்கள் மருத்துவ ரீதியில் சிகிச்சை பெற வேண்டியவர்கள்.

இந்தச் சில சோகமான விதிவிலக்கைத் தவிர மற்ற அனைவரும் - சுலபமாய் வெற்றி பெறலாம்.

தற்போது ஆர்வம் குறைந்த, வசதிகள் அற்ற, கல்வியறிவு குறைவாய் உள்ள ஆண்கள், பெண்கள், குமர வயதுப் பையன்கள் அனைவரும் சுலபமாய் வெற்றி பெறலாம்.

இப்பொழுது நீங்கள் எங்கு இருக்கிறீர்கள் என்பதைப் பொறுத்ததல்ல வெற்றி - நீங்கள் எங்கு சென்றடையப் போகிறீர்கள் என்பதைப் பொறுத்தது அது.

இப்பொழுது நீங்கள் என்னவாய் இருக்கிறீர்கள் என்பதைப் பொறுத்ததன்று வெற்றி - நீங்கள் என்னவாக ஆக விரும்புகிறீர்கள் என்பதைப் பொறுத்தது அது.

யாரும் வெற்றிகரமான வாழ்க்கை லட்சியம் கொண்டிருக்கலாம். அதை சுலபமாய் அடையவும் செய்யலாம்.

சுலபமாய் என்றால் சோம்பேறித்தனமாய் என்றோ, அலட்சியமாய் என்றோ, தீவிர சிந்தனை, முயற்சி இல்லாமல் என்றோ பொருளில்லை.

நீங்கள் சோம்பேறித்தனமாய், அலட்சியமாய், தீவிரமான சிந்தனை முயற்சி இல்லாமல் வெற்றி பெறவே முடியாது.

சுலபமாய் வெற்றி பெற முடியும் - ஏனென்றால் நூற்றுக்கணக்கான நிரூபிக்கப்பட்ட வெற்றி முறைகள் உள்ளன.

ஒவ்வொரு நிரூபிக்கப்பட்ட வெற்றி முறையும் யாராலும் சுலபமாய்ப் பெற முடியும், புரிந்து கொள்ள முடியும், கற்றுக் கொள்ள முடியும். எனவே வெற்றி சுலபமாகிறது.

பல லட்சக்கணக்கான மக்கள் வெற்றியடைவது கடினம் என்று நம்ப வைக்கப்பட்டிருக்கிறார்கள். நாங்கள் ஏழைகள், வசதி அற்றவர்கள், கல்வியறிவு இல்லாதவர்கள். எனவே தாங்கள் வெற்றி பெறுவது கடினம் என்று நம்புகிறார்கள்.

தங்களது இன்றைய நிலைமை காரணமாக தாங்கள் ஏழைகளாகவே, மட்டமானவர்களாகவே வாழ்ந்து தீர வேண்டும் என்று நம்ப வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

இது முட்டாள்தனம்! இது மாற்றக் கூடிய நிலைமை!

லட்சக்கணக்கான அமெரிக்கர்கள் ஏழைகளாக வாழ்கிறார்கள். ஏனென்றால், அவர்களோ அவர்களுக்கு உதவ முற்படுபவர்களோ நிரூபிக்கப்பட்ட வெற்றி முறைகளைப் பயன்படுத்துவதில்லை.

ஏழைகள் தங்கள் வறுமையிலிருந்தும் வெளியேற பயன்படுத்த வேண்டிய நிரூபிக்கப்பட்ட வெற்றி முறைகள் சுலபமாய் புரியும்; சுலபமாய் கற்கலாம்; சுலபமாய் உபயோகிக்கலாம். யாரும் சுலபமாய் வெற்றி பெற முடியும்.

யாரும் என்கிற போது லட்சக்கணக்கான ஏழை மக்களை மட்டும் நான் குறிப்பிடவில்லை. அவர்களுக்கு உதவுவதற்கு அரசாங்கத்தால் சம்பளம் கொடுத்து நியமிக்கப்பட்ட பொது நல உதவியாளர்களையும் குறிப்பிடுகிறேன். ஆர்வம் குறைந்த, வசதிகள் அற்ற, கல்வியறிவு அற்ற ஏழை மக்களுக்கு உதவ நியமிக்கப்பட்ட உதவியாளர்களுக்கும், நிரூபிக் கப்பட்ட வெற்றி முறைகள் தெரியவில்லை; எனவே அவர்கள் அந்த முறைகளை யாருக்கும் போதிப்பதில்லை.

ஏழைகள் இப்பொழுது கோஷ்டியாய்க் கோஷம் இடுகிறார்கள். நாங்கள் ஏழைகள், நாங்கள் தனி நபர்கள். எனவே இவர்கள் தனி நபர் ஆன ஏழைகள். நாங்கள் ஏழைகள் என்ற எதிர்மறை கோஷத்திற்கு மாறாக நான் வெற்றி பெறுவேன் என்று நேர்மறை கோஷம் இடக் கற்றுத் தர வேண்டும்.

நேர்மறை கோஷம் 'நான் வெற்றி பெறுவேன்' என ஆயிரக் கணக்கான முறைகள் சொல்லப்பட வேண்டும். கூடவே நிரூபிக்கப்பட்ட வெற்றி முறைகள் அவர்களுக்குப் போதிக்கப்பட்டு அவர்கள் அதைப் பயன்படுத்தத் தூண்ட வேண்டும். சுலப வெற்றி அவர்கள் கையில்!

நிரூபிக்கப்பட்ட வெற்றி முறைகள் ஏழ்மையை, மட்ட சுபாவத்தை வெற்றியாய் மாற்றிக் காட்டும். எனவே யாரும் ஆர்வமற்ற, கல்வியறிவு குறைந்த வசதி அற்ற ஆண்கள், பெண்கள், குமரர்கள் லட்சக்கணக்கான பேர் - நிரூபிக்கப்பட்ட வெற்றி முறைகளைப் பெற்று, புரிந்து கொண்டு கற்று உபயோகப்படுத்தலாம். சுலபமாய், நிச்சயமாய் வெற்றி பெறலாம்.

பொதுநல நிதி அதிகமாக வாங்குவதன்று வெற்றி; நிரூபிக்கப்பட்ட வெற்றி முறைகளைப் பயன்படுத்தி பொதுநல நிதியிலிருந்து பணம் பெறாமலிருப்பது தான் வெற்றி.

யாரும் வெகு சுலபமாய் வெற்றி பெறலாம்.

எல்லோரும் வெகு சுலபமாய் வெற்றி பெற வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவ்வளவு பெரிய மரக்கறியினைப் பார்த்ததுண்டா?






அன்றாட உணவிற்காக உற்பத்தி செய்யப்படும் மரக்கறிகள் பல்வேறு ஊட்டச்சத்துக்களை தன்னகத்தே கொண்டு மனிதனின் ஆரோக்கியத்தை பேணுகின்றன. இப்படிப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த மரக்கறிகள் உலகசாதனை படைத்தால் எப்படி இருக்கும்? ஆம் அசாதாரண அளவுகளில் உற்பத்தியாகி உலகசாதனை படைத்த மரக்கறிகள் சிலவற்றையே படங்களில் காண்கின்றீர்கள்.





# நீர்த்தாங்கி வடிவிலான ஆடம்பர வீடு





பிரித்தானியாவைச் சேர்ந்த ஜோடி ஒன்று வழமைக்கு மாறாக நீர்த் தாங்கியின் வடிவில் வீடு ஒன்றினை மிகவும் நேர்த்தியான முறையில் அமைத்துள்ளனர். தரை மட்டத்திலிருந்து 21 மீற்றர்கள் உயரத்தில் அமைக்கப்பட்டுள்ள இந் நீர்த்தாங்கி வீடானது ஜேர்மனியின் கிழக்குப்பகுதியில் காணப்படும் Yoahimshtal எனும் பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

# உலகின் மிகப்பெரிய டென்னிஸ் மட்டை

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் 50 அடி நீளமான டென்னிஸ் மட்டையொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. உலகில் மிகப் பெரிய டெனிஸ் மட்டை என இது கருதப்படுகிறது.

அமெரிக்காவின் புகழ்பெற்ற முன்னாள் டென்னிஸ் விளையாட்டு வீராங்கனை பில்லி ஜீன் கிங்கை கௌரவப்படுத்தும் வகையில் இப்பிரமாண்ட டென்னிஸ் மட்டையை ஆஷ்ரிடா பர்மன் என்பவர் தயாரித்துள்ளார்.

ஒரு பஸ் அளவிலான இந்த டென்னிஸ் மட்டையானது 1970களில் பில்லி ஜீன் கிங்கினால் பயன்படுத்தப்பட்ட டென்னிஸ் மட்டையின் சாயலில் உள்ளது.

இந்த மட்டையின் கைப்பிடியானது மிகப்பெரியதாகும். சாதாரண ஒரு மனிதன் இக்கைப்பிடியை தனது கரங்களால் தழுவிப்பிடிப்பதும் மிகவும் கடினமானதாக அமையும்.

"உலகின் பல்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்கள் எமது குழுவில் உள்ளனர் நியூஸிலாந்தை சேர்ந்த ஒருவர் பலகை வேலையை முடித்துக்கொண்டுள்ளார். இதேபோல் தொழில்சார் வயலின் கலைஞர் ஒருவர் இந்த டென்னிஸ் மட்டையின் பின்னல்களை வடிவமைக்கிறார். மேலும் ஜேர்மனை சேர்ந்த ஒருவர் பலகை தொடர்பான திட்டங்களை வகுத்துள்ளார்" என ஆஷ்ரிடா பர்மன் தெரிவித்துள்ளார்.

மேற்படி குழுவானது ஏற்கனவே உலகின் மிகப்பெரிய பென்ஸிலை உருவாக்கி சாதனைப் படைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# உலகின் மிக விலையுயர்ந்த கடிகாரங்கள்

வெள்ளி, தங்கம் போன்ற விலையுயர்ந்த உலோகங்களாலும் விலையுயர்ந்த கற்களாலும் செய்யப்பட்ட கடிகாரங்கள் இவை. இவற்றை மிகப்பெரிய செல்வந்தர்கள் தமது வீடுகளில் அலங்காரப் பொருட்களாக பயன்படுத்துகிறார்கள்.





# மனித முகத்தை ஒத்த உருவமைப்பைக் கொண்டிருக்கும் மீனினம்!



உலகிலிருக்கும் மீனினங்களில் தனித்துவமான மீனினமொன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது, மனித முகத்தை oththiruppathudan நீளமான மூக்கையும் கொண்டுள்ளது. மேலும் தான் வாழும் சூழலுக்கேற்ப நிறம் மாறும் தன்மையும் இதன் தோலுள் அமைந்துள்ளது. unicorn எனப் பெயரிடப்பட்டுள்ள இந்த மீனினம் Weymouth, Dorset பகுதிக் கடலில் அதிகமாகத் தென்படுகிறது. 25 அங்குலம் வரை வளரக் கூடிய இது இந்தியக் கடலிலும் அதிகமாகக் காணப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முத்தத்தை குறித் ஆண்ட்ரியாவின் பதில்

யுத்தம் என்றாலும், முத்தம் என்றாலும் அவ்வளவு எளிதில் ஷேக் ஆகாதவர் ஆண்ட்ரியா. நடிகை, பாடகி, டப்பிங் ஆர்ட்டிஸ்ட் என்று திறமைகள் பல வைத்திருப்பவர் தன்னைப் பற்றி எப்போதும் போல வெளிப்படையாகப் பேசுகிறார். அவரது பேட்டியிலிருந்து...

**நீங்க ஒரு தியேட்டர் ஆர்ட்டிஸ்ட். அந்த அனுபவம் சினிமாவுக்கு உதவியாக இருக்கிறதா?**

நாடகங்களில் நடிக்கிற போது நிறைய கஷ்டப்பட்டிருக்கிறேன். அந்த கஷ்டம்தான் நான் சினிமாவில் தொடர்ந்து இருக்கக் காரணம். நேரடியாக சினிமாவுக்கு வந்திருந்தால் சினிமாவை விட்டே ஓடிப்போயிருப்பேன். இந்தப் பொறுமைக்கு என்னோட நாடக அனுபவங்கள் தான் காரணம். இன்றைக்கு சினிமாவில் எனக்கென்று ஒரு இடம் இருக்கிறதுக்கு நாடக அனுபவங்கள் முக்கிய காரணம் என்று சொல்லலாம்.

**கமல் படத்தில் நடிச்சிருக்கிறீர்கள்...?**

சினிமாவில் திறமைஇருந்தும் சாதிக்க முடியாதவர்கள் இருக்கிறார்கள். அதே மாதிரி எதுவுமே இல்லாமல் முன்னுக்கு வந்தவர்களும் இருக்கிறார்கள். நான் திறமையான பெண். திறமை இருந்தால் யார் படமாக இருந்தாலும் உங்களை தேடி வரும். செல்வராகவன், கௌதம், கமல் என்று பெரி கலைஞர்களுடன் வேலை செய்யும் போது பெருமையாக இருக்கு.

**விஸ்வரூபம் அனுபவம் எப்படியிருந்தது...?**

என் சினிமா கேரியரில் மிக நல்ல அனுபவம் என்று சொல்லலாம். இப்படியும் ஒரு ஷூட்டிங் ஸ்பாட் இருக்கும் என்று விஸ்வரூபம் படப்பிடிப்பில்தான் தெரிந்து கொண்டேன். கமல் படங்களில் வேலை பார்ப்பது ஒருவகையில் சவாலானது. அதை நான் வெற்றிகரமாக கையாண்டிருக்கிறேன் என்று நினைக்கிறேன். அப்படியே ஆளையே மாற்றுகிற கேரக்டர் எல்லாம் இல்லை. அழகான ஸ்டைலிஷான ஆண்ட்ரியாவை இதில் நீங்கள் பார்க்கலாம்.

**உங்களுக்கு நீங்களே டப்பிங் பேசுவதில் உறுதியாக இருக்கிறீர்களாமே?**

நாம் நடித்தால் நாம்தான் டப்பிங் பேச வேண்டும். அப்படி பேசினால்தான் சரியாக இருக்கும். எந்த உச்சரிப்பையும் கவனத்தில் வாங்கி சொந்தமாக பேசிவிடுவேன். ஆனால் மலையாளம் மட்டும் இன்னும் சரியாக வரவில்லை.

**மலையாளப் படங்களிலும் நடிக்கிறீர்களே...?**

ஆமாம், அங்கேயிருந்து நல்ல கேரக்டர்கள் வருது. இப்போதுகூட அன்னையும் ரசூலும் என்கிற படத்தில் நடிக்கிறேன். இயக்குநர் ராஜிவ் ரவி. அனுராக் காஷ்யபின் படங்களுக்கு ஒளிப்பதிவு செய்திருக்கிறார். பாசிலோட மகன் பஹத் பாசில் ஹீரோ. இந்தமுறை எப்படியும் மலை யாளத்தை படித்து டப்பிங் பேசிடுவேன் என்று நினைக்கிறேன்.

**தாப்ஸி, இலியானாவுக்கெல்லாம் டப்பிங் பேசுகிறீர்களே?**

ஆண்ட்ரியா என்றால் இவ்வளவுதான் என்று ஒரு இமேஜில் சிக்க எனக்கு விருப்பமில்லை. என்னால் எல்லாமும் முடியும். இதுதான் சந்தோஷமாக இருக்கு.


**சமீபத்தில் வெளியான அந்த முத்தக் காட்சி...?**

18 மாதங்களுக்கு முன்னர் நடந்த சம்பவம். அந்தப் படங்கள் வெளியானதில் எனக்குக் கவலையில்லை. முக்கியத்துவம் இல்லாத அந்த ரிலேஷன்ஷிப்பை மறுபடிமறுபடி பேசிக் கொண்டிருக்க எனக்கு விருப்பமில்லை.



## சூர்யா, த்ரிஷா ஜீ








## ரொமாண்டிக் காமெடி விருந்து



மெரினாவுக்குப் பிறகு பாண்டிராஜ் இயக்கி உள்ள படம் 'கேடி பில்லா கில்லாடி ரங்கா'. இந்தப் படம் ரொமாண்டிக் கொமெடியாக உருவாகி வருகிறது. அவர் அறிமுகப்படுத்திய விமல், சிவ கார்த்திகேயன் இருவரும் ஹீரோக்கள். சென்னையில் தொடங்கிய படப்பிடிப்பு தற்போது திருச்சியில் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. இதனையடுத்து படத்தின் டிரையலர் விரைவில் வெளியிட படக்குழு திட்டமிட்டுள்ளது.

## திருடன்?



நான் படத்தின் மூலம் நடிகர் தயாரிப்பாளராக மாறிய விஜய் ஆண்டனி அடுத்தப் படத்துக்கு தயாராகிவிட்டார். படத்தின் பெயர் திருடன். நான் படத்தின் மேக்கிங், இசை, விஜய் ஆண்டனியின் நடிப்பு என எல்லா அம்சங்களும் பரவலான கவனிப்பை பெற்றிருக்கிறது. வசூலும் மோசமில்லை. இதனால் ஊக்கம் பெற்றவர் அடுத்தப் படத்தை அறிவித்துள்ளார்.

## நான் சில்க் ஸ்மிதா இல்லை



கூட்டத்தில் வந்து ஆடிவிட்டுப் போகும் நடிகை அல்ல சில்க் ஸ்மிதா. இந்திய சினிமா வரலாற்றில் தனக்கென தனி இடம் பிடித்திருக்கிறார். துணிச்சல் மிக்கவரான சில்க் வேடத்தில் நான் நடிப்பது எனது அதிர்ஷ்டம். அவருடன் என்னை ஒப்பிட்டு சிலர் விமர்சனம் செய்கிறார்கள். சில்க் ஸ்மிதா கதாபாத்திரத்தில் தான் நடிக்கிறேனே தவிர நான் சில்க் ஸ்மிதா அல்ல. இவ்வாறு சனா கான் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழுக்கு வரும் மலையாள ஹீரோயின்

மலையாள நடிகை இஷா தல்வார் தமிழ் படத்தில் அறிமுகமாகிறார். இயக்குநர் கே.பாலச்சந்தர் இயக்கத்தில் ரஜினிகாந்த் இரட்டை வேடத்தில் நடித்த படம் 'தில்லு முல்லு' 1981ம் ஆண்டு வெளியான இப்படம் அதே பெயரில் ரீமேக் ஆகிறது. ரஜினி ஏற்ற வேடத்தை தமிழ் படம் ஷிவா ஏற்று நடிக்கிறார். அவருக்கு ஜோடியாக இஷா தல்வார் நடிக்கிறார்.



# ரஜனி சாரின் கொமடி சூப்பர்

'வாலு' கொமெடி படம் என்பதால், அதற்காக கொமெடி சென்ஸை ரஜினி படங்களை பார்த்து கற்றுக் கொள்கிறாராம் சிம்பு. இது பற்றி அவர் கூறும்போது, 'தம்பிக்கு எந்த ஊரு', 'அண்ணாமலை', 'குரு சிஷ்யன்' ஆகிய படங்களில் ரஜினி சாரின் கொமெடி படு சூப்பராக இருக் கும், அவரைப் போல எந்த ஹீரோவும் கொமெடியில் அசத்தி யது இல்லை, இப்ப நான் நடித்து வரும் 'வாலு' படம் கூட காமெடி படம் தான், இந்தத் தடவையும் சந்தானம் கூட்டணி அசத்தும், கொமெடிக்கு முக்கியத்துவம் என்பதால் ரஜினி சாரின் பழைய படங்களிலிருந்து கொமெடிகளைக் கற்று வருகிறேன்' என்றார் சிம்பு.

# இடைவெளி சகஜம்தான்

தமிழில் என் முதல் படத்துக்கும், அடுத்த படத்துக்கும் இடைவெளி ஏற்பட்டது. இது நானாக ஏற்ப டுத்தியதுதான். சினிமாவில் இதுபோன்ற இடைவெளி ஏற்படுவதை தவிர்க்க முடி யாது. அடுத்து 'கழுகு' சத்யசிவா இயக்கும் 'செவப்பு' படத்தில் நடிக்கி றேன். தெலுங்கு நடிகர் நவீன் சந்திரா ஹீரோ என்கிறார் நடிகை ரூபா மஞ்சரி



# ...ன்ஸ் ஏலத்துக்கு வருது

ஆதரவற்ற குழந்தைகளின் நல்வாழ்வு ...காக பிரபல நடிகர், நடிகைகள் அணிந்த ...ஸ் உடைகள் ஏலத்துக்கு வரவுள்ளது. இதிலிருந்து வரும் நிதி ஆதரவற்ற ...ழந்தைகள் கல்விக்காக செலவிடப்பட ...ளது. பாலிவுட், கோலிவுட் நடிகர்களிடம் ...ங்கள் அணிந்த ஜீன்ஸ் பேன்ட்களை ...டி ஆதரவற்ற குழந்தைகள் அமைப்பான ...க்ரமா வேண்டுகோள் விடுத்திருந்தது. ...தனை அவர்கள் ஏற்றனர். இது பற்றி ...மைப்பாளர் ஷோபா கூறியது ஆதரவற்ற ...ழந்தைகளின் கல்வி வளர்ச்சிக்கு நிதி ...டுவதற்காக பிரபல நட்சத்திரங்களிடம் ...வர்கள் அணிந்த ஒரு ஜீன்ஸ் பேன்டை ...கையெழுத்திட்டு தர வேண்டும் என்று ...கட்டிருந்தோம். அதற்கு நல்ல பலன் ...த்திருக்கிறது. இவ்வாறு சேகரிக்கப்படும் ... ஒரே இடத்தில் ஏலம் விடப்படும். அதிக ...க்கு ஏலம் கேட்பவர்கள் கையோடு அதை ...துச் செல்லலாம். ஸ்டார் அந்தஸ்துக்கு ...தந்தார்போல் ஏல தொகை மாறுபடும். ...தொப்பச்சன், சூர்யா, மாதவன், விக்ரம், ..., த்ரிஷா உள்ளிட்டோர் தங்களின் ஜீன்ஸ் ...டையை தர சம்மதித்திருக்கிறார்கள். ...யிடமும் கேட்டிருக்கிறோம். அவர் தனது ...ழ்த்துக்களைத் தெரிவித்திருக்கிறார். இவ்வாறு ஷோபா கூறினார்.

# ...ன்னாவுடன் ...சேர ஆசை



...து கோலிவுட் மிகவும் ...க இருக்கும் நடிகர் .... அப்படி பிஸியான ...மிழில் பிஸியில்லாத ...ான தமன்னாவுடன் ...சர வேண்டும் என்று ...பத்தை தெரிவித்துள் ...த்தில் விழா ஒன்றில் ...வா, தன்னை தமன் ... ரசிகர் என்று கூறிய ... அவருடன் ஜோடி ... நடிக்க வேண்டும் ...னுடைய ஆசையை ...வளிப்படையாகத் ...தெரிவித்தார்.



# இரட்டிப்பு சந்தோஷத்தில் தமன்னா

ஹிருத்திக்ரோஷ னின் நடனம் பற்றி அனைவருக்கும் தெரியும். அவரின் நாடி நரம்பும் நடனமாடும். அவரே தமன்னாவின் நடனத்தை சிலாகித்து சொல்லியிருக்கிறார். 'என்னுடன் நடித்த பல நடிகைகளைவிட தமன்னாவின் நடனம் சிறப்பாக இருக்கிறது எல்லோராலும் தமன்னா அளவுக்கு ஆட முடியாது' என்று அள்ளி வீசியிருக்கிறார் இதனால் தமன்னா இந்தியில் தன்னை முழுமையாக அர்ப்பணிக்க முடியும் என சந்தோஷத்தில் உள்ளார்.

# விமர்சனம்




சூப்பர்மேன், பேட்மேன், ஸ்பைடர்மேன், அயன்மேன் ஆகிய ஹொலிவுட் சூப்பர் ஹீரோ படங்களுக்குப் போட்டி யாக தமிழில் வெளிவந்திருக்கும் முதல் சூப்பர் ஹீரோ கதையம்சம் உடைய படம்தான் 'முகமூடி'.

வீட்டில் தண்டச்சோறு, வெட்டி ஒபிஸர் என பெயர் எடுக் கும் ஹீரோ ஜீவா, தான் கஷ்டப்பட்டு, இஷ்டப்பட்டு பயின்ற தற்காப்புக் கலை மூலம் வெளியில் தீமைகளுக்கு தீங்கு செய்து நன்மைக்கு நாற்று நடுகிறார். இதனால் ஜீவாவா லும் அவரது தற்காப்பு குரு செல்வாவாலும் தொடர் பாதிப்பிற்கு உள்ளாகும் கொள்ளைக் கும்பல் தலை வன் நரேனும் அவரது சகாக்களும் குருவையும், சிஷ்ய னையும் தீர்த்துக் கட்ட முயற்சிக்கின்றனர். அதிலிருந்து ஜீவா எப்படி தப்பித்து நரேன் அண்ட் கோவினரை தனது சூப்பர் ஹீரோ பவரால் கூண்டோடு கைலாசம் அனுப்பு கிறார் என்பதுதான் முகமூடி படத்தின் மொத்தக் கதை யும், இதனூடே ஜீவாவிற்கும் பொலீஸ் ஒபிஸர் நாசரின் மகள் பூஜா ஹெக்டேவுக்குமிடையேயான காதலையும் கலந்துகட்டி கலர்புல்லாக முகமூடியை தர முயற்சித்தி ருக்கும் இயக்குநர் மிஷ்கினை பாராட்டியே ஆக வேண்டும்!

தமிழில் இப்படி ஒரு சூப்பர் ஹீரோ சப்ஜெக்டை முதன்முறையாக முயற்சித்திருக்கும் இயக்குநர் மிஷ் கின் சொன்னதை ஏன்? எதற்கு? என்று கேட்காமல் செய்திருக்கும் நடிகர் ஜீவா முகமூடிக்காக ரொம்பவும் கஷ்டப்பட்டிருப்பது ஒவ்வொரு காட்சியிலும் அப்படியே தெரிகிறது. சில இடங்களில் அது கொமெடியாகவும் தெரிவதுதான் முகமூடியின் பலவீனம்! ஜீவா தன் தாத்தா வின் உதவியுடன் சூப்பர் ஹீரோவாக படிப்படியாக உருவாவது எல்லாம் ஓ.கே. தற்காப்பு கலையை தீவிர மாகப் பயிலும் ஒருவர், குடி, கும்மாளம் என்று ஆரம்பக் காட்சிகளில் இருப்பதும், லட்சியமே இல்லாமல் சுற்று வதும் சுத்தமாக நம்ப முடியாதது. மிஷ்கின் நினைத்தி ருந்தால் இவற்றை தவிர்த்திருக்கலாம்! மற்றபடி மெலிதாக பூஜா ஹெக்டேவுடன் பிறக்கும் காதலுடன் சூப்பர் ஹீரோ வாக ஜீவா சூப்பர்ப்!

கொள்ளைக்கும்பல் தலைவன், அங்குசாமியாக நரேன் நடுங்க வைக்கிறார்! சுத்தியலும் கையுமாக அவர் திரி வது முகமூடியின் முகமூடியை உடைக்கத்தான் எனப் பார்த்தால் அது சும்மா ஷோவிற்குத்தான் என்பது மாதிரி புஸ்ஸாகிப் போகிறது. அதேமாதிரி க்ளைமாக்ஸ் நெருங்க நெருங்க நரேன் செய்யும் மேனரீஸங்களும், தாங்க லைடா சாமி எனும் அளவில் ஜீவாவுடன் சேர்ந்து ரசிகர்களையும் சித்திரவதை செய்வது வேதனை! நரேனின் மேனரீஸங்களை விடுங்கள் ஜீவாவை ஒரு காட்சியில் அடித்து உதைத்து, அவர் பேசும் டயலாக்கி லாவது பேட்மேன், ஸ்பைடர்மேன், சூப்பர்மேன், அயர்ன்மேன் முகமூடி நீ டவுன்மேன்... என்றோ நீ டவுன் மாஸ்க்மேன் என்றோ ரைமிங் பன்ச் இருந்திருக்கலாம் அதுவும் மிஸ்ஸிங்! மிஸ்கினின் கிங் எங்கே என்று தேட வேண்டியதாகிவிடுகிறது! மற்றபடி நாயகி பூஜா ஹெக்டே, நாசர், செல்வா, கிரீஷ்கர்னாட் எல்லோரும் தங்கள் பாத்திரமறிந்து பளிச்சிட்டிருக்கின்றனர். முகமூடி ஜீவாவை அவர் வாயாலேயே சொல்லும் வரை பூஜாவிற்கு தெரியாமலே இருப்பது சுத்த ஹம்பக்!

மெயின் டைரக்டர் மிஷ்கினை விட, மியூசிக் டைரக்டர் கே-க்கு தான் படத்தில் செமவேலை! அதை வெகு சிறப்பாக பின்னணி இசையிலும் பாடல்கள் இசையிலும் செய்திருக்கிறார் கே. அதிலும் வாயமூடி சும்மா இருடா..., பார் ஆனர்த்தம்... பாடல்களில் கே கலக்கி இருக்கிறார். சத்யாவின் ஒளிப்பதிவும், கே.வின் இசை மாதிரியே முகமூடியின் பெரும்பலம்! ஆனாலும், சீரியஸான கதையில் சிறுபிள்ளைத் தனமாக பொதிந்து கிடக்கும் சில விஷயங்களை மிஷ்கின் தவிர்த்திருந்தார் என்றால் முகமூடி கம்பீரமான ராஜமுடி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் சுடர்



"நானும் உங்களை மாதிரி இதே ஸ்கூலில் படிச்சவர்தான் இப்ப இதே ஸ்கூலில் ஆசிரியராகிவிட்டேன். இதிலிருந்து என்ன தெரிகிறது?"

"இங்கு படிச்சா வேறெங்கும் வேலை கிடைக்காதென்று தெரியிது சேர்!"

## வழி காட்டுங்கள்





# பணம் கிடைக்கும்!

ஒருமுறை சுவாமி விவேகானந்தர் இரண்டாம் முறையாக அமெரிக்கா சென்றார். அங்கு வேதாந்த பிரச்சாரப் பணிகளுக்கிடையில் அவர், அவ்வப்போது அமைதியான இடங்களுக்குச் சென்று உலாவுவது வழக்கம்.

ஒருநாள், அவர் ஹொலிஸ்டர் என்ற அமெரிக்க நண்பருடன் சென்று கொண்டிருந்தார். தூரத்தில் பரந்த வெளியில் ஒரு சிறிய வண்ணக் கொடி காற்றில் அசைந்து கொண்டிருந்தது.

அங்கே என்ன நடக்கிறது?" என்று விசாரித்தார் சுவாமிஜி.

அங்கு ஒரு விளையாட்டுப் போட்டி நடந்து கொண்டிருக்கிறது. தரையில் இருந்த ஒரு குழியில் பந்தைச் சரியாக வீசியெறிய வேண்டும். இந்த விளையாட்டில் திறமைசாலிகள் கூட தோற்றுப் போவதுண்டு. குழியில் விழும் வகையில் சரியாகப் பந்து வீசும் சிறந்த வீரர்களுக்கு நான்கு முறை வாய்ப்பளிக்கப்படும். ஆரம்ப நிலையில் இருப்பவர்களுக்கு ஏழெட்டு முறை பந்து வீசுவதற்கு வாய்ப்புக் கொடுப்பர்," என்றார் ஹொலிஸ்டர்.



அதைக் கேட்ட சுவாமிஜி, "நான் ஒருமுறை பந்து வீசி வெற்றி பெறுகிறேன்," என்றார்.

ஹொலிஸ்டர் சிரித்தபடி, "உங்களால் முடியாது சுவாமிஜி!" என்று மறுத்துக் கூறினார்.

சுவாமிஜி தம்மால் முடியும் என்று உறுதியாகச் சொன்னார்.

இருவரும் பந்தயம் கட்டினர்.

அப்போது அங்கே சுவாமிஜியின் மற்றொரு நண்பர் வந்தார். அவர் இந்தப் போட்டி, பந்தயம் பற்றி கேட்டறிந்தார்.

மெல்லிய குரலில் அவர் சுவாமிஜியிடம், "சுவாமிஜி, உங்களால் நிச்சயமாக இதில் வெற்றி பெற முடியாது. மிகவும் சிறந்த விளையாட்டு வீரர்களே ஒரே தடவையில் பந்து வீசி வென்றதில்லை," என்று தெரிவித்தார்.

சுவாமிஜி புன்னகை தவழ, நண்பர்களின் முன்னிலையில் பந்தை எடுத்தார். சட்டையைக் கைக்கு மேலே தூக்கிவிட்டுக் கொண்டார். குழிக்கு மேல் அசைந்து கொண்டிருந்த கொடியை உற்றுப் பார்த்து துல்லியமாகப் பந்தை வீசினார்.


என்ன ஆச்சரியம்! பந்து சரியாகக் குழியில் போய் விழுந்தது!

உடனிருந்த அமெரிக்க நண்பர்கள் மகிழ்ச்சியில் ஆர்ப்பரித்தனர்.

அவர்களில் ஒருவர் சுவாமிஜியிடம், "நீங்கள் வெற்றி பெறுவதற்கு உங்களுடைய யோக சக்தி பயன்பட்டதா?" என்று வினவினார்.

நான் அற்பமான விஷயங்களுக்கு என் யோக சக்தியைப் பயன்படுத்துவதில்லை. நான் என்ன செய்தேன் என்பதை இரண்டு வாக்கியங்களில் சொல்கிறேன். முதலில் குழியிருக்கும் தூரத்தைப் பார்வையால் அளந்து கொண்டேன். என் கை வலிமை எனக்குத் தெரியும். இரண்டாவது, போட்டியில் வென்றால் பந்தயப் பணம் கிடைக்கும் என்று என் மனத்திற்குக் கூறினேன். அவ்வளவுதான்," என்றார் சுவாமிஜி.

கேட்டவர்கள் அசந்து போயினர்.




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




ரோசன்னை நடிச்சுக் காட்டிய 'மருந்தைக் குலுக்கிப் போட்டு குடிக்க வேணும்' காண்ட நகைச்சுவைக் காட்சியை எழுதிய பிறகுதான் வீட்டில் நடைபெற்ற சுவாரசியமான ஒரு சம்பவம் ஞாபகத்துக்கு வருகிறது.

பரமசிவத்தாரின்ர பேரன் கண்ணை மூடிக் கொண்டு ஏதோ எழுதிக் கொண்டிருந்தான். தாய் "என்ன கண்ணை?... கண்ணை மூடிக் கொண்டு இருந்து எழுதுகிறாய்...? ஏன்?... என்ன நடந்தது?..." என்று கேட்டார்.

"நீங்கள் தானே அம்மா சொன்னனிங்கள் பார்க்காமல் எழுதச் சொல்லி... அதுதான் கண்ணை மூடிக் கொண்டு பார்க்காமல் எழுதுகிறேன்" என்றது அந்த நாலு வயதுச் சுட்டி.

எங்கடை அப்பு முந்தி உப்புடித்தான் எருக் கடகத்தை என்ரை தலையில சுமத்தி விடும்போது கடகத்தைத் தூக்கிப் பிடித்தவாறு 'பாக்' பக்கத்தைத் தட்டிப் போட்டுக் கடகத்தை தலையில் வைக்கச் சொல்லுவார். (பண்பு கருதி அவர் கூறிய வார்த்தையை தவிர்த்துவிட்டு 'Back' பக்கம் என்று எழுதியுள்ளேன். இவர் ஒரு கண்டறியாத பண்புள்ள ஆள் என்று நீங்கள் முணுமுணுப்பது காதில் கேட்கிறது...)

நான் ஒற்றைக்கையால் கடகத்தை உயர்த்திக் கொண்டு மற்றக் கையால் எனது Back ஐ தட்டிவிட்டு கடகத்தைத் தலையில் வைக்க எங்கடை அப்பு "எடேய் கடகத்தின்ரை பின் பக்கத்தைத் தட்டடா... அல்லது அதில இருக்கிற மண் எரு கண்ணுக்கை விழுந்து நாசம் கட்டிப் போடும்" என்று எச்சரித்த பின்பே அவர் கூறியதன் தார்ப்பரியம் விளங்கியது.

அதுதான் அறிவுறுத்தல்கள், அறிவித்தல்கள் செய்யும் போது விளக்கமாக வழங்க வேண்டும். இல்லையேல் மருந்தை குலுக்கிக் குடிப்பது போல கண்ணை மூடிக் கொண்டு எழுதுவது போல பின் பக்கத்தைத் தட்டிப் போட்டு கடகத்தைத் தலையில் வைத்ததுபோல ஆகிவிடும்.

மேற்கூறப்பட்டவை தமிழில் கூறியவற்றை நாம் விளங்கிக் கொண்டு செயற்பட்டவற்றைச் சுட்டி நிற்கின்றன. இதேவேளை மாற்றுமொழியில் கூறப்படுபவற்றை நாம் விளங்கிக் கொள்வதும், எங்கடை மொழியில் நாம் கூற நினைத்தவற்றை அவர்கள் விளங்கிக் கொள்வதும் நல்ல பம்பல்தான். உப்பிடித்தான் ஐ.பி.கே.எப். காலத்தில் திடீர் திடீரென வழிமறிப்புக்கள், விசாரணைகள் என்று வரும்.

சனங்களைச் சுமந்தவாறு பஸ் வந்து கொண்டிருந்தது. தூரத்திலே தோன்றிய ஐ.பி.கே.எப். பஸ்சை நிறுத்தச் சொல்லி சைகை காட்டினார்கள். பஸ் நின்றது. எல்லோரும் பஸ்ஸை விட்டு இறங்கினோம். அங்கிருந்தவாறே 'பாஞ்ச் பாஞ்ச் கம்' என்றான். என்ன சொல்கிறார்களெனத் தெரியாது திணறினர் மக்கள். "மீண்டும் 'பாஞ்ச்... பாஞ்ச்... கம்..' " என்றார்.

பரமசிவம் இருக்கப் பயமேன்... "பாய்ஞ்சு பாய்ஞ்சு வரச் சொல்லுறாங்கள்... பாய்ஞ்சு பாய்ஞ்சு போவம்" என்று கூறினேன்.

முயல் பாய்ச்சலில் வரச் சொல்லுறாங்களா? குதிரைப் பாய்ச்சலில் வரச் சொல்லுறாங்களா? தவளைப் பாய்ச்சலில் வரச் சொல்லுறாங்களா? ஒன்றும் புரியாமலிருந்தது. நின்ற நிலையில் துள்ளித் துள்ளிப் பாய்ஞ்சு அவர்களை நோக்கி பரமசிவம் தலைமையில் முன்னேறினோம்.

# பாய்ஞ்சு பாய்ஞ்சு ஓடியது



மீண்டும் அவர்கள் கத்தினார்கள். "நோ... நோ... பாஞ்ச் கம்" என்று ஐந்து விரல்களைக் காட்டினான். இஞ்சு இஞ்சு பேராகப் பாய்ஞ்சு பாய்ஞ்சு அவர்களிடம் சென்றோம். "நோ ஜம்ப்... பைவ் பைவ் கம்" என்று அவர்கள் கூறவே அதனைத் தமிழில் பஸ்ஸிற்கு அண்மையில் நின்றவர்களுக்கு உரத்துக் கூறினோம்.

'ஏக், தோ, தீன், சார், பாஞ்ச்... பாஞ்ச்... பைவ்... பைவ் பைவ் கம்' என்று விரல்களில் அவர்கள் எண்ணிக்காட்டி கூறிய பின்பே பாஞ்ச்... என்பது ஐந்தைக் குறிக்கும் என்று அப்போது தான் எங்களுக்கு விளங்கியது. பாய்ஞ்சு பாய்ஞ்சு போய் களைப்பு மாறாமல் இருந்தது.

இதேபோன்று ஒரு செயலமர்வில் சிங்கள நண்பர் ஒருவர் "உதய மொனவத காவே?" என்று கேட்டார். சிங்களத்தில் கேட்பது ஓரளவு புரிந்தது. 'காலையில் என்ன சாப்பிட்டனீங்கள்?...' என்று கேட்பதை விளங்கக் கூடியதாக இருந்தது.

ஆனால் பதில் கூறுவது எவ்வாறு என்பதில்தான் சிறு தயக்கம் இருந்தது. காலையில் பிட்டுச் சாப்பிட்டிருந்தேன். மீண்டும் கேட்டார். 'மொனவத காவே?..' என்று.

"புட்டுவ காவா!" என்று எனது பன்மொழிப் புலமையைக் காண்பித்தேன். அப்போது பாடசாலைகளில் கதிரை, மேசைகள் களவு போன காலம். இப்படியானவர்கள்தான் 'புட்டுவ, மேசைய சாப்பிடுற ஆக்கள்' என்று பக்கத்தில் நின்றவர்களுக்கு அந்த நண்பர் சொல்லிக் கொண்டார்.

அரசாங்கச் சொத்தினை விழுங்குவதற்கென்றே எத்தனையோ பேர் உள்ளனர்.

# அலட்சியத்துக்கு கிடைத்த பரிசு



ஒருநாள் முல்லா அயலூர் ஒன்றுக்குச் சென்றிருந்தார்.

அந்த ஊரில் பொதுமக்கள் குளிப்பதற்காக ஒரு பொதுக் குளியல் அறை இருந்தது.

முல்லா அங்கே குளிப்பதற்காகச் சென்றார்.

அப்போது முல்லா மிகவும் அழுக்கான உடையை அணிந்திருந்தார். அதனால் அங்கிருந்த வேலைக்காரர்கள் முல்லாவை சரியாகக் கவனிக்கவில்லை. அலட்சியமாக அவரை நடத்தினர். சீக்கிரம் குளித்து விட்டுச் செல்லுமாறு அவரை அவசரப்படுத்தினர்.

குளித்து முடித்து விட்டு வெளியே வந்த முல்லா வேலைக்காரர் ஒவ்வொருவருக்கும் ஆளுக்கு ஒரு தங்கக் காசை அன்பளிப்பாகக் கொடுத்தார்.

அதைக் கண்டு வேலைக்காரர்கள் பிரமித்துப் போய்விட்டனர்.

இவர் பெரிய செல்வந்தர் என்பதை முன்னதாகத் தெரிந்து கொள்ளாமல் போய் விட்டோமே. இவரை நன்கு கவனித்து உபசாரம் செய்திருந்தால் இன்னும் நிறைய தங்கக் காசுகள் கொடுத்திருப்பாரே என்று நினைத்தனர்.

இரண்டு நாட்கள் கழித்து முல்லா மறுபடியும் அந்தக் குளியல் அறைக்குக் குளிக்கச் சென்றார்.

வேலைக்காரர்கள் முல்லாவை அடையாளம் கண்டு கொண்டனர். உடனே அவர்கள் போட்டி போட்டுக் கொண்டு முல்லாவுக்கு ராஜ உபசாரம் செய்தனர்.

உடலில் தேய்த்துக் கொள்ள நறுமணப் பொடிகள் தந்தனர். வாசனைப் பன்னீர் கொடுத்தனர்.

அவர்கள் முல்லாவை சூழ்ந்து கொண்டு அவர் உடம்பை அழுக்குப் போகத் தேய்த்து நீராடச் செய்தனர்.

உயர்தரமான துவாலை உடல் துவட்டக் கொடுத்தனர்.

பிறகு அவர் உடலில் வாசனை திரவியங்களைப் பூசினர்.

அன்று முல்லா தங்களுக்கு ஆளுக்கு ஐந்தைந்து பொற்காசுகளாவது அன்பளிப்பாகக் கொடுப்பார் என்று எதிர்பார்த்தனர்.

முல்லா ஆளுக்கு ஒரு செப்புக் காசுதான் கொடுத்தார்.

வேலைக்காரர்கள் மிகவும் ஏமாற்றமடைந்து "இவ்வளவு சிரமப்பட்டு உங்களுக்கு உபசாரம் செய்ததற்கு இந்தச் செப்புக் காசுதானா பரிசு?" என்று கேட்டனர்.

முல்லா உடனே "அன்றைய தினம் நான் உங்களுக்கு அளித்த பொற்காசு இன்று நீங்கள் செய்த உபசாரத்திற்கான பரிசு. இன்று கொடுப்பதோ அன்று நீங்கள் என்னை அலட்சியப்படுத்தியமைக்காகக் கொடுத்த பரிசு" என்று கூறியவாறே குளியலறையை விட்டு வெளியே நடந்தார்.






Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அதிகம் சிரிக்கும் பெண்கள்!



சிரிப்பு மனிதனுக்கு அழகு சேர்க்கும். சிரித்த முகத்துடன் இருப்பவர்களை எவரும் விரும்புவர். அதிலும் பெண்களின் சிரிப்புக்கு ஈர்ப்பு அதிகம். ஆண்களைவிட பெண்களே அதிகம் சிரிக்கின்றார்கள்.

சிரிப்பு மகிழ்ச்சி தரும் விடயமாக இருந்தாலும் பெண்கள் நீண்ட நேரம் சிரித்துக் கொண்டிருப்பார்கள். அவர்கள் ஏன் அப்படி இடைவிடாமல் சிரிக்கிறார்கள் என்று ஒரு ஆய்வு நடத்தப்பட்டது.

கலிபோர்னியாவில் உள்ள ஸ்டேன்போட் பல்கலைக்கழகம் இந்த ஆய்வை மேற்கொண்டது. 10 ஆண்களையும் 10 பெண்களையும் தேர்வு செய்து கார்ட்டூன் படங்களைக் கொடுத்து ஆய்வு செய்யப்பட்டது. அவர்களின் மூளையில் ஏற்படும் மாற்றங்களும் கண்காணிக்கப்பட்டது.

கார்ட்டூன் படத்தில் இருந்த பஞ்ச் வசனம் அவர்களின் சிந்தனையைத் தூண்டி சிரிப்பை வரவழைத்தது. இதில் பெண்கள் நீண்ட நேரம் சிரித்தபடி இருந்தனர்.

இதற்கு அவர்களின் மூளையில் ஏற்படும் மாற்றங்கள் காரணமாகும். அதாவது பெண்களின் மூளையின் கார்டெக்ஸ் பகுதிக்கு முந்தைய அடுக்கு இதில் முக்கிய பங்காற்றுகிறது. அவர்களின் மூளை விவேகமாகச் செயல்படுவதுடன் அதிக எதிர்பார்ப்பின்றி இருக்கிறது. எனவே, இயல்பான நகைச்சுவை கூட அவர்களுக்கு விசேடமாகத் தெரிகிறது. இதனால் எளிதில் சிரிப்பைத் தூண்டி விடுகிறது.

பொதுவாக ஆண்களின் சிரிப்பானது தன்னை முன்னிலைப்படுத்தும் வகையில் அமைகிறது. பெண்கள் சிரிப்பானது உறவை வளர்க்கும் விதமாகவும் பிறரை நோகச் செய்யாமல் இருக்கும் வகையிலும் அமைகிறது என்கிறது ஆய்வு. ஆனால் அறிமுகமில்லாத ஆண்களிடம் சிரிப்பது பெண்களுக்குச் சிக்கல்களை ஏற்படுத்திவிடும். சிரிப்பதில் தவறில்லை. ஆனால், பிறர் மனம் நோகாமல் சிரியுங்கள்.

# பதின்ம வயதில் சருமத்தை பாதுகாக்க..



டீன்ஏஜ் எனப்படும் பதின்ம வயதுப் பருவத்தில் சருமத்தில் எண்ணெய் சுரப்பிகளின் வேலை வேகமாகவும், அதிகமாகவும் இருக்கும். அதனால் முகத்தில் பருக்கள், சருமத்தில் எண்ணெய் வழிதல், வியர்வை போன்றவை இருக்கும். இந்தப் பருவ வயதில் அடியெடுத்து வைக்கும் எல்லோரும் கடைப்பிடிக்க வேண்டிய அடிப்படை விடயங்கள் உள்ளன.

தினமும் மாலையில் வீடு திரும்பியதும் கிளென்சிங் மில்க் கொண்டு முகத்தைத் துடைத்து சுத்தப்படுத்த வேண்டும்.

தினம் இரண்டு முறைகள் கட்டாயம் குளிக்க வேண்டும். அடிக்கடி முகம் கழுவ வேண்டும். அக்குள் பகுதியில், அந்தரங்க உறுப்புகளில் ரோமவளர்ச்சி ஆரம்பிக்கிற காலக்கட்டம் இது என்பதால் அந்த விடயத்திலும் கூடுதல் சுத்தம் கடைப்பிடிக்கப்பட வேண்டும். ரேசர், ரோமம் நீக்கும் கிறீம் போன்றவற்றை உபயோகித்து ரோமங்களை அகற்றாமல், வாக்சிங் செய்து கொள்ளலாம். இதனால் சருமம் கறுத்துப் போகாது. வலியும் குறைவு.

வியர்வை நாற்றம் இந்த வயதில் தவிர்க்க முடியாதது. உடைகள் கறைபடியும். இதற்கு நல்ல தரமான 'டியோடரண்ட்' உபயோகிக்கலாம். இது உடல் நாற்றத்தைப் போக்கி, வியர்வையையும் கட்டுப்படுத்தும்.

டீன் ஏஜில் பெரும்பாலானவர்களைக் கவலைக்குள்ளாக்கும் விடயம் பரு. ஹோர்மோன் மாற்றங்கள் போன்றவற்றின் விளைவால் பருத் தோன்றும். வாரம் இரண்டு முறை இவர்கள் முகத்துக்கான 'பேக்' உபயோகிக்கலாம். டீட்ர ஒயில், கற்பூரம், கிராம்பு மாதிரி ஏதேனும் ஒன்று கலந்த பேக் நுண்ணுயிர்க் கொல்லியாகவும் வேலை செய்யும். அதிக எண்ணெய்ப் பசையையும் நீக்கும். பருக்களையும் கட்டுப்படுத்தும். பருக்கள் இருப்பவர்கள் அவற்றை நகங்களால் கிள்ளக் கூடாது.

குளிப்பதற்கு இவர்கள் அதிகக் கொழுப்பில்லாத சோப் அல்லது ஒயில் கலக்காத சோப் உபயோகிக்கலாம். இது அவர்களது சருமத் துவாரங்களை அடைக்காமலிருக்கும்.

எண்ணெய்க் குளியல் என்பதை இந்தக் காலத்து டீன் ஏஜில் இருக்கும் அனேகம் பேர் அறிந்தே இருக்க மாட்டார்கள். இவர்களுக்காக வந்திருக்கிறது shower cream. எண்ணெய் கலந்த இந்தக் கிறீமை அப்படியே தலையில் தடவிக் கொண்டு, சிறிது நேரம் ஊறித் தேய்த்துக் குளிக்க வேண்டியதுதான். எண்ணெய்க் குளியலில் கிடைத்த சுகமும், ஷாம்பு போட்டு குளித்த மாதிரிக் கூந்தலும் பளபளக்கும்.

இந்தப் பருவத்தில் பொடுகுப் பிரச்சினையும் பெரிதும் அவதி தரும். வாரம் மூன்று முறை அன்டி டான்டிராஃப் ஷாம்பு உபயோகித்துத் தலைக்குக் குளிக்கலாம். இது தவிர மாதம் ஒன்றிரண்டு முறை தலைக்கு சூடான எண்ணெய் மசாஜ் செய்து கொள்ளலாம். ஆனால், தலைக்குக் குளித்த பிறகு கட்டாயம் கண்டிஷனர் உபயோகிக்க வேண்டியது முக்கியம்.

இந்த பதின்மவயதில் அதிகப்படியான மேக்அப்புக்குப் பழகுவது தேவையில்லாதது. டீன் ஏஜின் கடைசிக் கட்டத்தில் இருப்பவர்கள் எளிமையான மேக்கப் பற்றித் தெரிந்து கொள்ளலாம். ஒயில் ஃப்ரீ ஃபவுண்டேஷன் காம்பேக்ட் பவுடர், மெல்லிய லிப்ஸ்டிக், கண் மை போன்றவற்றை உபயோகிக்கலாம். முகத்தில் எண்ணெய் வழியாமல், பளிச்செனக் காட்சியளிக்க இதுவே போதும்.

## சமையல் குறிப்பு



# மிளகுக் குழம்பு

நமது உணவில் அன்றாடம் பயன்படுத்தப்படும் மிளகு மருத்துவக் குணமுடையதாகும். இங்கு மிளகில் சுவையாகக் குழம்பு சமைப்பது பற்றி விளக்கப்படுகின்றது.

தேவையான பொருட்கள் :

மிளகு - 50 கிராம்
சீரகம் - 4 தேக்கரண்டி
தனியா - 3 தேக்கரண்டி
மிளகாய் வற்றல் - 3
புளி - சிறிது -
பெருங்காயம் - சிறிது
கடுகு - சிறிது
கறிவேப்பிலை - 6 கொத்து
நல்லெண்ணெய் - தேவையான அளவு
உப்பு - தேவையான அளவு

செய்முறை :

முதலில் ஒரு வாணலியில் சிறிது நல்லெண்ணெயை விட்டு, எண் ணெய் காய்ந்ததும் மிளகு, சீரகம், தனியா, மிளகாய் வற்றல், பெருங்காயம், கறிவேப்பிலை ஆகியவற்றைப் போட்டு நன்கு வறுக்க வேண்டும்.


பின் அவற்றை ஒரு தட்டில் போட்டு ஆற வைக்கவும். ஆறியதும் மிக்ஸியில் இவை அனைத்தையும் போட்டு, அத்துடன் புளி மற்றும் தேவையான அளவு உப்பைச் சேர்த்து தண்ணீர் விட்டு நைசாக அரைக்க வேண்டும். அடுத்து ஒரு வாணலியை அடுப்பில் வைத்து, அதில் எண்ணெய் ஊற்றி கடுகு போட்டுத் தாளிக்கவும். பின் கடுகு நன்கு வெடித்ததும் அதில் அரைத்த கலவையைச் சேர்த்து கிளற வேண்டும். கலவை நன்கு கொதித்து, கெட்டியாகி அதில் உள்ள எண்ணெய் பிரியும் நிலையில் இருக்கும். அந்த சமயத்தில் இறக்கி விடவும். இப்போது சுவையான, காரசாரமான மிளகுக் குழம்பு தயாராகிவிடும் இந்த மிளகுக் குழம்பை சோற்றுடன் பிசைந்து சாப்பிட்டால் மிகவும் சுவையாக இருக்கும்.

மகளிர் சுடர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடல் நலம்

# நீரிழிவுக்கான மருந்தை நிறுத்தலாமா?



டொக்டர் எஸ்.சுரேந்திரலிங்

**செ.கேதீஸ்வரன், காரைநகர்.**

கேள்வி : நான் நீரிழிவு நோயாளி 48 வயது. சீனிமட்டம் ஆரம்பத்தில் 512 mg/dp ஆக இருந்து இப்போது மருந்துகள் மூலம் 130 வரை குறைந்துவிட்டது. இவ்வளவு நன்றாகக் குறைந்து விட்டதால் இனிமருந்தை நிற்பாட்டலாமா?

பதில்: நீரிழிவு இன்று பலரில் உள்ள பரவலான ஒரு வியாதியாகும். இவ்வாறு தொடக்கத்தில் 512 ஆக இருந்து இப்போது 130 வரை குறைந்து இருப்பதையிட்டு நீங்கள் பூரண திருப்தி அடைகிறீர்கள் என்பதை உணர முடிகிறது. இப்போது உங்களுக்கு முன்பிருந்த உடல் உபாதைகளும் குறைந்து பூரண குணத்துடன் இருப்பதாக உணர்வீர்கள். பகலில் தூக்கம் தூக்கமாக வருவது, உடல் மெலிவு, களைப்பு முதலான எதுவும் இப்போது இராது. ஆனால் மருத்துவ விஞ்ஞானப்படி Fasting Sugar மட்டம் 110இற்கு வரவேண்டும். அப்போது தான் உங்கள் சிறுநீரகம் பாதுகாப்பாக இருக்கும். சிறுநீரகம் மட்டுமன்றி இதயம், பக்கவாதம் முதலிய நோய்த் தொல்லைகளிலிருந்து பாதுகாப்பாக இருக்கவும் இவ்வாறு சீனி மட்டத்தை 100-110 வரை வைத்திருப்பது அவசியமாகும்.

சீனி மட்டம் 200 வரை உயர்ந்தாலும் கூட சிலரில் எந்தக் குணங்குறியும் காட்டப்பட மாட்டாது என்பது இங்கு கவனிக்கப்பட வேண்டும். எனவே 500 இலிருந்த சீனி மட்டம் 130க்கு வந்ததுடன் திருப்திப்பட்டவர் கடைசியில் சிறுநீரக செயலிழப்பு பிரிவுக்கு நோயாளிகளாக வருவதை நாம் கண்டுள்ளோம். சிறுநீரக செயலிழப்பு பிரிவில் சிறுநீரகம் செயலிழந்து சிகிச்சைக்கு வருபவர்களில் பாதிப்பேருக்கு மேல் நீரிழிவு வியாதி சிகிச்சையை சரியாகக் கைக்கொள்ளாமல் இருந்தவர்களே என்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. நீரிழிவு வியாதியால் சிறுநீரகம் பாதிக்கப்படுவது வெளியில் எந்தக் குணங்குறியும் காட்டப்படாமலே உள்ளே நடந்து வரும் விபரீதமாகும். இதை கண்டறிய சிறுநீர்ப் பரிசோதனை, இரத்தப் பரிசோதனை என்பன செய்யப்பட வேண்டும். எனவே, சீனி 130க்கு வந்துவிட்டது என மாத்திரையை நிறுத்தக் கூடாது என்பதுடன் பரிசோதனைகளும் தொடர்ந்து செய்து வரவேண்டும் என்பதை இப்போது உணர்ந்திருப்பீர்கள். மேற்கூறிய சிறுநீரக சிகிச்சைப் பிரிவுக்கு வரும் நோயாளிகளிலும் உங்களைப் போலவே சீனிமட்டம் 400, 500 என்ற உச்ச அளவுகளில் இருந்து பின்னர் 140, 130 என்ற அளவுக்கு குறைந்ததும் மாத்திரைகளை கைவிட்டு அலட்சியமாக இருந்தவர்களே அதிகமானவர்கள். எனவே இவ்வாறு இருப்பதன் ஆபத்து என்ன என்பது இதன் மூலம் அறியப்படலாம். இவ்வாறு 120, 130 என்ற சீனிமட்டம் இருக்கும் போது உடலில் உபாதைகளும் தீர்ந்து விட்டபடியால் எல்லாம் சுபமே நடந்து முடிந்துவிட்டது என்ற முடிவுக்கு வந்து விடமுடியாது. சீனிமட்டம் 100-110 வரை கட்டாயம் குறைக்கப்பட வேண்டும். 80-90 என்ற அளவுக்கு குறைந்தாலும் ஆபத்து ஏதுமில்லை. எனினும் 60ஐ விடக் குறைந்தாலே நிச்சயமான ஆபத்து உண்டு. எனவே அதுவரை பயப்பட வேண்டிய அவசியமில்லை.

சிறுநீரகம் பாதிக்கப்பட்டால் அதனை மாற்ற சிறுநீரகம் தேடுவது. பின் அதைப் பொருத்த சத்திரசிகிச்சை, சத்திரசிகிச்சைக்குப் பிறகும் வாழ்நாள் பூராவும் ஆயிரக்கணக்கான ரூபாய் செலவழித்து மருந்துகள் குடிக்க நேரிடும். இதற்குப் பதிலாக 5 ரூபா, 10 ரூபா வரை விலையுள்ள மாத்திரைகளை உட்கொள்வது மூலம் இந்த லட்சக்கணக்கான ரூபாய் செலவுகளைக் குறைக்கலாமே!

## பாகற்காயில் இத்தனை மருத்துவக்குணங்கள்!



நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிந்து ஆரோக்கியத்துடன் வாழ இயற்கை அளித்த அருமருந்துதான் பாகற்காய். அதில் பாகற்காயின் இலையை சிறிது சாறு எடுத்து ஓர் அவுன்சில் சிறிது வறுத்துப் பொடித்த சீரகத் தூளைக் கலந்து காலை, மாலை இரண்டு வேளையும் உட்கொண்டால் விஷக் காய்ச்சல் நின்று விடும்.

ஒரு பிடி பாகற்காயின் இலையுடன் ஐந்தாறு மிளகைச் சேர்த்து காரமற்ற அம்மியில் அரைத்து கண்களைச் சுற்றிப் பற்றுப் போட்டு வந்தால் மாலைக்கண் நோய் குணமாகும். பாகற்காயின் இலைச் சாற்றை நிறையக் குடித்து வாந்தி எடுத்தால் பாம்பு கடித்த விஷம் நீங்கும். அதே இலைச் சாற்றை ஓர் அவுன்ஸ் எடுத்து அதில் அரை அவுன்ஸ் நல்லெண்ணெயைக் கலந்து உட்கொண்டால் கொலரா நீங்கும்.

நீரழிவுக்குக் குணம் தெரியும் வரை தொடர்ந்து ஓர் அவுன்ஸ் பாகற்காயின் இலைச் சாற்றில் உளுந்தளவு பெருங்காயப் பொடியைக் கலந்து சாப்பிட்டு வர வேண்டும். இது நீரிழ்வு வியாதிக்கு மிகச் சிறந்த மருந்தாகும். ஓர் அவுன்ஸ் பாகற்காயின் இலைச் சாற்றுடன் சமபங்கு ஆட்டுப்பால் அல்லது பசுவின் மோர் கலந்து மூன்று நாட்கள் காலையில் சாப்பிட்டு வந்தால் காசநோயை கட்டுப்படுத்தலாம்.

நம் உடலில் உள்ள பல புழுக்களினால் தான் நமக்கு நோய் வருகிறது. சரியான உணவு உண்ணும் பட்சத்தில் புழுக்கள் அழிந்து நோய் எதிர்ப்பு சக்தி உடலில் அதிகரிக்கும். உடலில் உள்ள புழுக்கள் அழிந்து நோய் எதிர்ப்பு சக்தி உடலுக்கு அதிகரிக்க இயற்கை அளித்த அருமையான காய்தான் பாகற்காய்.

பாகல் இலைச் சாற்றில் காசிக் கட்டியை உரைத்து சிரங்கின் மேல் தடிப்பாகத் தடவி வந்தால் ரத்தம் சுத்தம் செய்யப் பெற்றுச் சிரங்கு உதிர்ந்து விடும்.

பொதுவாக மேற்கிந்திய தீவுகளில் சிறுநீரகக் கற்களுக்கும், ஜுரத்துக்கும், குடல் புண், வாயுத் தொல்லைகளுக்கும் இது மருந்தாகிறது. இதன் இலையைக் கொதிக்க வைத்து, சாறு எடுத்து கல்லீரல் உபாதைக்கு பயன்படுத்துகிறார்கள்.

சர்க்கரை வியாதிக்கு மருந்தாக முற்றிய பாகற்காய் பயன்படுகிறது.

பழம் டொனிக்காகவும், மாதவிடாய் ஒழுங்கின்மையை சரிப்படுத்தவும் உதவுகிறது.

## இதயத்தில் கவனம் செலுத்துங்கள்!

இன்றைய சூழ்நிலையில் இதயம் சம்பந்தப்பட்ட நோய் பலருக்கும் ஏற்படுகின்றது. சில சமயங்களில் திடீரென நெஞ்சுவலி ஏற்பட்டு மயக்கமும் ஏற்படுகின்றது.

மருத்துவமனைக்கு சென்று பார்த்த பின்பு தான் மாரடைப்பு என்று அறியமுடிகிறது. மாறி வரும் உணவுப் பழக்கத்தினால் உடல் பருமன் அதிகமாகி மாரடைப்பு ஏற்பட காரணமாகிறது. எனவே, இதயத்தின் நலனைக் காக்க சில ஆலோசனைகளை தெரிவித்துள்ளனர் நிபுணர்கள்.



மாரடைப்பினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக முதலுதவி சிகிச்சை அளிக்க வேண்டியது அவசியம்.

சிபிஆர் பயிற்சி பெற்றிருந்தால் மாரடைப்பு ஏற்பட்டவர்களுக்கு சரியான முதலுதவி அளித்து அவர்களின் உயிரைப் பாதுகாக்க முடியும்.

எனவே, உடனடியாக உங்கள் அருகில் உள்ள மருத்துவமனைகளிலோ, பயிற்சி நிலையங்களிலோ சிபிஆர் பயிற்சி பெற்றுக் கொள்வதன் மூலம் நம் அன்பிற்குரியவர்களை பாதுகாக்கலாம்.

தினசரி மது அருந்தும் பழக்கம் உள்ளவர்களுக்கு மாரடைப்பு நோய் எளிதில் தாக்குகிறது என்கின்றனர் நிபுணர்கள்.

அதிகம் மது அருந்துபவர்களுக்கு ரத்த அழுத்தம் அதிகமாகிறது. இதனால் இதயநோய் அல்லது பக்கவாத நோய் ஏற்படுகிறது என்கின்றனர்.

மது அருந்துபவர்களுக்கு உடல்பருமன் ஏற்படுகிறது. இதுவே இதயநோய்க்கும் காரணமாகிறது. எனவே மதுப்பழக்கத்தைக் கட்டுப்படுத்தினால் இதயநோய் ஏற்படாமல் தடுக்கலாம் என்பது மருத்துவர்களின் அறிவுரை.

இதயநோய் ஏற்படாமல் தடுக்க எளிமையான காசு செலவில்லாத சிகிச்சை எதுவெனில் நடப்பதுதான். காலையிலும், மாலையிலும் அரைமணிநேரம் நடவுங்கள். இதனால் இதய நோய் மட்டுமல்லாது உடல்பருமன், நீரிழிவு நோய் ஏற்படாமல் தடுக்கலாம்.

காலையில் நடப்பது மனதிற்கு உற்சாகத்தைத் தரும். நடைப் பயிற்சியைப் போல நீச்சலும் சிறந்த பயிற்சிதான். இதனால் உடலில் தேவையற்ற கெட்ட கொழுப்புகள் சேர்வது தடுக்கப்படும் என்பது நிபுணர்களின் அறிவுரை.

கொழுப்புச் சத்துள்ள உணவுகளைத் தவிர்க்க வேண்டும். வறுத்த, எண்ணெயில் பொரித்த உணவுகளில் ட்ரான்ஸ்பேட் கொழுப்புகள் அதிகம் உள்ளன. இந்தக் கொழுப்பு ரத்த நாளங்களில் படிவதால் இதயநோய், டைப்-2 நீரிழிவு, பக்கவாதநோய் என்பன ஏற்படுகிறது.

ரீல்களில் அடைத்த உணவுகளையும், வறுத்த உணவுகளையும் தவிர்ப்பதன் மூலம் இதயநோயைத் தவிர்க்கலாம் என்கின்றனர் நிபுணர்கள்.

வாசகர்களே!
உங்கள் உடல் நலம் தொடர்பான கேள்விகளுக்கு டொக்டர் எஸ்.சுரேந்திரலிங் பதிலளிக்கின்றார். உங்கள் கேள்விகளை பின்வரும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.
உடல் நலம்
சுடர் ஒளி வாரமலர்,
இல.361, கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மௌன மனவெளிகள்

38

நா.யோகேந்திரநாதன்

அன்று பொன். கந்தையாவின் தேர்தல் பிரசாரக் கூட்டம் கரணவாய் மூத்தனார் கோவிலில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மைதான அலங்கார வேலைகளை கனகரத்தினம் தலைமையில் ஆவுடையாட்டை வாலிபர்களே மேற்கொண்டனர். சிவஞானம் மணியாறன்மூலைக்குப் போய் இளையவனையும் இன்னும் சில இளைஞர்களையும் இழுத்து வந்து அலங்காரப் பணிகளில் தங்களுடன் இணைத்துக் கொண்டான்.

அந்த வீதியால் காரில் போன காசிப்பிள்ளை முதலாளிக்கு இக்காட்சி பெரும் சினத்தை மூட்டி விட்டது. ஏதாவது ஒரு திட்டம் போட்டு இந்த இரண்டு பகுதிகளுக்குமிடையே மோதலை ஏற்படுத்தாவிட்டால் அவ்வளவு வாக்குகளும் கந்தையாவுக்கு விழுவதைத் தடுக்க முடியாது என்பதை அவர் நன்றாகவே புரிந்து கொண்டார்.

பீட்டர் கெனமன் உட்பட பலர் உரையாற்றிய பின்பு நடராஜாவின் பேச்சு ஆரம்பமாகியது. தனிச் சிங்களச் சட்டம் மூலம் தமிழ்மக்கள் ஒடுக்கப்படுவதை எதிர்த்துக் குரல் கொடுக்கும் நாம் எங்கள் மத்தியில் உள்ள ஒரு பகுதி மக்களைச் சாதியின் பேரால் ஒடுக்குவதில் என்ன நியாயம் இருக்கிறது எனக் கேள்வி எழுப்பினார். அவரின் கனல் கக்கும் பேச்சு சகலரையும் கவர்ந்து விட்டது.

சொர்ணலட்சுமியின் பேச்சு மேலும் மெருகு பெற்றிருந்தது. சட்டக் கல்லூரியிலிருந்து லீவில் வந்திருந்த அவளின் நண்பன் சொர்ணலிங்கம் சொல்லிக் கொடுத்த சில புதிய விடயங்களையும் அவள் தனது உரையில் சேர்த்திருந்தாள். அவள் தனது பேச்சை இடைநிறுத்திவிட்டு கமலியை அழைத்தாள். அன்று கமலி பதட்டப்படவோ உணர்ச்சி வசப்படவோ இல்லை. அவள் மிகத் தெளிவாகவும் ஆணித்தரமாகவும் உரையாற்றினாள்.

அவளின் பேச்சில் கூட்டத்தினர் ஒன்றிப் போயிருந்த வேளையில் எங்கிருந்தோ பறந்து வந்த கல் அவள் நெற்றியைப் பட்டு விழுந்தது. மேடையில் இருந்தவர்கள் பதட்டத்துடன் எழுந்தபோது கமலி அவர்களிடம் தன்னை நெருங்க வேண்டாம் எனத் தடுத்துவிட்டு நெற்றியில் வழிந்த குருதியைத் துடைத்துக் கையில் எடுத்தவாறே பேச்சைத் தொடர்ந்தாள்.

'என்ரை சிங்கன்ரை இரத்தத்தையும் உயிரையும் குடிச்சியள். இப்ப என்ரை இரத்தத்தைக் கேட்கிறியள். எங்கடை உடம்பிலை ஓடுற எல்லா இரத்தத்தையும் நீங்கள் குடிச்சு முடிச்சாலும் உங்கடை வயித்தைப் பிளந்து கொண்டு வந்து சாதிக் கொடுமைக்கு எதிராய்ப் போராடுவம்! போராடுவம்! போராடுவம்!"

அதற்கு மேல் அவளால் பேச முடியவில்லை. நெற்றியில் கையால் அழுத்திப் பிடித்துக் கொண்டாள். சொர்ணம் ஓடிப் போய் அவளை அணைத்து மெல்ல மேடையிலிருந்து இறக்கினாள்.

கல்லால் எறிந்தவனை ஆவுடையாட்டை இளைஞர்கள் துரத்திப் பிடித்துவிட்டனர். அவன் அதே இடத்தைச் சேர்ந்த வடிவேலு எனக் கண்ட போது அவர்கள் திகைத்துப் போய்விட்டனர். சிவஞானம் சேட்டில் பிடித்தபடி கேட்டான். "டேய்... காலமை எங்களோடை நின்டு சோடனை வேலை செய்தனீ.. இப்ப ஏன்ரா இந்தப் புத்தி வந்தது?" வடிவேலு எதுவுமே பேசாது 'திருதிரு'வென விழிக்கத் தொடங்கினான், யாரோ அவனை ஏவி விட்டிருக்க வேண்டும் என்பதைப் புரிந்து கொண்ட கனகரத்தினம் மெல்ல சிவஞானத்தின் கையை விடுவித்தார்.

அங்கு வேகமாக வந்த சரவணை அனைவரையும் விலக்கிவிட்டு காலால் வடிவேலுவின் வயிற்றில் ஓர் அடி கொடுத்தான். அவன் "ஐயோ" என்றவாறு நிலத்தில் குந்தினான். அவனின் தலைமயிரைப் பிடித்துத் தூக்கி நிறுத்திய சரவணை கையை பொத்தி அவனின் முகத்தில் ஒரு குத்துக் கொடுத்தான். மூக்கு உடைந்து இரத்தம் ஒழுகியது.

அங்கு வேகமாக வந்த கார்த்திகேயன் மாஸ்ரர் "ஐயா நிப்பாட்டுங்கோ!" என்றார். அந்த உயர்ந்த மெலிந்த மனிதரின் வார்த்தைகள் ஒரு மந்திரம் போல சண்டியனான சரவணையைக் கட்டுப்படுத்தியது. மாஸ்ரர் "மூக்கைத் துடை!" என்றார். அவன் குனிந்து மூக்கைத் துடைத்துவிட்டு விழிபிதுங்க நின்றான்.

"உன்னைப் பார்த்தால் ஒரு நல்ல தோட்டக்காரன் போலை கிடக்குது. நாங்கள் இப்ப உன்னைப் பொலிசிலை குடுத்தால் முதல் பதினாறு நாட்கள் விளக்கமறியலுக்கு அனுப்புவாங்கள். இப்ப உன்னை ஏவிவிட்ட பெரிய மனுஷன் அந்தப் பதினாறு நாளும் தோட்டத்துக்கு தண்ணி இறைப்பானோ?" மாஸ்ரரின் கேள்விக்குள் இருந்த மந்திரசக்தியைக் கனகரத்தினம் புரிந்துகொண்டான்.

கார்த்திகேயன் தொடர்ந்தார். "நாங்கள் பொலிசிலை குடுக்கேல்லை. இப்ப நீ போ! சாதி வெறிக்கு தன்ரை புருஷனைப் பதினெட்டு வயதிலை பறி குடுத்த ஒரு பிள்ளை நியாயம் கேட்டதுக்காக நீ அவளைக் கல்லெறிஞ்சு காயப்படுத்தினது சரியோ எண்டு இரவைக்குப் படுத்திருந்து யோசி. நீ யோசிச்சு எடுத்த முடிவை அவனட்டையே நாளைக்கு போய்ச் சொல்லு. உன்னை ஒருதரும் ஒண்டும் செய்ய மாட்டினம். நீ போ."

அவன் சரவணையை ஒரு முறை பயத்துடன் பார்த்துவிட்டு தலையைக் குனிந்தவாறே அவ்விடத்தை விட்டு அகன்றான்.

"சரி வாருங்கோ. பிள்ளையை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போற விசயத்தைப் பாப்பம்" என்று விட்டு முன்னால் நடந்தார் மாஸ்ரர். சரவணைக்கும் மாஸ்ரரின் நடவடிக்கை திருப்தியளிப்பது போன்றே தோன்றியது. இவை ஒருபுறம் நடந்து கொண்டிருந்த போதும் கூட்டம் தொடர்ந்து நடந்து கொண்டிருந்தது. வி.ஏ.கந்தசாமி மேடையில் கல்லெறிச் சம்பவத்தை அடிப்படையாக வைத்து சொல்மாரி பொழிந்து கொண்டிருந்தார். கமலியை மேடையால் இறக்கியதுமே கந்தையா முடிப்போய் ஐயர் வீட்டில் கொஞ்சம் கோப்பியும் வெள்ளைத்துணியும் வாங்கி வந்து சொர்ணத்திடம் கொடுத்தார். அவள் இரத்தத்தைத் துடைத்து விட்டு கோப்பித் தூளை வைத்து ஈரத் துணியால் கட்டிவிட்டாள்.

சிவஞானம், கனகரத்தினம், சரவணை ஆகியோர் ஆஸ்பத்திரி விறாந்தை வாங்கிலில் அமர்ந்திருக்க, சொர்ணம் கமலியை மருந்து கட்டும் அறைக்குள் கூட்டிச் சென்றாள். காயத்தை நன்றாகக் கழுவி விட்டுப் பார்த்த போது அது சற்று ஆழமாகவே பட்டிருந்தது. நாலைந்து தையல் போட வேண்டும் என்றனர்.

தையல் போடும் போது கமலி பல்லை இறுகக் கடித்ததும் அவளின் முகத்தில் ஏற்பட்ட மாற்றமும்



அவள் மிகவும் சிரமப்பட்டே வலியைத் தாங்குகிறாள் என்பதைச் சொர்ணத்துக்கு உணர்த்தியது.

தையல் போட்டு முடிந்து மருந்து கட்டும் போது சொர்ணம் மெல்லக் கேட்டாள். "சரியாய் வலிக்குதே கமலி?"

வலியை அனுபவித்ததாலோ என்னவோ கமலியின் கண்கள் சிறிது கலங்கியிருந்தது. அவள் ஒரு மெல்லிய புன்னகையுடன் சொர்ணத்தைப் பார்த்துச் சொன்னாள். "கடுமையான வலிதான். ஆனால் சிங்கன் எதுக்காக உயிரைக் குடுத்தாரோ அதே காரணத்திற்காகத்தான் எனக்கும் இந்த வலியெண்டு நினைக்கேக்கை அதிலை அவரைக் கட்டியணைச்சு முத்தம் குடுக்கிற சுகம் இருக்குது!"

சொர்ணம் காதல் ஆழமானது என்பதை அறிவாள். ஆனால் இவ்வளவு பெரும் பரிமாணம் கொண்டது என்பதை அவள் இப்போது தான் உணர்ந்தாள். அதேவேளையில் இளையவன் அவளின் நெஞ்சுக்குள் வரத் தவறவில்லை. சொர்ணம் தன்னால் இப்படி உறுதியாக நின்று பிடிக்க முடியுமா என்று தன்னைத் தானே கேட்டுப்பார்த்தாள். முடியுமோ முடியாதோ கமலியைப் போல் உறுதியாக இருந்தேயாக வேண்டும் என அவள் நினைத்துக் கொண்டாள்.

"என்ன பிள்ளை! யோசிக்கிறியள்?" எனக் கேட்டாள் கமலி.

"ஒண்டுமில்லை. காதலின்ரை பலத்தைப் பற்றி யோசிச்சன்" என்று விட்டு மெல்லக் கமலியை அணைத்தவாறே ஊசி போடும் அறைக்குள் கூட்டிச் சென்றாள் சொர்ணம்.

கதவடியில் அவர்கள் வந்தபோது சிவஞானம் எழுந்து அருகில் வந்தான்.

"என்ன தையல் போட்டதே?"

"ஓ.. நாலு இழை!" என்றாள் சொர்ணம்.

"ஐயோ...!" என்றவாறே முகத்தைச் சுழித்தான் சிவஞானம்.

சொர்ணம் சிரித்தவாறே "என்ன அவளுக்குத் தையல் போட்டால் உங்களுக்கு நோகுதே?" எனக் கேட்டாள்.

"இல்லை நோகும் தானே. அதுதான் கேட்டன்" என்றான் சிவஞானம் அசடு வழிய.

"இதெல்லாம் எனக்கு நோகாது சிவஞானம். இருக்கிற கோபத்தைத் தான் இன்னும் இன்னும் கூட்டும்" என்றவாறே அறைக்குள் புகுந்தாள் கமலி. 'பென்சிலின்' ஊசி போடும் போது அவள் படும் [illegible] செய்து பார்த்தான் சிவஞானம். எனினும் அவளின் மன உறுதியும் வீரமும் அவனை வியக்க வைத்தது.

அருகில் நின்ற சரவணை தன் மகளை எண்ணி மீண்டும் ஒருமுறை பெருமைப்பட்டுக் கொண்டான்.

"விடிஞ்சு இவ்வளவு நேரமாய்ப் போச்சுது. பார் இரவிரவாய் ஊர் மேய்ஞ்சு போட்டு பிரண்டு பிரண்டு நித்திரை கொள்ளுறது!"

சீதேவிக் கிழவியின் குரல் கேட்டு திடுக்கிட்டுத் தூக்கம் கலைந்தாள் சொர்ணம். அவள் எழுந்து கலைந்து கிடந்த தலைமயிரை மேலோட்டமாகப் பின்னி விட்டவாறே வெளியே வந்தாள்.

அவள் பள்ளிக்கூடம் தவிர வேறு எங்கு செல்வதானாலும் பெற்றோருடனோ அல்லது பாட்டியுடனோ தான் செல்வதுண்டு. நெருங்கிய உறவினர்கள் தங்கள் வீட்டுக்கு வந்து போபவர்கள் என ஒரு சிறு வட்டத்திற்குள்ளேயே அவள் பழக அனுமதிக்கப்பட்டாள். தேர்தல் பிரசாரத்தில் இறங்கிய பின்பு பல இடங்களுக்குப் போகவும் பலருடன் பழகவும் கிடைத்த சந்தர்ப்பங்களை அவள் ஒரு பெரும் அதிஷ்டமாகவே கருதினாள். ஒருவிதமான சுதந்திரமும் மகிழ்ச்சியும் தனக்குக் கிடைத்துள்ளதாகவே அவளுக்குத் தோன்றியது. கிழவியின் வரவுகள் அவள் பெறும் அந்த சந்தோசத்தைக் குலைக்கும் முன்னறிவித்தலாக இருக்குமோ என அவள் பயந்தாள்.

சாமியறையிலிருந்து வெளியே வந்த விதானையாருக்கு அந்த வார்த்தைகள் காதில் விழுந்திருக்க வேண்டும். அவர் சற்றுக் கோபமடைந்தவராகவே காணப்பட்டார்.

"ஏன் இப்ப அவளைக் கரிச்சுக் கொட்டுறாய். நீயும் ஓமெண்டு தானே அவளை விட்டனி" என்றார் அவர்.

"ஏதோ போறதும் பேசுறதும் வந்திடுவள் எண்டு நான் நான் ஓமெண்டு சொன்னனான். இப்படி நடுச்சாமம் வரையும் நிப்பள் எண்டு நான் கண்டனானோ?"

"இரவிலே தானே கூட்டம். கூட்டம் முடியத் தானே அவள் வரலாம். எத்தினை பெரியவங்கள் அவளைப் பாராட்டுறாங்கள் தெரியுமோ. சனம் மருதப்பிள்ளை நயினாரின்ரை பேத்தி என்ன கலக்கு கலக்கிறாள் எண்டு பெருமையாய் பேசுது தெரியுமோ! ஒண்டும் தெரியாமல் வீட்டுக்கை இருந்து கொண்டு முட்டை போட்ட கோழி மாதிரி கத்துறாய்" விதானையாரின் குரல் சற்று பலமாகவே ஒலித்தது.

மருதப்பிள்ளை வண்டில் சவாரியில் மாடு கலைக்கும் திறமையைப் பற்றி மற்றவர்கள் புகழும் போது தான் பெருமையில் பூரித்துப் போனது கிழவியின் நினைவுக்கு வந்தது.

"அவர் ஆம்பிளை..." எனக் கூறினாள் கிழவி சற்றுத் தாழ்ந்த குரலில்.

"என்ரை பிள்ளை பொட்டைபெண்டால் என்ன.. ஆம்பிளையளோடை சமனாய் தானே மேடையிலை நிக்கிறாள். இப்ப எங்கடை மகாராணி கூட ஒரு பொம்பிளை. அவளின்ரை படமிருக்கிற காசைத்தான் சீலை முடிச்சிலை முடிஞ்சு பத்திரப்படுத்தி வைச்சிருக்கிறாய்."

கிழவி இனிப் பேசிப் பிரயோசனமில்லை என்ற நிலையில் மௌனமானாள். அவள் மனம் மட்டும் "காலம் கெட்டுப் போச்சுது... இது உலக அழிவுக்குத்தான்" என முனகியது.

வாசலில் "ஐயா!" என்ற அழைப்புக் கேட்டு விதானையார் முன் விறாந்தைக்கு வந்தார். அங்கு வடிவேலு நின்றிருந்தான்.

"என்னடா! என்ன விஷயம்?" எனக் கேட்டார் விதானையார்.

"ராத்திரி கூட்டத்திலை தெரியாத்தனமாய்..." எனத் தொடங்கி விட்டு இடை நிறுத்தினான் வடிவேலு.

'படார்' என அவனின் கன்னத்தில் ஒரு அறை விழவே அவன் நிலை தடுமாறிப்போனான்.

விதானையார் கேட்டார். "டேய் சரவணையின்ரை பெட்டையிலை பட்ட கல்லு என்ரை பிள்ளையிலை பட்டிருந்தால் என்ன நடந்திருக்கும் தெரியுமோ? மாமரத்திலை கட்டி வைச்சு தோலை உரிச்சுப் போட்டு தொங்கப் போட்டிருப்பன்."

சில விநாடிகள் தயக்கத்தின் பின் அவன் "காசிப்பிள்ளை முதலாளி அவளுக்குத் தான் எறியச் சொன்னவர்."

விதானையார் அதிர்ந்து போனார்.

"அப்ப.. இப்ப.. ஏன் இஞ்சை வந்தனி?" எனக் கேட்டார் விதானையார்.

"ராத்திரி போய் நான் யோசிச்சுப் பாத்தன். என்னை ஏவி விட்ட காசி முதலாளி நான் அடி வேண்டினது அறிஞ்சும் வந்து எட்டிக் கூடப் பார்க்கயில்லை. நான் செய்தது பிழை எண்டு விளங்கியிட்டுது. சரவணையின்ரை மேலாட்டைப் போய் நான் செய்தது பிழை எண்டு சொல்ல வேணும். அங்கை போகப் பயமாய்க் கிடக்குது."

விதானையார் சற்று யோசித்து விட்டு "சரி. அதை நான் பார்க்குறன். நீ போய் உடனை காசியை வரட்டாம் எண்டு சொல்லி விடு" என்றார்.

ஒரு தாழ்த்தப்பட்ட சாதிப் பெண்ணிடம் வடிவேலு நேரடியாகப் போய் மன்னிப்புக் கேட்பதை விதானையார் ஏற்கத் தயாராயிருக்கவில்லை.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்திரிகாவின் யாழ்.விஜயம் பின்னணி என்ன?



முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கவின் யாழ் வருகை பல்வேறு சந்தேகங்களை அரசியல் மட்டங்களிலும் தமிழ் மக்கள் மத்தியிலும் கிளப்பியிருக்கிறது. இலங்கையின் அரசியல் வரலாற்றில் இரண்டு தடவைகள் நிறைவேற்று அதிகார ஜனாதிபதிப் பதவியிலும், பிரதமர் பதவியிலும், அமைச்சரவையிலும் இருந்த ஒரே ஒரு பெண் ஜனாதிபதி சந்திரிகா என்பது குறிப்பிடத்தக்கது. ஜனாதிபதியாக இருந்த காலப்பகுதியில் கூட யாழ்க்குப் பகுதியை எட்டிக் கூடப் பார்க்காத சந்திரிகா தற்போது என்ன நோக்கத்திற்காக யாழ்ப்பாணம் வந்தார் என்பது தமிழ் மக்கள் மத்தியில் எழுந்துள்ள கேள்வியாகும். அத்தோடு யாழ்ப்பாணத்தில் வைத்து ஊடகங்களிடம் தெரிவித்த கருத்துக்களும் இச்சந்தேகத்தை மேலும் மேலும் வலுவாக்கியிருக்கிறது. திசர் பயணம் ஒன்றை மேற்கொண்டு தொண்டு நிறுவனம் ஒன்றின் அதிகாரியாக யாழ்ப்பாணத்தில் போரால் பாதிக்கப்பட்ட மக்களையும் வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட மக்களையும் அதிகம் கொண்டுள்ள ஆரியாலை கிழக்கு, நாவலடி, அச்சுவேலி மேற்கு, செல்வநாயகபுரம் என பல பகுதிக்கும் சூறாவளிப் பயணத்தை மேற்கொண்டு, பாதிக்கப்பட்ட மக்களை சந்தித்து கலந்துரையாடிய விதம் இச்சந்தேகத்தின் கோணத்தை மேலும் விரிவாக்கியுள்ளது. யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்து எல்லா இடங்களையும் சுற்றிப் பார்த்த சந்திரிகா அம்மையார் தமிழர்களுக்கென்று உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்றும் அவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்றும் தமிழ் மக்கள் மத்தியில் கூறியிருப்பது ஏதாவது ஒரு அரசியல் நோக்கம் அவரின் வருகைக்குப் பின்னால் இருக்குமா என்ற சந்தேகத்தை தவிர்க்க முடியாமல் ஏற்படுத்தியிருக்கிறது.

1945ம் ஆண்டு ஜூன் மாதம் 29ம் திகதி பிறந்த சந்திரிகா சிறுவயது முதலே அரசியலில் சற்று ஈடுபாடு கொண்டவராக விளங்கினார். இவரின் 14வது வயதில் இவரின் தந்தை கொலை செய்யப்பட்டார். இது இவருக்கு வாழ்க்கையில் தாக்கத்தை உண்டு பண்ணியது. இவரின் கல்வியை பொறுத்தவரையில் பாரிஸ் பல்கலைக்கழகத்தில் அரசியல் சார்ந்த பட்டப்படிப்பை பூர்த்தி செய்திருந்தார். இலங்கை திரும்பிய இவர் 1972ம் ஆண்டு நில மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் மேலதிக பிரதான இயக்குநராக பணியாற்றினார். இதன்பின் 1976 ஆம் ஆண்டு உணவு விவசாய அமைப்பின் தலைவர் பதவியையும் அலங்கரித்தார். இதன் பின் 1978ம் ஆண்டு நடிகரும் அரசியல்வாதியுமான விஜயகுமாரணதுங்கவை மணந்தார். கணவரின் மறைவிற்குப் பின் அவரின் பெயரின் பின் எழுத்திலிருந்த 'ண' வை அகற்றிவிட்டு விஜயகுமாரதுங்க என்ற பெயரை தனது பெயருக்குப் பின்னால் இணைத்துக் கொண்டார். இதன் பின்பே அரசியலுக்குள் நுழைந்தார்.

1994 ஆம் ஆண்டு மக்கள் முன்னணி சார்பில் பிரதமர் பதவிக்காக போட்டியிட்டு 1994 ஓகஸ்ட் 19 ஆம் திகதி இலங்கை சோசலிசக் குடியரசின் பிரதமராக தெரிவுசெய்யப்பட்டார். ஒரு வருடத்திற்கு மேலாக பிரதமர் பதவியை இவர் அலங்கரித்த போதும் அன்றைய காலகட்டத்தில் புரையோடிப் போயிருந்த தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கு நீதியான தீர்வை இவர் முன்வைக்கவேயில்லை. இதன் பின் 1994 ஆம் ஆண்டு பிற்பகுதியில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு 4கோடியே 709 ஆயிரத்து 205 வாக்குகளைப் பெற்று தன்னை எதிர்த்து போட்டியிட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளரைத் தோற்கடித்து இலங்கையின் நான்காவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக பதவிக் கதிரையில் அமர்ந்தார். இவர் தான் ஜனாதிபதியாக இருந்த காலப்பகுதியில் எழுதிய 'கண்ணியமான சமாதானத்தை நோக்கி' என்ற நூலில் தமிழர்களின் இனப்பிரச்சினையும் அன்றைய காலத்தில் நிகழ்ந்த தமிழர்களின் விடுதலைப் போராட்டம் பற்றிக் குறிப்பிடும் போது,

> **1997 ஆம் ஆண்டு மே மூன்றாம் திகதி இவரின் ஆட்சிக் காலத்திலேயே தமிழர் பிரதேசம் மீது 'ஜெயசிக்குறு' என பெயரிடப்பட்ட படை நடவடிக்கை இடம்பெற்றது. இந்த படைநடவடிக்கையை விடுதலைப்புலிகள் முறியடித்து வெற்றி பெற்றாலும் இப்படை நடவடிக்கையின் போது பல அப்பாவித் தமிழர்கள் கொல்லப்படவும், காணாமல் போகவும், அப்பாவிக் குழந்தைகள் அநாதைகளாகவும், தமிழ் பெண்கள் விதவைகளாகவும் வழியேற்படுத்தக் கொடுத்தது. யாழ்ப்பாணத்தில் மரணப் புதைகுழிகள் பலவும் இக்காலத்திலேயே கண்டறியப்பட்டன.**

இப்போது தொடர்ந்து கொண்டிருக்கும் இந்த யுத்தமானது இந்த நாட்டில் நிலவும் இனப்பிரச்சினையின் ஒரு கட்டம் மாத்திரமே. நாம் யுத்தத்தின் போது பிரபாகரனை தோற்கடிக்கலாம். அவர் வழிநடத்தும் பயங்கரவாத அமைப்பான புலிகள் அமைப்பை தோல்வியுறச் செய்ய முடியும். புலிகள் அமைப்பு மக்களை பகடைக்காய்களாக்கி தமது வாழ்வை நடாத்துவதோடு ஆயுதம் மீது நம்பிக்கை கொண்டுள்ள அமைப்பாகும். ஆனால் பிரபாகரன் தோற்கடிக்கப்பட்டாலும் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படாவிட்டால் நாட்டில் ஆயிரம் பிரபாகரன் உருவாவார்கள். எனவே தமிழர் பிரச்சினைக்கு நீதியான முறையில் தீர்வு காணப்படவேண்டும் என அதில் தெரிவித்திருந்தார். இவ்வாறு வார்த்தைகளால் தமிழர் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படவேண்டும் எனக் கூறினாலும் தான் ஜனாதிபதியாக இருந்த ஆட்சிக் காலத்தில் பற்றியெரிந்த தமிழ் மக்களின் இனப் பிரச்சினைக்கு நீதியான முறையில் தீர்வு காண இவர் மனம் கொள்ளக் கூடவில்லை.

விடுதலைப்புலிகளுடனான பேச்சுவார்த்தைகள் நடைபெற்ற போதும், தீர்வை வழங்காமல் காலத்தை இழுத்தடிப்பதிலும் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை இல்லாது ஒழிப்பதிலுமே அக்கறை செலுத்தினார். சந்திரிகாவின் [illegible] ரத்வத்தையை பிரதிப்பாதுகாப்பு அமைச்சராகவும் நியமித்து விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த பிரதேசங்கள் மீது ஈவிரக்கமற்ற முறையில் படைகளை ஏவிவிட்டார். 1995 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த யாழ்ப்பாணம் மீது பாரிய படை நடவடிக்கை இவரின் அமைச்சரவையில் பிரதிப் பாதுகாப்பு அமைச்சராக இருந்த அனுருந்த ரத்வத்தையின் தலைமையில் இடம்பெற்றது. பலாலியை தளமாகக் கொண்டு இடம்பெற்ற இப்படை நடவடிக்கையில் யாழ்ப்பாண மக்கள் நள்ளிரவு நேரம் அநாதைகள் போல வன்னி நோக்கி பாரிய இடப்பெயர்வை சந்தித்தனர். யாழ்ப்பாணத்தை விட்டு கடல் வழியாகச் செல்ல முயன்ற மக்கள் பலர் காணாமல் போயினர்.

1999 ஆம் ஆண்டு மீண்டும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டார் சந்திரிகா குமாரதுங்க. இந்நிலையில் கொழும்பு நகரசபை முன்றலில் 1999 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 18ஆம் திகதி இடம்பெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் விடுதலைப்புலிகளின் போராளி என சந்தேகிக்கப்படும் ஒருவரின் தற்கொலை குண்டுத் தாக்குதலுக்கு இலக்கானார். கண்ணில் படுகாயத்துடன் உடனடியாக வைத்தியசாலைக்கு கொண்டு விரையப்பட்டு அவர் ஒரு கண் இழந்த நிலையில் மீண்டும் அடிபட்ட புலியாக வெளிவந்தார் அவர். இந்த குண்டுத்தாக்குதலால் ஏற்பட்ட அனுதாப வாக்குகளாலோ என்னவோ மீண்டும் ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டார் சந்திரிகா.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் போட்டியிட்டு 4 கோடியே 312 157 வாக்குகளைப் பெற்று தன்னை எதிர்த்து போட்டியிட்ட ரணில் விக்கிரமசிங்கவை தோற்கடித்து மீண்டும் இலங்கையின் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக பதவிக்கதிரையில் அமர்ந்தார். இக்காலக் கட்டத்திலும் இனப்பிரச்சினை பற்றி அடிக்கடி தனது உரைகளில் குறிப்பிடப்பட்ட போதும், ஜனாதிபதித் தேர்தலில் பிரச்சார கூட்டத்தின் போதும் இனப்பிரச்சினைக்கு நீதியான தீர்வினை முன்வைப்பேன் எனக் கூறியபோதும் இவர் தலைமையிலான அரசு எந்தவிதத் தீர்வையும் வழங்காமல் காலத்தை இழுத்தடிப்பதிலேயே அக்கறை செலுத்தியது. 1997 ஆம் ஆண்டு மே மூன்றாம் திகதி இவரின் ஆட்சிக் காலத்திலேயே தமிழர் பிரதேசம் மீது 'ஜெயசிக்குறு' என பெயரிடப்பட்ட படை நடவடிக்கை இடம்பெற்றது இந்த படைநடவடிக்கையை விடுதலைப்புலிகள் முறியடித்து வெற்றி பெற்றாலும் இப்படை நடவடிக்கையின் போது பல அப்பாவித் தமிழர்கள் கொல்லப்படவும், காணாமல் போகவும், அப்பாவிக் குழந்தைகள் அநாதைகளாகவும், தமிழ் பெண்கள் விதவைகளாகவும் வழியேற்படுத்தது யாழ்ப்பாணத்தில் மரணப்புதைகுழிகள் பலவும் இக்காலத்திலேயே கண்டறியப்பட்டன.

அத்துடன் தமிழ் மக்களினதும் மாணவர்களினதும் மனதில் என்றுமே ஆறமுடியாத வடுவாக ஆழப்பதிந்திருக்கும் துயரச்சம்பவம் இவரின் ஆட்சிக் காலத்திலேயே இடம்பெற்றது. அதாவது 1995ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 22ஆம் திகதி நாகர்கோவில் மகாவித்தியாலயம் மீது புக்காரா விமானங்களின் கோரமான குண்டு வீச்சு நடாத்தப்பட்டது. மதிய நேரம் பாடசாலை பரபரப்பாக இயங்கிக் கொண்டிருந்த நேரம் சுமார் 12 மணியளவில் மணியடித்து இடைவேளைக்காக பாடசாலை மாணவர்கள் வெளியே சென்று விளையாடிக் கொண்டிருந்தவேளை பாடசாலையை வட்டமடித்து புக்காரா விமானங்கள் பாடசாலை மீது குண்டுகளை வீசித்தள்ளின. இத்துயரச் சம்பவத்தில் வெள்ளைச் சீருடை அணிந்த 18 வயதிற்கு உட்பட்ட 38 பாடசாலை மாணவர்கள் அநியாயமாக பலியெடுக்கப்பட்டனர். அத்துடன் நூற்றுக் கணக்கான மாணவர்கள் அங்க அவயவங்களை இழந்து படுகாயமடைந்தனர். இவர்களில் பலர் இன்றும் இழக்கப்பட்ட அவயங்களுடன் நடமாடி வருகின்றனர்.

ஆனால், இச்சம்பவம் தொடர்பில் உடனடியாக மறுப்பை வெளியிட்ட அரசு, பாடசாலை மீது தாக்குதல் நடாத்தப்படவில்லை எனவும் விடுதலைப்புலிகளின் பயிற்சி முகாம்கள் மீதே தாக்குதல் நடாத்தப்பட்டிருந்ததாகவும் தெரிவித்தது.

இவ்வாறு தமிழ் மக்களின் துயரம் செறிந்த போர்க் காலங்களில் ஜனாதிபதியாக பதவி வகித்த இவர் விடுதலைப்புலிகளுடன் பேச்சுகளை நடாத்தியபோதும் எந்த வித விட்டுக்கொடுப்பும் அற்ற அரசியலையே பேணிவந்தார். இனப்பிரச்சினைக்கு தீர்வு வழங்க வேண்டும் என்ற எண்ணம் இவர் பதவிக்கு வரமுதல் இவரிடம் நிலவிய போதும் பதவிக்கு வந்து அதிகாரக் கதிரையில் அமர்ந்த பின் அனுருத்தரத்வத்தை மற்றும் படையதிகாரிகளினதும் மத பீடங்களினதும் ஆலோசனைகளைக் கேட்டு ஆடிய ஆட்டம் இன்றும் தமிழ் மக்கள் மத்தியில் பழைய துயர நினைவுகளாக ஆழப்பதிந்திருக்கிறது.

இந்நிலையில், ஆயுதப் போராட்டம் முள்ளிவாய்க்காலுடன் முடிக்கப்பட்ட நிலையில் இனப்பிரச்சினைக்கான தீர்வு வழங்கப்படாது இழுத்தடிக்கப்பட்டு வரும் நிலையில், தமிழ் மக்கள் அரசியல் தீர்வில் சந்தேகத்தை நம்பியிருக்கும் சூழ்நிலையில் 40 வருடங்களைக் கடந்து மீண்டும் சந்திரிகா அம்மையார் யாழ்ப்பாணம் வந்திருப்பதும் தீர்வு பற்றி கருத்து தெரிவித்திருப்பதும் ஆச்சரியப்பட வைத்துள்ளது.

தனது ஆட்சிக்காலத்தில் முப்படைப் பிரதானியாக இருந்து தமிழர் பிரதேசம் மீது பாரிய போரை ஏவிவிட்டு அதை வேடிக்கை பார்த்த இந்த முன்னாள் ஜனாதிபதி இங்கு வந்து இறுதிப் போரில் உறவுகளையும் உடைமைகளையும் தொலைத்துவிட்டு ஊனமுற்று அல்லலுறும் மக்களை பார்த்து "போர் உங்கள் வாழ்வை மோசமாக பாதித்திருக்கிறது. படையினராலும் புலிகளாலும் நீங்கள் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளீர்கள். உங்களுக்கு கிடைக்க வேண்டிய அனைத்து அடிப்படை தேவைகளும் பூர்த்தி செய்யப்பட வேண்டும். நான் வெற்றி கொள்ளப்பட்ட நிலங்களை மாத்திரம் பார்த்து விட்டுச் செல்ல முடியாது. உங்களுக்கு ஏதாவது செய்தாக வேண்டும். உங்களின் தேவைகள் நிவர்த்தி செய்யப்படும் வரை நான் உங்களுடனேயே இருப்பேன்" என்று கூறியிருப்பது ஓநாய் அழுத கதையையே மீள ஞாபகப்படுத்துகிறது. பதவிக்கதிரையில் இருக்கும் போது ஆணவமும் அதிகாரச் செருக்கும் கண்ணை மறைக்க தமிழர் மண்ணை சிதைத்து சின்னாபின்னமாக்கிய இவர் தற்போது நல்ல பிள்ளையைப் போல இங்குவந்து தமிழ் மக்கள் மேல் அளவு கடந்த அன்பைப் பொழிவது நாடகமா? அல்லது காலம் கடந்த ஞானமா? என மக்கள் கேட்கின்றனர்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஊடாகவே தனது அரசியல் பயணம் இடம்பெறும் என ஆணித்தரமாக இவர் கூறிவரும் நிலையில் யாழ்ப்பாண விஜயத்தில் உண்மை நோக்கம் மர்மம் நிறைந்ததாகவே உள்ளது.

எனவே, சோழியன் குடுமி சும்மா ஆடாது என்பதைப் போல சந்திரிக்காவின் யாழ்.விஜயம் அரசியல் நோக்கத்திற்காகவே இடம்பெற்றிருக்கலாம் என பலரும் சந்தேகம் கொள்வது தவிர்க்கமுடியாததே.

**ஹரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரிசு அரசியல் சாயங்கள்

மலையகம்

ஒரு இனத்தின் பாதுகாப்பும், வளர்ச்சியும் அதன் அரசியல் சக்தியிடமே உள்ளடக்கப் பட்டுக் கிடக்கிறது. எந்த இனமும் தாமே கிளர்ந்தெழுந்து தமது உரிமைகளை வென்றெடுக்க வேண்டும். அவ்வாறு ஒரு சமூகம் புதிய பாதையில் நடைபயிலும் நேரம் அச்சமூகம் பல செயற்திறம் மிக்க முன்னணி தொண்டர்களை பெற்றிருக்கும். அவர்களே பல மட்டங்களிலும் தமது பொதுக் குழுக்களின் தீர்மானங் களை நிறைவேற்றும் பொறுப்புக்களை ஏற்பார்கள். அதற்காக அவர்கள் முழு நேர உழைப்பையும் வழங்குவதுடன் எவ்வித ஊதியமும் பெற்றுக்கொள்ளாத ஊழியம் செய்யும் கொள்கை வாதிகளாக காணப்படுவார்கள்.

தமிழ் நாட்டில் பெரியார் இராமசாமி அவர்களும், யாழ்ப்பாணத்தில் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் அவர்களும், மலையகத்தில் சி.வே.வேலுப்பிள்ளை போன்ற தலைவர்களும் உதாரண புருஷர்களாக இருந்து தமது இனமும், நிலமும் புகழ்பெறவும், உலக அளவில் தமது மக்களை தனித்துவமிக்க ஒரு அமைப்பு ரீதியாக நெறிப் படுத்திச் சென்றார்கள். கடவுளின் பெயரால் நடக்கும் அட்டூழியங்களைத் தடுக்க பெரியாரும், தமிழ் நாட்டின் கல்வி வளர்ச்சிக்கு காமராசரும், யாழ்ப்பாண மக்களின் அரசியல் உரிமைக்கு தந்தை செல்வாவும், மலையக மக்களின் தனித்துவம் பேண சி. வே. அவர்களும் அறிவும், ஆற்றலும், புதிய சிந்தனையும் கொண்ட அரசியல்வாதிகளையும் உருவாக்கிச் சென்றனர். அவ்வாறு உருவாக்கப்பட்ட ஊழியர்களே எதிர்கால ஜனநாயக சட்டத்தில் சட்டங்கள் இயற்றும் மக்கள் சபைகளில் தமது மக்களின் குரலாகப் பேசி வந்தனர். அவர்களிடம் கொள்கைகள் எழுதப்பட்டு கொடுக்கப் பட்டிருந்தன. தமது மக்கள் சுரண்டப்படும் போதும், தமது மக்கள் இரண்டாம் தர பிரஜைகளாக ஆக்கப்பட்ட காலத்திலும் அவர்கள் போராடினார்கள்! ஜனநாயக பண்பு மிக்க கூட்டங்களை நடாத்தினார்கள். அந்நிய சக்திகளிடமிருந்து தமது மக்களை காப்பாற்றினார்கள். அவர்களின் தியாகங்கள் மக்கள் மனங்களில் எழுதப்பட்டன.

இன்று இந்திய அரசியலும், இலங்கை அரசியலும், தமிழ் நாட்டு அரசியலும், மலையக அரசியலும் கொள்கைக்கு அடிபணிந்து சேவை செய்த ஊழியர்களுக்கு பதிலாக வாரிசு அரசியல் படை எடுப்பு நடந்து வருகிறது. காந்தியின் படத்தையும், அவர் உருவாக்கிய கொடியையும் பறக்கவிட்டுக் கொண்டும், பெரியாரின் இருளும், ஒளியும் காட்டும் இரட்டை நிறக் கொடியை பறக்கவிடும் காட்சிகளும் முழுமையான வாரிசு உருத்திரதாண்டவத்தை தமிழ் நாட்டிலும், மலை நாட்டிலும் காட்டி வருகின்றன.

எந்த அரசியல் புத்தகத்தையும் திறந்து பார்க்காத, எந்த போராட்ட களத்தின் வாசனையும் அறியாத, வாக்காளரையும், சமூகப் பெரியோரையும் மதிக்காத 'மைனர்' பாணியில் பஜிரோ வாகனத்தில் வந்திறங்கும் வாரிசு அரசியல்வாதிகளுக்கு யோகமாக பதவிகள் கிடைத்து விடுகின்றன. ஆனால் மக்கள் பெற்றுக் கொள்ளவேண்டிய உரிமைகள், வசதிகள், கல்வி வாய்ப்புகள், அரசியல் அமைப்பு சரத்துக்கள் எவையும் கிடைப்பதாக இல்லை! உலகமயமாக்கலின் கோரப்பிடிக்குள் தமக்கு வாக்களித்த மக்களை தள்ளிவிட்டு கையடக்கத் தொலைபேசியில் உரையாடியே தமது கைங்கரியங்களைச் செய்து வருகின்றனர்.

மலையக மக்களின் தோட்ட வாழ்க்கை, தமிழர் வரலாறு என எவை பற்றியாவது இந்த வாரிசு தலைவர்களுக்கு பேச முடியுமா? இலங்கை அரசியல் அமைப்பில் மலையக மக்களின் உரிமைகள் பற்றி எந்த பல்கலைக்கழக நூலையாவது வாசித்து உள்ளார்களா? இல்லவே இல்லை!

எனது அப்பா சொன்னார், எனது தாத்தா சொன்னார், எனது அத்தான் செய்தார் என ஆண்களும், பெண்களும் குடும்ப பெருமையை பேசிக்கொண்டு ஆட்சி மன்றங்களில் தம்மை அங்கத்தவர்களாக ஆக்கிக் கொள்வது தமது சங்கத்தை காப் பாற்றிக் கொள்ளவும், ஆளும் கட்சியின் கொந்தராத்து வேலைகளை பெற்றுக் கொள்ளை லாபங்களைத் தேடவுமே ஆகும். கொழும்பில் சகோதர உறவுகள் இரண்டாகப் பிரிந்து நிற்பது தந்தையின் பெயரால்தான்! அந்த செல்லக்கிளிகளுக்கு தொழிலாளர் வாழ்வு குறித்து பெரிய அனுபவங்கள் எவையுமில்லை! ஊவா மாகாணத்தில் இரட்டைக்கொடியின் வாரிசுகள் வந்த வேகத்தில் திரும்பிச் சென்றார்கள். தாத்தாவின் வாரிசு பெரும் சரிவு ஒன்றுக்கு தமது சங்கத்தைக் கொண்டு சென்று விட்டது! முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரின் மகன் வியாபார நடவடிக்கைகளில் இறங்கி உள்ளார்!

மத்திய மாகாணத்தில் இரட்டை நிறக் கொடியை அம்மணியும், அப்பாவின் வழியில் மூன்று நிறக் கொடிகளை மகனும் பிடித்து வருகின்றனர். எதை? எப்படி? எவ்வாறு? செய்வது என வரும் உத்தரவுகளை அவர்கள் தலையாய பொறுப்பாக ஏற்றுச் செய்வார்கள். ஒரு ஜான்சி ராணி புறப்பட்டு வந்தாள் என ஒலி பெருக்கிகள் சொல்கின்ற போதும் அந்த வாரிசுகளின் சொல்லும், செயலும் மக்கள் வெறுப்புகளைச் சந்தித்து வருகின்றன.

நல்ல போதனைகளை மக்களுக்குச் சொல்லும் தலைமைகளும் இன்று இல்லை! மக்கள் பின்பற்றும் சீரிய பண்பைக் கொண்ட தலைவர்களுமில்லை! வள்ளியர் வள்ளல் என வாரிசுகள் மலையக அரசியலில் இருக்கும் வரை மக்களுக்கு மீட்சியில்லை! இவை மக்களின் சிந்தனைக்குத் தெரிந்து விட்டால் பெரும் டேமேஜ் என மிரட்டுபவர்களும் உண்டு. கடவுளின் பெயர் கட்சித்தலைவர்களுக்கு இருப்பதால், அவர்கள் கடவுளாக முடியாது. கடவுளைக்காட்டி அரசியல் செய்த டில்லி காங்கிரஸை வாள்கொண்டு விரட்டிய ஈவேராவை தமிழகம் புகழ்ந்தது. டில்லி தூதர்கள் சொல்லுக்கு ஆடும் சின்னக் கட்சிகள் இலங்கை அரசியலிருந்து தூக்கி எறியப்படுவது மாங்காய்த் தீவில் பல முறை நடந்துள்ளது. தற்போதும் நடந்து வருகின்றது.

— நீர்வர்மன்

# இலுப்பை மர நிழலிலே...!

மாலை எனும் எழில் விளைக்கும் அழகார்ந்த பதியில்
மனங்கவர வளர்ந்துநின்ற இலுப்பை மரம் ஒன்றே!
யாவரையும் கவர்கின்ற கிளைகள் பல கொண்ட
யாவர்க்கும் பயன்நல்கிச் செழித்து நின்ற தங்கே!

உலகத்துப் பறவையெலாம் அங்குவந்து சேரும்
உவப்புடனே பழத்தைத்தான் புசித்துப்பின் பாடும்
நலம் விளைக்கும் இளம்தென்றல் நற்சுகமேவிளைக்கும்
இயற்கை நல்கும் எழிற்செல்வம் செழித்துநிற்கும் அங்கே

சிறுமியர்கள் மணல்வீடு கட்டி மகிழ்வார்கள்
சிறுவர் சிலர் அயலினிலே பந்தாடி மகிழ்வர்
சிறுவர் சிலர் அயலினிலே ஆடுகின்ற பந்து
சிலவேளை உருண்டோடித் தொல்லை [illegible]

மாலையெனும் பதியினிலே அப்போது வாழ்ந்தோர்
மகிழ்வுதரும் உறவினரே பிரச்சினைகள் இல்லை
பாவையர்கள் கூட்டாக தாம் சமைத்திட்ட உணவை
பற்றுடனே மரநிழலில் பகிர்ந்துண்டு மகிழ்வார்

இலுப்பைமரம் என்றதனை ஒரு சொல்லில் சொன்னேன்
இல்லையது மரம் அல்லத்தெய்வம் எனல் தகுமே
நலம்பயக்கும் இலுப்பைமரக் காற்றளிக்கும் சுகத்தால்
நாளுமெங்கள் நலம் காக்கும் மருத்துவரும் ஆகும்

ஒருகாலம் இலுப்பை மரம் பூத்துநிற்கும் காற்றில்
உவப்புடனே வாசனையைப் பரப்பி நிற்கும் பெரிதும்
ஒருகாலம் இலுப்பைமரம் இனியபழம் வழங்கும்
உண்பதற்குப் பறவையினம் ஒன்றுபட்டே கூடும்

முதியோர்கள் இலுப்பை [illegible]
[illegible]

தாயவரும் இலுப்பை மர நிழலதனை [illegible]
[illegible]
சிந்திக்கின் இலுப்பை மரநிழலும் [illegible]

பறவைகளோ எப்போதும் அதன் கிளையில் தங்கும்
பற்றுடனே கதைகள் பலபேசி [illegible]
பறவைகளின் அழகுகண்டு ரசிப்பாரே அன்றி
பண்பின்றி அவற்றைக் கொன்றுண்பவர்கள் இல்லை

அம்மரத்தின் நிழலிலே சிலகாலம் தன்னில்
அருமற்ற தனிமைவந்து சேருதலுமுண்டு
எந்த அந்த ஒருநாளில் பேரழகு ஒருத்தி
வந்து சிலவேளைகளில் தனித்தமர்ந்து கொள்வாள்

ஆரும் இல்லாதொரு வேளையில் மதியம்
சீரிய இலுப்பையின் பாரியவேரில்
வந்தோர் இளம்பெண் தனிமையில் இருப்பாள்
அந்தப் பேரெழில் அழகியின் முகமோ
புன்னகை துறந்து ஆண்டுகள் சிலவாய்
தன்நிலை தளர்ந்து தனிமையில் அழுவாள்
[illegible]

[illegible]

தாயைப் பிரிந்து வேறோர் குடும்பமாய்
வாழும் இயல்பைப் பெற்று விடுவாள்
அவசரப்பட்டால் ரோஜாச் செடிபோல்
அவளும் வாழ்வில் சிதைந்தே விடுவாள்
இந்தப் பெண்ணும் ரோஜாக் கிளையே

இவள் துணையானோன் கல் நெஞ்சதனில்
இக்கிளை வேர்விடல் இயலாது போகத்
தாயின் வீடு நாடி வந்தது
அந்த நிலையிலும் வெறுக்கா ஒருத்தி

தாய்! தாய்! அதனால் தாயே தெய்வம்
கணவனைப் பிரிந்த பெண்கட்கெல்லாம்
தாயே தெய்வம் வீடே கோயில்
இதுவே அப்பெண்ணின் விபரம் ஆகும்

அவளின் கண்ணீர் அவளது துயரம்
இலுப்பை மரமேமுற்றிலும் அறியும்
சிறுமியாய் ஓடி ஆடிய நாள்கள்
வளர்ந்து சிறுகதை படித்த நாள்கள்

கற்பனை ஆயிரம் மனத்தில் படைத்தே
கற்பனை வாழ்வில் மகிழ்ந்த நாள்கள்
அனைத்தும் அந்த இலுப்பை அறியும்
அதனால் இலுப்பையும் அவட்குத் தாயே

அவளது கண்ணீர் அவளது துயரம்
அறிந்த இலுப்பையை நிகழ்ந்த போரினால்
[illegible] இழந்தே இருந்தேன்
போர் முடிவுற்றதாய் அரசின் கூற்றைக்

கூறக் கேட்டே இலுப்பையைப் பார்க்கும்
ஆவலில் ஓடினேன் இலுப்பை அங்கில்லை
[illegible]
[illegible]

இலுப்பையை [illegible] இலுப்பையை
[illegible]



[illegible]
இருக்கிறார்களே!

— புலவர். ம.பார்வதிநாதசிவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிரசன்ன விதானகேயின்

# 'உன்னுடனும் நீயின்றியும்'

■ ஜெகநாதன்



பிரசன்ன விதானகேயின் 'ஒப எக்க, ஒப நெத்துவ' என்ற திரைப்படம் மொன்றியலில் நடைபெற்ற உலகத் திரைப்பட விழாவில் பங்கேற்றுள்ளது. தமிழில் இதன் அர்த்தம் 'உன்னுடனும் நீயின்றியும்'. படத்தின் பெயரே ஒரு கவிதை போல் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. கடந்தமாதம் 23ம் திகதி தொடக்கம் இம்மாதம் 3ம் திகதி வரை மொன்றியலில் நடைபெற்ற உலகத் திரைப்பட விழாவிலேயே இந்தத் திரைப்படம் பங்கேற்றுள்ளது.

சிங்களத் திரைப்பட இயக்குநரான பிரசன்ன விதானகே சிறந்ததொரு கலைஞர். ஒரு கலைஞனுக்கு இருக்க வேண்டிய மனிதாபிமான மனம் படைத்தவர். ஒடுக்கு முறைக்குள்ளாகியுள்ள தமிழ்மக்களின் பிரச்சினைகளில் அனுதாபம் கொண்டவர். போர்க் காலத்தில் இவரின் இயக்கத்தில் வெளியான 'புரகந்த களுவற' அனைவரது கவனத்தையும் ஈர்த்த ஒரு திரைப்படமாகும். இப்போது இவர் இயக்கத்தில் வெளிவந்துள்ள 'ஒப எக்க ஒப நெத்துவ' இலங்கையில் திரையிடப்பட தடைசெய்யப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

பிரசன்னவின் இயக்கத்தில் இதற்கு முன்னதாக 2009இல் வெளிவந்த படம் 'ஆகாச குசும்'. இப்படமே அவரது கடைசிப் படமாக அமையக்கூடும் என அவர் அறிவித்தபோது எல்லோரது கவனமும் அவர்பால் திரும்பியது. அத்தகைய ஓர் முடிவினை அவர் எடுப்பதற்கு தூண்டியது எது என்பது விபரிக்கப்படவில்லை.

மூன்று வருடங்களின் பின்னர் உள்ளூர் திரைப்படத்துறையின் வரையறைக்குள் ஒருசில பரீட்சார்த்தமான முயற்சிகளின் பின்பு பிரசன்ன மீண்டும் ஒரு தடவை வித்தியாசமான படைப்பில் ஈடுபட்டுள்ளார். இத்தடவை, கதை ஓர் வித்தியாசமானது என அவரே கூறுகிறார்.

அவரது சிந்தனையை மாற்றியது என்ன? அவரது இந்த திரைப்படத்தின் துணிகர முயற்சியினூடாக ரசிகர்கள் எதிர்பார்ப்பது என்ன? என்பது பற்றி பிரசன்ன ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிட்டுள்ளார்.

'ஆகாச குசும்' வெளியிடுவதற்குச் சற்று முன்பாக நான் இனிமேல் ஒரு படத்தையும் தயாரிக்கமாட்டேன் என அறிவித்திருந்தேன். நான் சிங்களத் திரைப்படங்கள் குறித்தே அறிக்கை செய்தேன். விநியோக வேலைகள் மற்றும் அனைத்தையும் உள்ளடக்கியதாக திரைப்படத்துறையின் செயற்பாடுகளில் நான் விரக்தியடைந்து விட்டேன் எனக் கூறினார் விதானகே. அத்துடன் அவர் மற்றுமொரு சிங்களத் திரைப்படத்தைத் தயாரிக்கும் முயற்சியைக் கைவிடுவதற்கு விளக்கமளித்த காரணங்களையும் கூறுகிறார்.

சிங்களத் திரைப்படத்துறையில் விநியோகஸ்தர்கள் தயாரிப்பாளர்களை மிகப் பெரிய அளவில் நம்பிக்கையை இழக்கச் செய்துவிட்டனர். விற்பனையாகும் ஒரு திரைப்படத்திற்கான நுழைவுச் சீட்டினூடாகக் கிடைக்கும் பணத்தில் தயாரிப்பாளர்கள் 45 வீதமானதை மட்டுமே சம்பாதிக்கின்றனர். மற்ற 45 வீதம் திரையரங்கிற்கும் அத்துடன் எஞ்சிய தொகை விநியோகம் மற்றும் செலவுகளுக்கும் பங்கிடப்படுகின்றது. ஆனால், இன்றைய நாட்களில் சிறீலங்காவில் திரைப்பட விளம்பரம் என்பது முக்கிய பாத்திரத்தை வகிக்கின்றது. அத்தகைய செலவீனங்கள் யாவும் தயாரிப்பாளர் தலையிலேயே தாங்கிக் கொள்ள வேண்டியுள்ளது. இது ஓர் உகந்ததாயிராத, வழக்கம் மீறிய நிலையாக உள்ளது. இதுவே இன்று பெரிய அளவில் திரைப்படத்துறையின் வீழ்ச்சிக்கான பிரதான காரணங்களில் ஒன்றாகவுள்ளது என்கிறார் அவர்.



அவரது புதிய திரைப்படத் துறையின் துணிகர முயற்சிக்கு இரண்டாண்டுகள் எடுத்தது. அத்துடன் வெளிநாட்டுச் சந்தைகளில் நுழையும் முகமாகவே இது ஆரம்பிக்கப்பட்டது.

'ஆகாச குசும்' வெற்றியைத் தொடர்ந்து இயக்குநர் என்ற வகையில் அவரது வரையறைக்குள் சவால்விடும் ஓர் கதையினைத் தேடியபடி இருந்தார். "ஒரு திரைப்படத்தைத் தயாரிப்பதை இனிமேலும் ஓர் பயிற்சியாக எடுத்துக் கொள்ளமுடியாது. புதிய படத்தினூடாக என்து ரசிகர்களுக்கு இதுவரைகாலமும் வெளிப்படுத்தியதை விட சற்று அதிகமாக வெளிப்படுத்துவதற்கே விரும்புகிறேன்" எனக் கூறுகிறார்.

'பியோடோர் மிக்கொலோவிச் டொஸ்ரொயெவ்ஸ்கியின் குறுங்கதை ஒன்றின் மூலம் பிரசன்ன விதானகே அவரது படைப்பிற்கான புறத்தூண்டுதலைக் கண்டுபிடித்தார். ஆழமான உறவுமுறைகளைச் சுற்றிச் சுழலும் ஓர் சிக்கலான காதல்கதை. அதில் அவர் தமது வாழ்நாளில் பெற்ற பாக்கியங்களை உணரத் தவறிய மக்கள் குறித்தும், அவர்கள் மீது அன்பாகவும் அவர்களின் அன்பிற்காக ஏங்கியவர்களாகவும், எவ்விதமாக அவர்களைப் பயன்படுத்துபவர்களினால் அவர்கள் திசைதிருப்பப்படுகின்றனர் என்பதனையும் இக்கதையினூடாக கூறுகிறார். அத்துடன் ஆழமான உறவுகளுக்குள் புதைந்து கிடக்கும் முரண்பாடுகள் எப் பெரும்பாலும் ஓர் உருவகத்தையே விரித்துரைக்கிறார்.

சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரண்டு மொழிகளைக் கொண்ட கதாபாத்திரங்களைக் கொண்ட ஓர் இருமொழி பேசும் திரைப்படமாக இது அமைந்துள்ளது.

**அரச கற்பனாசிரியர்களும் மற்றும் உள்ளூர் திரைப்படமும்.**

"மீண்டும் மீண்டும் தற்போதைய நிலைமையைத் திருத்தியமைப்பதற்கு கடும் முயற்சிகள் எடுத்தபோதிலும் எதுவித மாற்றங்களும் செய்யப்படவில்லை. சிறீலங்கா திரைப்படத் தயாரிப்பாளர்கள் சங்கம் (SLFPG) நிறுவிய ஆரம்ப உறுப்பினர் நான். அத்துடன் தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்திற்குத் திரைப்படங்களின் வருமானங்களில் உயர்ந்த வீதத்தை தயாரிப்பாளர்களை அடைவதற்கு ஆவன செய்யவேண்டியும், அத்துடன் விநியோகஸ்தர்கள் விளம்பரத்தில் ஈடுபடுத்தப்படுதல் வேண்டுமெனவும் கோரி ஓர் முன்மொழிவினைச் சமர்ப்பித்துள்ளோம். நான் சரியான அழுத்தத்தைக் கொடுக்கத் தவறிவிட்டதாக நம்புகிறேன். எனவே நான் சிறீலங்கா திரைப்படத் தயாரிப்பாளர்கள் சங்கத்தில் இருந்து எனது பதவியை ராஜினாமாச் செய்துவிட்டேன்" என அவர் தெரிவித்தார்.

திரைப்பட அரங்குகளின் நிலைமை, திரைப்படங்களின் தளம் போன்றவை உட்படப் பலவற்றிற்கு திரைப்படங்கள் எண்ணற்ற சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. டி.வி.டி. மற்றும் களவாக விற்கப்படும் டி.வி.டி அத்துடன் தொலைக்காட்சி என்பவற்றின் விளைவாக திரையரங்குகளில் சனத்திரள் குறைந்துவிட்டன. அதுமட்டுமல்ல சினிமாத்துறையில் ஈடுபட்டிருக்கும் பெரும்பான்மையானவர்கள் உள்ளூர் தயாரிப்பாளர்களின் கஸ்ரமான நிலைமைகளை ஏற்றுக் கொள்கின்றனர் எனக் கூறும் விதானகே பெரும்பாலானவர்கள் அரசிடம் நற்பெயர் பெறுவதற்காகவும் தமது சுய லாபங்களுக்காகவும் மாற்றமொன்றிற்காகப் போராடுவதற்கு ஆயத்தமாக இல்லை எனவும் கூறுகிறார்.

மேலும் "இன்று கல்வி அமைச்சிடம் இருந்து ஓர் நற்சான்றிதழை அல்லது சிபாரிசுக் கடிதத்தைப் பெறுவது திரைப்படத்திற்கான ஓர் சிறப்புக் குறியீட்டினையும் உயர்வான கணிப்பீட்டையும் வழங்குகின்றது. இன்று நாட்டில் நாலு மில்லியன் மாணவர்கள் உள்ளனர். எனவே தயாரிப்பாளர்கள் இச்சிபாரிசுக் கடிதத்தைப் பெற்றுக் கொண்டு சம்பாதிக்கின்றனர்" என முறையிட்டார்.

"இப்பொழுது நிலைமைமேலும் மோசமடைந்துவிட்டது. அரச கற்பனையாளர்களை ஆதரிக்கும் திரைப்படங்களே அரசாங்கத்தால் அனுமதிக்கப்படுகின்றன. அதன் நிமித்தமாக அரசாங்கத்திடமிருந்து உதவியைப் பெறுவதற்குத் தயாரிப்பாளர்கள் சகலரும் முன்று திரளுகின்றனர். தணிக்கைகள், வெட்டி நீக்குதல், பதுக்கி வைத்தல் என்பன இலவசமாக வழங்கப் படுகின்றன. அத்துடன் அரசாங்க ஊடகங்களோ அவ்வாறான திரைப்படங்களின் மேம்பாட்டிற்கெனத் தாராளமாக மிகச் சிறந்த முறையில் பயன்படுத்தப்படுகின்றன. இதுவே இன்றைய உள்ளூர் திரைப்படத்துறையின் நவீன பாணியாக மாறிவிட்டது.

"அரசாங்கத்தின் சிந்தனைகள் அல்ல திரைப்படத்துறையின் தரமே முதன்மையானதாகும். அது சுயமாகத் தானாக வெளிப்படுத்தப்பட்டாலே கலை பயன்பாட்டில் உள்ளதாக இருக்கும். படைப்பாற்றலுக்கும் அரசின் பணிப்புகளுக்குமான உறவுநிலை இறுக்கம் மேலும் உள்ளூர் திரைப்படத் துறையின் மோசமான படிப்படியான சீர்கேட்டிற்கு வழிவகுக்கும்" என்கிறார் நீண்டகால அனுபவமுடையவரான திரைப்படத் தயாரிப்பாளரும் இயக்குநருமான பிரசன்ன விதானகே சென்றதுவா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வெளிச்சத்துக்கு வந்துள்ள மேலும் பல ஊழல்கள்!

இந்திய தேசத்தின் வளர்ச்சிக்கு பிரதான தடையாக இருப்பது ஊழல் என்பது சகலரும் அறிந்த உண்மையே எனினும் சமீப காலமாக நீதித்துறை, கணக்காய்வாளர் அதிபதி, (Auditor General) தேர்தல் ஆணையாளர் முதலிய நடுநிலையாக செயற்பட வேண்டிய அரச அதிகாரிகள் இப்போதுதான் சரியாக நடுநிலையாக செயற்பட முனைந்திருப்பதால் ஆளும் வர்க்கத்தின் ஊழல்கள் வெளிச்சம் போட்டுக் காட்டப்படத் தொடங்கியுள்ளன. நிலக்கரி சுரங்கம் அகழ தனியார் கம்பனிகளுக்கு செய்யப்பட்ட ஒதுக்கீட்டில் மத்திய அரசு செய்த ஊழல் காரணமாக அரச கஜானாவுக்கு கோடிக்கணக்கில் இழப்பு ஏற்பட்டதான குற்றச்சாட்டில் எதிர்க்கட்சிகள் அமளிதுமளி ஏற்படுத்தி, கடந்த இரண்டு வாரங்களாக இந்திய நாடாளுமன்றின் செயற்பாடுகள் யாவும் முடங்கிப் போயுள்ளன. பிரதமர் மன்மோகன் சிங் பதவி விலகவேண்டும் என்பதில் எதிர்க்கட்சிகள் விடாப்பிடியாக இருப்பதால் இந்த நிலை தொடர்கிறது. காங்கிரஸ் தலைவர் சோனியா பிரதான எதிர்க்கட்சியான பிஜேபியின் தலைவரும் லோக்சபா எதிர்க்கட்சித் தலைவருமான சுஷ்மா ஸ்வராஜை சந்தித்து சுமூகநிலையை எட்ட முயன்றும் தோல்வியே ஏற்பட்டது.

இதற்கு முன்னர் ஆளும் காங்கிரஸ் கூட்டணியின் பங்காளிக் கட்சியான திமுகவின் ராசா செய்த ஊழல் போலன்றி இந்த ஊழல் குற்றச்சாட்டானது நேரடியாக காங்கிரஸ் கட்சி மீதே விழுந்துள்ளது. இதனால் அரசாங்கம் திக்குமுக்காடுவது தெளிவாகத் தெரியும் உண்மையாகும். இலங்கை முதலான சிறிய நாடுகளில் போலன்றி இந்தியாவில் தேர்தல் ஆணையர், நீதிபதிகள், கலெக்டர் எனப்படும் அரசாங்க அதிபர், கணக்காய்வு அதிபதி போன்ற பெரிய பதவிகளில் இருப்பவர்களுக்கு மிக அதிக சம்பளம் வழங்கப்படுகிறது. இதனால் இந்த உயர்பதவிகளில் இருப்பவர்களுக்கு லஞ்சம் வாங்கித்தான் வாழ வேண்டும் என்ற கட்டாயம் கிடையாது. அரசுக்கு ஜால்ரா அடித்தோ அமைச்சர்களை வால்பிடித்தோ வாழ வேண்டிய அவசியமும் இல்லை. இதனால் அரசயந்திரத்தில் ஆளும் கட்சியின் திருகுதாளங்களை தயங்காமல் இந்த அதிகாரிகள் வெளியிட முற்பட்டுவருவது சமீபகால முன்னேற்றமாகும். உண்மையில் ஜனநாயகம் என்ற உயரிய கோட்பாட்டின் நோக்கமும் நெறிமுறைகளும் கூட இவர்கள் இவ்வாறு நடக்க வேண்டும் என்றுதான் விதிமுறைகளை வகுத்துள்ளன. காந்திய நெறிமுறைகளும் ஜனநாயக விதிமுறைகளும் இணைந்து இன்று ஆளும் வர்க்கத்திற்கு சிம்ம சொப்பனமாகியுள்ளன.

மத்தியில் காங்கிரஸ் இவ்வாறு தள்ளாடுகிறதென்றால் தமிழகத்தில் அதன் பங்காளியான திராவிட முன்னேற்றக்கழகத்திலும் இந்த புதிய சீர்திருத்தங்கள் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளன. திமுக தலைவரின் மகனும் மத்திய அமைச்சருமான அழகிரியின் மகன் துரை தயாநிதி மதுரையின் கிரனைட் சுரங்க ஊழல் குத்தகையில் நெறிமுறைகளை மீறியதாக விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. இது ஜெயலலிதாவின் பழிவாங்கல் என கலைஞர் தரப்பு வழமையான பல்லவியை பாடினாலும் கூட அதிமுகவின் ஊழல் செய்பவர்கள் மீதும் கூட விசாரணை பாய்ந்துள்ளது என்பதை இங்கு கவனிக்க வேண்டும். இந்த விசாரணை வேட்டையில் தமிழகத்தின் ஆளும் கட்சியென்ன காங்கிரசென்ன சகல கட்சிகளிலும் உள்ள ஊழல் பெருச்சாளிகளும் விழிபிதுங்கி நிற்கின்றனர். அழகிரியின் மகன் எந்நேரமும் கைது செய்யப்படலாம் என்றும் தகவல்கள்

> மத்திய அரசுக்கு நாடாளுமன்றில் பெரும் நெருக்கடி தந்து வரும் எதிர்க் கட்சிகளை திசை திருப்ப அரச உயரதி காரிகளின் பதவி உயர்வில் தாழ்த்தப்பட்ட சமூகத்தினருக்கு இட ஒதுக்கீடு என்ற மசோதாவை காங்கிரஸ் அரசு களமிறக் கியுள்ளது. இது நிறைவேறுவதைத் தடுத் தால் தாழ்த்தப்பட்ட மக்கள் சமூகத்தின் வெறுப்பை பிஜேபி சந்திக்க நேரிடும். மசோதா நிறைவேற ஒத்துழைத்து பாராளு மன்றம் சுமுகமாக நடைபெற இடம் விட்டால் நிலக்கரி ஊழலில் வகையாகச் சிக்கிக் கொண்ட காங்கிரஸ் அரசை அதைச் சாட்டி ஒரு கை பார்க்கும் வாய்ப்பு பறி போகும். இவ்வாறு பிஜேபியும் காங்கிரசும் ராஜதந்திர காய்நகர்த்தல்களில் ஒன்றை ஒன்று முந்திக் கொண்டு செயற்பட்டு வருவது சுவாரஸ்யமான ஜனநாயகப் போர் எனலாம்.

சுழுகின்றன. அப்படி நடந்தால் மகன் கனிமொழிக்கு அடுத்து பேரன் துரை தயாநிதி சிறை செல்லும் கண் கொள்ளாக் காட்சியை கருணாநிதி 89 வயதில் காண நேரிடலாம்.

இது இவ்வாறிருக்க, மத்திய அரசுக்கு நாடாளுமன்றில் பெரும் நெருக்கடி தந்து வரும் எதிர்க்கட்சிகளை திசை திருப்ப அரச உயரதி காரிகளின் பதவி உயர்வில் தாழ்த்தப்பட்ட சமூகத்தினருக்கு இட ஒதுக்கீடு என்ற மசோதாவை காங்கிரஸ் அரசு களமிறக்கியுள்ளது. இது நிறைவேறுவதைத் தடுத்தால் தாழ்த்தப்பட்ட மக்கள் சமூகத்தின் வெறுப்பை பிஜேபி சந்திக்க நேரிடும். மசோதா நிறைவேற ஒத்துழைத்து பாராளுமன்றம் சுமுகமாக நடைபெற இடம் விட்டால் நிலக்கரி ஊழலில் வகையாகச் சிக்கிக் கொண்ட காங்கிரஸ் அரசை அதைச்சாட்டி ஒரு கை பார்க்கும் வாய்ப்பு பறிபோகும். இவ்வாறு பிஜேபியும் காங்கிரசும் ராஜதந்திர காய்நகர்த்தல்களில் ஒன்றை ஒன்று முந்திக் கொண்டு செயற்பட்டு வருவது சுவாரஸ்யமான ஜனநாயகப் போர் எனலாம்.

ஊழல்களைப் போலவே மதக் கலவரங்கள் இனக்கலவரங்களைத் தூண்டி சிறுபான்மையினரை வேட்டையாடும் அரசியல் தலைவர்கள் நோக்கியும் இப்போது நீதிமன்றங்கள் சாட்டையைச் சுழற்றத் தொடங்கியுள்ளன. 2002ல் குஜராத்தில் அப்பாவி முஸ்லிம்களை வேட்டையாடிய முதலமைச்சர் நரேந்திரமோடியின் ஆதரவாளர்கள் மீதான [illegible] கடும் தண்டனைகள் வழங்கப்பட்டு வருகின்றன. தலைநகர் அகமதாபாத்தின் நரோடா – பாடியா என்ற பகுதியில் 95 முஸ்லிம்கள் கொல்லப்பட்ட வழக்கில் நரேந்திரமோடியின் அமைச்சர் ஒருவருக்கு கடந்த வாரம் நீதிமன்றம் 28 வருட கடுங்காவல் தண்டனை வழங்கி வரலாற்று சிறப்பு வாய்ந்த தீர்ப்பை வெளியிட்டுள்ளது. இந்திய வரலாற்றில் ஆளும் கட்சியின் அமைச்சர் ஒருவருக்கு அதுவும் பெண் அமைச்சர் அதுவும் டொக்டரான ஒருவருக்கு இத்தண்டனை வழங்கப்பட்டது மிகச் சிறப்பானது எனலாம். மகப்பேற்று வைத்தியரான வைத்திய நிபுணர் டொக்டரர் மாயாபென் கொட்னானி என்பவரே இவ்வாறு சிறையிடப்பட்டுள்ளார். பெண்ணாக அதுவும் மகப்பேற்று வைத்திய நிபுணராக இருந்து வைத்தியசாலையையும் நடத்தும் இவர் பிஜேபியின் மத வெறியில் கண்மண் தெரியாது அப்பாவி சிறுபான்மை இனத்து குழந்தைகளையும் வயோதிபர்களையும் தீயிட்டுக் கொழுத்துவதற்கு இந்த அமைச்சர் சிறந்த இலக்கணமாக இருந்துள்ளார். கலவரம் நடந்த போது இவர் அப்பகுதியின் பிஜேபி எம்.எல்.ஏ.வாக



இருந்துள்ளார். இவர் சம்பவ இடத்தில் நின்றபடி கலவரத்தைத் தூண்டியது சந்தேகத்துக் கிடமின்றி நிருபிக்கப்பட்டதாக பெண் நீதிபதி ஜோதஸ்னா யாக்னிக் தனது தீர்ப்பில் குறிப்பிட்டார். கலவரத்தின் பின் முதலமைச்சர் நரேந்திரமோடி எம்.எல்.ஏ.வான இந்த டொக்டரை அமைச்சராக பதவி உயர்த்தி இருந்ததும் குறிப்பிடத்தக்கது. எனினும் இப்போது இவரைக் காப்பாற்ற எந்த முயற்சியும் எடுக்கவில்லையென மோடி மீது குற்றச் சாட்டுகள் சுமத்த தீவிர இந்துத்துவப் பிரிவினர் முனைந்துள்ளனர். நரேந்திரமோடி எதையும் வெற்றிகரமாகச் சாதிப்பவர் என்று கருதப்பட்ட நிலையில் இந்தத் தீர்ப்பு அவருக்கு பெரும் பின்னடைவே ஆகும். மோடியின் மற்றொரு அமைச்சரும் ஏற்கனவே கிரிமினல் வழக்கில் கைதாகி பிணையில் வெளிவந்துள்ளார். இவ்வருட இறுதியில் குஜராத்தில் மிக முக்கிய சட்டசபைத் தேர்தல்கள் நடக்கவுள்ளன. மோடி கொலைகாரர் ஆயினும் பிரம்மச்சாரி என்பதால் தனக்கென சொத்து சேர்க்காத நேர்மையான முதல்வரென பெயரெடுத்தவர் ஆவார். தொழில் வளர்ச்சியிலும் மாநிலத்தை முன்னேற்றியுள்ளார். இவற்றைத் தாண்டி சட்டமும் நீதியும் அவரது தேர்தல் தோல்விக்கு வித்திட முடியுமா என்பது சந்தேகமே.

**-அபிஜித்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காதலில் தோற்றவர்களுக்கு...




# பித்தன் பதில்கள்

எம்.ஆரியசுரார்த்தி, கொழும்பு 11
கே: பித்தரே, ஆண்கள் பெண்களைவிடத் தைரியசாலிகள் என்கிறான் என் நண்பன். இது எந்த அளவுக்கு உண்மை?



ப: ஆண்கள் வெளியில் சண்டியர்கள், தைரியசாலிகள் என்று கூறினால் ஓரளவு ஏற்றுக் கொள்ளலாம். வீட்டில் வீட்டுக்காரியிடம் பெட்டிப் பாம்பாக அடங்கி விடுவார்கள்.

ரா.பகீரதன், கோண்டாவில்
கே: காதலில் தோற்றவர்களுக்கு நீர் என்ன கூற விரும்புகிறீர்?
ப: காதலில் எத்தனை முறைதான் தோற்றாலும் அதனால் பாதிப்பு ஏதும் ஏற்பட்டு விடப்போவதில்லை. ஏனென்றால் அதில் ஜெயித்த பின்னர்தான் தோற்றிருந்தால் தனித்திருப்பேனோ, என்று எண்ணத் தோன்றும்.




தே.இளவரசன், பருத்தித்துறை
கே: சில வயதானவர்களைப் பார்த்து மனிதருக்கு மீசை நரைத்தும் ஆசை நரைக்கவில்லையே என்று கிண்டல் செய்கிறோமே. இது பொருத்தமா பித்தரே?
ப: மீசை நரைத்தால் 'டை' பூசிச் சரிசெய்து விடலாம். ஆனால் மனிதனாகப் பிறந்தவனுக்கு ஆசையை விடச் சொல்ல இயலாதே. உயிர் உள்ள வரை ஏதோவொரு ஆசை அவன் மனதில் இருந்து கொண்டு தான் ஆகும்.



பூ.கோமதி, மன்னார்
கே: ஒரு மனிதனது வாழ்க்கையில் அவனை விட்டு ஒருபோதும் விலகாத உறவு எது பித்தரே?
ப: சந்தேகமென்ன மற்றெல்லா உறவுகளும் அவனுடன் இடைநடுவில் இணைந்துகொள்ளும் உறவுகள். அவன் கருவாகி வளர்ந்தது முதலே அவனுடன் ஒட்டிக் கொண்ட உறவு தாய் ஒருத்தியே. தாமாக விலகிச் சென்றாலும் நாமாக விலக்கி வைத்தாலும் எம்மை விட்டு விலகாத உறவு அது. இடைநடுவில் அதை இழக்க நேர்ந்தால் அது அவனது துரதிருஷ்டமே.

பா.மகேந்திரன், மட்டக்களப்பு
கே: பெண்ணுக்குப் பெருமை என்ன பித்தரே அதேசமயம் ஆணுக்குப் பெருமை என்ன பித்தரே?



ப: பெண்ணுக்குப் பெருமை மனைவி என்ற ஸ்தானத்திலிருந்து ஒரு குழந்தையின் தாய் என்ற பேற்றை அடைதல். ஆணுக்குப் பெருமை கணவன் என்ற ஸ்தானத்திலிருந்து தனது மனைவியைத் தாய் என்ற ஸ்தானத்தை அடைய வைத்து மகிழ்தல்.

பு.பாலேந்திரா, கொட்டாஞ்சேனை
கே: உலகளாவிய ரீதியில் சமாதானமும் சகவாழ்வும் எப்போது ஏற்படக்கூடும் பித்தரே?
ப: மனிதன் உயிர் வாழ்வதற்கு உணவு என்று ஒன்று தேவையில்லை என்ற நிலை ஏற்படுமானால் ஒரு வேளை உலகம் அமைதியாக இயங்கக் கூடுமோ என்னமோ?




க.உருத்திரன், பூநகரி
கே: உலகில் மிகப்பெரும் பணக்காரர் யார் பித்தரே?
ப: இது குறித்து ஆய்வு செய்து புள்ளி விபரங்கள் திரட்டி வெளியிடவென இன்று உலகில் தனியான அமைப்பொன்றே இயங்குகிறது. அதன் முடிவுப்படி காலத்துக்குக்காலம் ஆள்கள் மாறுபடுகின்றனர். ஆனால் ஆசையைத் துறந்தவனே உலகில் பெரும் பணக்காரன் என்பது சுவாமி விவேகானந்தரின் சித்தாந்தம்.

ச.நேசவதி, முல்லைத்தீவு
கே: சில வீடுகளில் மாமி மருமகள் சண்டைச் சச்சரவில் எதுவுமே செய்ய இயலாது 'பேப்பே' என்று கணவன் விழிப்பதாகக் கேள்விப்படுகிறோம். அப்படி ஒரு நிலைமை உங்கள் வீட்டில் ஏற்பட்டால் உமது ஆதரவு மனைவிக்கா அல்லது உமது தாயாருக்கா?
ப: சண்டை சச்சரவில் யார் கை ஓங்குகிறதோ அந்தப் பக்கத்துக்கு ஆதரவு காட்டினால் நான் இலேசில் தப்பித்துக்கொள்ள முடியுமல்லவா? எப்படி எனது ஐடியா?

---

## சொற்சிலம்பம் போட்டி இல: 538



### மேலிருந்து கீழ்

01. முதல் செய்யுளின் இறுதியை அடுத்ததன் தொடக்கமாகக் கொண்ட நூறு செய்யுள்களின் தொகுதி
02. பருவப் பெண்
03. சேற்றுத் தன்மை
04. பிறப்புப் பற்றிய சோதிடக் குறிப்பு
05. குளிகை
09. கலாசாரம்
10. குதிரை
14. குற்றத்துக்காக விதிக்கப்படுவது
16. நகைச் சுவையாகச் செய்வது
18. குலைப் பண்பு
19. படிக்க
20. பூட்டான் தலைநகர்

### இடமிருந்து வலம்

01. யானையை அடக்குவது இதனால்
04. திருப்பு
06. போதை தருவது
07. ஆணையும் பெண்ணையும் வசப்படுத்துவது இது
08. ஜீவனாம்சம்
11. இது அறுபத்து நான்காமே!
12. வலிமை
13. வளர்ச்சிக்கு உதவும் சத்து
15. பாவம் செய்தவன்
17. பட்டத்தில் கட்டுவார்கள்
19. விரைந்து செல்வது
21. குப்பி.
22. மமதைப் பேச்சு
23. சீனி தயாரிப்புக்கான மூலப்பொருள்
24. நிலத்திலிருந்து வானுக்கு ஏவும் ஏவுகணை வகை

அனுப்புபவர் பெயர்: .......................................

விலாசம்: .......................................

.......................................

கையொப்பம்: .......................................

## சொற்சிலம்பம் போட்டி இல. 538

சொற்சிலம்பம் 538 போட்டிக்கான விடைகளை அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2012 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 26 ஆம் திகதி ஆகும். விடைகள், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் ஒக்ரோபர் 03 ஆம் திகதிய சுடர் ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும்.

முதலாவது பரிசாக ரூபா 250உம் இரண்டாவது பரிசாக ரூபா 150 உம் மூன்றாவது பரிசாக ரூபா 100உம் வழங்கப்படும். சகல விடைகளைச் சரியாக எழுதியுப் பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தெரிந்தெடுக்கப்படுவார்கள்.

**அனுப்பவேண்டிய முகவரி:**

சுடர் ஒளி யாழ். அலுவலகம்,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

## சொற்சிலம்பம் போட்டி இல: 535 விடைகள்

**மேலிருந்து கீழ்**

01.பிரசவம், 02.மாசத்துவன், 03.தமது, 04.மாண், 05.குடுகுடு, 07.சூரி, 09.மறி, 10.வசம், 13.பால், 15.துறுதலை, 16.நண்டு, 17.அடுக, 18.விழுதி, 19.ஆனி.

**இடமிருந்து வலம்**

01.பிரமாதம், 04.பழகு, 06.சுமை, 07.குண்டு, 08.சமத்துவம், 11.மறிது, 12. சாபமாடு, 14.வதம், 16.நன்றா, 17.கஸ்வி, 19.அண், 20.தண்டு, 21.விடுதலை, 22.குருதி.

## போட்டி இல. 535 இல் பரிசு பெற்றோர்

**1ஆம் பரிசு** ஜீ.சத்தியபாமுதி, இல. 36/15, பள்ளிவ வீதி, வத்தேகம.

**2ஆம் பரிசு** திருமதி.நிர்றா பாலேந்திரா, இல.91/6 குளோப்மில் றோட், பண்டாரிக்குளம், வவுனியா.

**3ஆம் பரிசு** மரஸ்மிதாத் கலீல், இல.48 கண்டி வீதி, திஹாரிய, காகெதிஹெனை.

## பாராட்டுப் பெறுவோர்

(1) சி.லக்ஷன்,
வாசிகசாலை வீதி,
கொம்மாதுறை, செங்கலடி.
(2) எஸ்.துங்கத்துரை,
இல.7/115 C சவளக்கடை,
கல்முனை.
(3) செல்வி.செ.நாகமுத்து,
மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.
(4) நா.இரத்தினராசா,
அளம்பில்,
முல்லைத்தீவு.
(5) செல்வி.அ.றிரோமி,
"இனிக்கோ", புதுமுகத்துவார வீதி,
கல்லடி, மட்டக்களப்பு.
(6) திருமதி.ஆன் விக்ரர்,
சென்.ஜேம்ஸ் லேன்,
இளவாலை.
(7) ப.அன்ரனி,
கனகராமன் குளம் தெற்கு,
கனகராயன் குளம்.
(8) கெ.புருஷோத்,
'யோகஸ்தான்',
கரணவாய் தெற்கு, கரவெட்டி.
(9) எம்.எல்.ரீ.பசுபதி,
இல.36 பாலிநகர்,
வவுனிக்குளம்.
(10) யோ.விக்டர் அரவிந்தன்
வல்லை வீதி,
தொட்டிலடி, சங்கானை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச டெஸ்ட் வீரர்களுக்கான தரப்படுத்தல் வெளியீடு

International Cricket Council

சர்வதேசக் கிரிக்கெட் சபையின் டெஸ்ட் வீரர்களுக்கான தரப்படுத்தல் வெளியிடப்பட்டுள்ளது. இந்திய - நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் நிறைவடைந்துள்ளதை அடுத்தே புதிய தரப்படுத்தல் வெளியிடப்பட்டுள்ளது. வெளியிடப்பட்டுள்ள தரப்படுத்தலில் இலங்கையின் குமார் சங்கக்கார துடுப்பாட்டத்திலும், தென்னாபிரிக்காவின் டேல் ஸ்ரெய்ன் பந்துவீச்சிலும் தொடர்ந்தும் முன்னிலை வகிக்கின்றனர்.

இத்தொடரில் இந்திய அணி சார்பாகச் சிறப்பாகச் செயற்பட்ட ரவிச்சந்திரன் அஷ்வின் 18ஆவது இடத்திலும், பிரக்ஜான் ஓஜா 14ஆவது இடத்திலும், மகேந்திரசிங் டோணி 36ஆவது இடத்திலும், விராத் கோலி 35ஆவது இடத்திலும் தரப்படுத்தப்பட்டுள்ளனர்.

பெங்களூர் டெஸ்ட்டில் சிறப்பாகச் செயற்படாத சச்சின் டெண்டுல்கர் 5 இடங்கள் பின்னேறி 16ஆவது இடத்திலும், விரேந்தர் செவாக் 23ஆவது இடத்திலும், கௌதம் கம்பீர் 38ஆவது இடத்திலும் உமேஷ் யாதவ் 48ஆவது இடத்திலும் தரப்படுத்தப்பட்டுள்ளனர்.

நியூசிலாந்து அணி சார்பாக ரொஸ் ரெய்லர் 6 இடங்கள் முன்னேறி 12ஆவது இடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ளார்.

வெளியிடப்பட்டுள்ள புதிய தரப்படுத்தல்கள்:

துடுப்பாட்டம்:
1. குமார் சங்கக்கார
2. ஹசிம் அம்லா
3. ஷிவ்நரின் சந்தர்போல்
4. ஜக்ஸ் கலிஸ்
5. ஏ.பி.டி.வில்லியர்ஸ்
6. மைக்கல் கிளார்க்
7. கிரேம் ஸ்மித்
8. யூனிஸ் கான்
9. அஷார் அலி
10. கெவின் பீற்றர்சன்
11. அலஸ்ரெயர் குக்
12. ரொஸ் ரெய்லர்
13. மிஸ்பா உல் ஹக்
14. திலான் சமரவீர
15. ஜொனதன் ட்ரொட்

பந்துவீச்சு:
1. டேல் ஸ்ரெய்ன்
2. வேர்ணன் பிலாந்தர்
3. சயீட் அஜ்மல்
4. ரங்கன ஹேரத்
5. ஜேம்ஸ் அன்டர்சன்
6. பென் ஹில்பன்ஹோஸ்
7. பீற்றர் சிடில்
8. ஸ்ருவேர்ட் ப்ரோட்
9. மோர்னி மோர்க்கல்
10. கேமர் ரோச்
11. அப்துர் ரெக்மான்
12. கிரேம் ஸ்வான்
13. ஷகிப் அல் ஹசன்
14. பிரக்ஜான் ஓஜா
15. ஷகீர் கான்

# ஊனமுற்றோருக்கான ஒலிம்பிக் போட்டியில் இலங்கைக்கு வெண்கலப் பதக்கம்



ஊனமுற்றோருக்கான ஒலிம்பிக் (பராலொலிம்பிக்) போட்டியில் இலங்கையைச் சேர்ந்த பிரதீப் சஞ்சய - வெண்கலப் பதக்கம் வென்றுள்ளார். ரீ46 பிரிவின் கீழ் ஆண்களுக்கான 400 மீற்றர் ஓட்டப்போட்டியிலேயே 3ஆம் இடத்தினைப் பெற்று வெண்கலப் பதக்கத்தினை இலங்கைக்காக வென்று கொடுத்துள்ளார். ரீ46 பிரிவு என்பது ஒரு கையில் முழங்கைக்குக் கீழ் பாதிப்புள்ள மாற்றுத் திறனாளிகளைக் குறிக்கும்.

# பொதுநிர்வாக அமைச்சின் செயலாளர் வெற்றிக்கிண்ண கிரிக்கெட் போட்டியில் யாழ். மாவட்ட அணி வெற்றி

பொதுநிர்வாக அமைச்சின் செயலாளர் வெற்றிக்கிண்ணத்திற்காக மாவட்ட அணிகளுக்கு இடையே நடத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் போட்டியில் யாழ். மாவட்ட அணி தனது முதலாவது வெற்றியைப் பெற்றுள்ளது.

பொதுநிர்வாக அமைச்சின் ஏற்பாட்டில் நுவரெலியா பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் யாழ். மாவட்ட அணியும் கம்பஹா மாவட்ட அணியும் மோதின.



முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். மாவட்ட அணி 47 ஓட்டங்களையும் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கம்பஹா மாவட்ட அணி 43 ஓட்டங்களையும் பெற்றன. இந்த நிலையில், யாழ். மாவட்ட அணி 04 ஓட்டங்களினால் வெற்றி பெற்றது.

மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களின் கணக்காளர்கள், பிரதேச செயலாளர்கள், உதவித் திட்டமிடல் பணிப்பாளர்களைக் கொண்ட அணிகளாக இருந்ததுடன், பெண்களையும் அணியில் உள்வாங்கி இந்தப் போட்டி நடைபெற்றது.

# வேகப்பந்து வீசுவதற்கான பயிற்சி வகுப்புகள் ஒன்லைனில்



எம்.ஆர்.எப் வேகப்பந்துவீச்சு அறக்கட்டளையின் முன்னாள் இயக்குநரும், முன்னாள் ஆஸ்திரேலியா வேகப்பந்து வீச்சாளருமான டென்னிஸ் லில்லி, கிரிக்கெட் போட்டிகளில் வேகப்பந்து வீசுவது எப்படி என்பது குறித்து ஒன்லைனில் பயிற்சி வகுப்பு நடத்த போவதாக அறிவித்துள்ளார்.

இது குறித்து டென்னிஸ் லில்லி கூறியதாவது,

இதுவரை கிரிக்கெட் உலகில் வேகப் பந்துவீச்சு முறைகளை யாரும் ஆன்லைனில் கற்று கொடுத்தது இல்லை. எனவே முதல் முறையாக இந்தத் திட்டத்தை நான் துவக்க உள்ளேன். ஒன்லைன் வேகப்பந்துவீச்சு பயிற்சி வகுப்பு பல நிலைகளைக் கொண்டது. இதில் தனிப்பட்ட முறையில் பயிற்சி அளிப்பது, ஒரு குழுவாக உள்ள அணிக்கு பயிற்சி அளிப்பது, பயிற்சியாளரின் ஆலோசனைகள் ஆகியவை இடம்பெற்றிருக்கும். கிரிக்கெட் போட்டிகளில் காயமடைந்த வீரர்கள் விரைவாக மீண்டு வரும் முறைகளை வீடியோ படங்களுடன் விளக்கப்பட உள்ளது. வேகப்பந்துவீச்சு பயிற்சியை பெற விரும்பும் உலகில் உள்ள எந்த கிரிக்கெட் வீரரும், இந்த பயிற்சி வகுப்பை எளிதாக பயன்படுத்திக் கொள்ளலாம்.

இதற்காக தான் பயன்படுத்த தீர்மானித்துள்ள சொப்ட்வேர் மூலம் ஒரு பந்துவீச்சாளரின் ஓடும் தன்மை, பந்துவீசும் நிலைகள், பந்துவீசும் முறை உள்ளிட்ட தகவல்களை வீடியோ படங்களாக பெற்றுக் கொள்ள முடியும். இதன்மூலம் ஒரு பந்துவீச்சாளரின் குறைகளை எளிதாகக் கண்டறிந்து, ஆலோசனைகள் வழங்க முடியும்.

ஒன்லைன் பயிற்சி வகுப்பு துவங்குவதற்கான பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. எனவே அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் பயிற்சி வகுப்பு செயல்படத் துவங்கும் என்று நினைக்கிறேன். இதற்காக நான் நம்பிக்கையான சில பயிற்சியாளர்களைத் தேர்வு செய்துள்ளேன். பயிற்சி வகுப்பில் 10 வயதிற்கும் மேற்பட்ட விருப்பமுள்ள வீரர்கள் கலந்து கொள்ளலாம். கிரிக்கெட் உலகில் நான் கற்றுக் கொண்ட நுணுக்கங்களையும், அனுபவங்களையும், இளம் கிரிக்கெட் வீரர்களுக்கு அளித்து சிறந்த வேகப்பந்து வீச்சாளர்களை உருவாக்க வேண்டும் என்பதே தனது குறிக் கோளாகும் என்றார்.

# சிறந்த நீச்சல் வீரர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு





பொசன் விழாவை முன்னிட்டு நடைபெற்ற உயிர்காக்கும் பணி செயற்பாட்டில் சிறந்த நீச்சல் வீரர்களாக தெரிவு செய்யப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு காரைநகர் கசூரினா கடற்கரை மண்டபத்தில் நடைபெற்றது.

இலங்கைப் பொலிஸின் 146 ஆண்டு நிறைவை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வு ஊர்காவற்துறை பொலிஸ் நிலைய நீச்சல் பயிற்றுனர் ஜ.பி ஹேரத் தலைமையில் நடைபெற்றது. இப்போட்டியில், யாழ். மத்திய கல்லூரி மாணவர்கள் மற்றும் காரைநகர் தியாகராஜா மகா வித்தியாலய மாணவர்கள் கலந்து கொண்டனர்.

இப்போட்டியில் சிறந்த நீச்சல் வீரர்களாக தெரிவு செய்யப்பட்ட வீரர்களுக்கு யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக் பெரேரா மற்றும் யாழ்.மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் செ.ஸ்ரீ.குகநேசன் ஆகியோர் சான்றிதழ்கள் வழங்கி வைத்தனர்.

இதேவேளை, பாடசாலை மாணவர்களுக்கான நீச்சல் பயிற்சிகளும் இதன்போது வழங்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நானோ தொழில்நுட்பம் மூலம் ரத்தத்தை உடனே உறைய வைக்கும் புதிய மருந்து



விபத்துக்களில் காயம் அடைந்தவர்களின் மரணத்துக்கு அதிக ரத்தப் போக்கே முக்கிய காரணமாக இருக்கிறது. ரத்தப்போக்கை நிறுத்தி விட்டால் உயிரிழப்புகளை பெருமளவில் தவிர்த்து விடலாம். இதற்காக புதிய மருந்து ஒன்றை ஜப்பான் விஞ்ஞானிகள் உருவாக்கி உள்ளனர். ஜப்பானில் உள்ள தேசிய ராணுவ மருத்துவக் கல்லூரி ஆராய்ச்சியாளர்கள் இது தொடர்பாக ஆய்வு ஒன்றை நடத்தினார்கள். இதில் நானோ தொழில்நுட்பம் மூலம் ரத்தத்தை உடனடியாக உறைய வைக்கும் மருந்தைக் கண்டுபிடித்தனர். அந்த மருந்தில் கண்ணுக்குத் தெரியாத நுட்பமான பொருட்கள் அடங்கியுள்ளன. இவற்றை உடலில் செலுத்தியதும் ரத்தநாளத்தில் சேதமடைந்த பகுதிகளை அடைத்துக் கொள்ளும். இதன் மூலம் ரத்தக் கசிவு உடனடியாகத் தடுக்கப்படும். தற்போது விலங்குகளுக்கு இதைக் கொடுத்து பரிசோதித்து உள்ளனர். அதில் மருந்து வெற்றிகரமாக வேலை செய்தது. இந்த புதிய மருந்து மூலம் உலகில் பெரிய அளவில் விபத்து மரணங்களைத் தடுக்கலாம் என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். மேலும் ஓப்பரேசன் செய்யும் போதும் இந்த மருந்தை பயன்படுத்தினால் அதிக ரத்தப் போக்கைத் தடுக்கலாம் என்றும் அவர்க்ள் தெரிவித்தனர்.

# அசுஸ்ஸின் புதிய அல்ட்ரா புக்

அசுஸ் நிறுவனம் தனது எல் வரிசையில் இரண்டு புதிய அல்ட்ராபுக்குகளைக் களமிறக்கி இருக்கிறது. இந்த அல்ட்ரா புக்குகளுக்கு



எஸ்56சிஎ-எக்ஸ்எக்ஸ்030ஆர் மற்றும் எஸ்56சிஎ எக்ஸ்எக்ஸ்056ஆர் என்ற பெயர்கள் சூட்டப்பட்டிருக்கின்றன. 3ஜி மற்றும் இன்டல் ஐ3 கோர் ப்ராசஸருடன் வரும் எஸ்56சிஎ-எக்ஸ்எக்ஸ்030ஆர் அல்ட்ரா புக் ரூ.46,999க்கு விற்கப்படுகிறது. அதே நேரத்தில் இன்டல் ஐ5 ப்ராசஸருடன் வரும் எஸ்56சிஎ-எக்ஸ்எக்ஸ்056ஆர் அல்ட்ரா புக் இந்திய ரூ.52,999க்கு விற்கப்படுகிறது. இந்த இரண்டு லேப்டாப்புகளும் 15.6 இன்ச் எச்டி எல்இடி பேக் லைட் க்ளேர் டிஸ்ப்ளே மற்றும் உயர்தர எஸ்எஸ் எச்+எச்டிடி சேமிப்பு வசதியையும் கொண்டுள்ளன. மேலும் அசுஸ் தனது எப் வரிசையில் ஒரு புதிய லேப்டாப்பை அறிமுகம் செய்து வைத்திருக்கிறது. 2ஜி ப்ரொசஸர் கொண்ட இந்த லேப்டாப் இந்திய ரூ.35,999க்கு விற்கப்பட இருக்கிறது. இந்த லேப்டாப் ஐஸ்கோல் தொழில்நுட்பம் கொண்டிருப்பதால் இந்த லேப்டாப் அதிக சூடு அடையாது. அதுபோல் இந்த லேப்டாப்பில் சோனிக் மாஸ்டர் லைட் வசதியும் உள்ளதால் இதில் ஓடியோவும் சிறப்பாக இருக்கும்.

# வெளியாகிறது அப்பிளின் iPhone 5





கைப்பேசி பாவனையாளர்களின் பலத்த எதிர்பார்ப்புக்களின் மத்தியில் வித்தியாசமானதும், அதிநவீன தொழில்நுட்பங்களுடனும் உருவாக்கப்பட்டுள்ள அப்பிளின் iPhone 5 இனை அறிமுகப்படுத்தும் திகதியினை அப்பிள் நிறுவனம் அறிவித்துள்ளது.

இதன்படி இம்மாதம் 12 ஆம் திகதி வெளியிடுவதாகவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்காக லோகோ ஒன்றினையும் அறிமுகப்படுத்தியுள்ளது.

12 என்ற இலக்கத்தைக் கொண்ட குறித்த லோகோவின் நிழலாக 5 என்ற எண் பொறிக்கப்பட்டுள்ளது. இவற்றுள் 12 என்பது வெளியிடப்படவுள்ள திகதியையும், 5 என்பது iPhone 5 என்பதினையும் குறித்து நிற்கின்றது.

நான்கு அங்குல தொடுதிரை போன்ற பல்வேறு வசதிகளுடன் கூடிய இக்கைப்பேசியினை வெளியிடும் நிகழ்வானது சன் பிரான்ஸிஸ்கோ அமைந்துள்ள Yerba Buena வில் ஆரம்பமாகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சாம்சங் 3 தொலைபேசி 20 மில்லியனுக்கு விற்பனை -சாதனை !



சாம்சங் நிறுவனத்தினால் சந்தைக்கு விடப்பட்டு மூன்று மாதத்தில் சாம்சங் கலசி மூன்று என்ற புதிய தொலைபேசி இருபது மில்லியனுக்கும்விற்பனையாகி பெரும் விற்பனை சாதனையை நிகழ்த்தியுள்ளது. அப்பிள் மொட்டரோலாவுக்கு எதிராக இந்த விற்பனை சாதனை பதிவாகியுள்ளது . இந்த தொலைபேசி அப்பிள் ஐபோனின் செயல்திறனை ஒப்பிட்ட நிலையில் செயல்படுவதாலேயே மக்கள் மத்தியில் அதிக வரவேற்பைப் பெற்றுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# மரத்திற்குள் மனிதர்கள் வசிக்க முடியுமா?





தென்னாபிரிக்காவில் காணப்படும் இந்த மரத்தின் பெயர் போபாப் மரம் ஆகும். இந்த மரத்தினை துளையிட்டு அதில் விடுதி ஒன்று செயல்படுகிறது. இந்த விடுதியில் 15 பேர் வசிக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஏ.ஆர்.ரஹ்மானின் 20 வருட இசை வாழ்க்கையையொட்டி பிரமாண்ட விழா



'இசைப்புயல்' ஏ.ஆர்.ரஹ்மான் திரைப்பட உலகில் இசையமைக்க ஆரம்பித்து 20 வருடங்கள் பூர்த்தியாவதையொட்டியும் அவரை கௌரவிக்கும் வகையிலும் சென்னையில் பிரமாண்ட விழாவை நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 21ஆம் திகதி சென்னை காமராஜர் அரங்கத்தில் இவ்விழா நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

'ரோஜா' திரைப்படத்தின் மூலம் திரையுலகில் இசை வாழ்க்கையை ஆரம்பித்த ஏ.ஆர். ரஹ்மான், தேசிய விருதுகளும் இரட்டை ஆஸ்கர் விருதுகளும் பெற்று தமிழ்த் திரையுலகிற்கு பெருமைசேர்த்தவர்.

ஏ.ஆர்.ரஹ்மானை கௌரவிக்கும் முகமாக பிரபல இசையமைப்பாளர்கள், இயக்குநர்கள், நடிகர், நடிகைகளென திரைத்துறையைச் சேர்ந்த பலரும் இவ்விழாவில் கலந்துகொள்ளவுள்ளதாக இவ்விழாவை ஏற்பாடு செய்துள்ள ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

# உலகின் மிகச் சிறிய பைக்



உலகின் மிகச்சிறிய பைக்கை கர்நாடகத்தைச் சேர்ந்த வாலிபர் ஒருவர் வடிவமைத்து அசத்தியதோடு, அதில் ஒரு ரவுண்டும் வந்து எல்லோரையும் திரும்பிப் பார்க்க வைத்துள்ளார்.

மைசூரை சேர்ந்தவர் சந்தோஷ். தனியார் நிறுவனம் ஒன்றில் பணியாற்றி வருகிறார். இவர் வெறும் 4 கிலோ மட்டுமே எடை கொண்ட எலக்ட்ரிக் பைக் ஒன்றை வடிவமைத்துள்ளார்.

மூஷிகா (மூஞ்சுறு) என்று பெயரிடப்பட்டிருக்கும் இந்த பைக் 12 இஞ்ச் அகலமும், 18 இஞ்ச் உயரமும் கொண்டது. மணிக்கு 12 கிமீ முதல் 15 கிமீ வேகம் வரை செல்லும் திறன் பெற்றது. பெட்டரியில் இயங்கும் இந்த 4 கிலோ எடை கொண்ட பைக்கில் 70 கிலோ எடை கொண்டவர் அமர்ந்து ஓட்ட முடியும். இந்த குட்டி பைக்கை சமீபத்தில் ஓட்டிக் காட்டி அவர் அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளார். யூடியூபில் இதன் வீடியோ இருக்கிறது.

இந்த குட்டி பைக் லிம்கா சாதனை புத்தகத்தில் இடம்பெற்றுள்ளது. அத்தோடு, இந்தியன் புக் ஆஃப ரெக்கார்ட்ஸிலும் அங்கீகாரம் பெற்றுள்ளது. இந்த பைக்கை வடிவமைக்க 6 மாதம் ஆனதாக அவர் தெரிவித்துள்ளார். இதற்கு 18,000 செலவானதாகவும் தெரிவித்துள்ளார்.


# இப்பொழுது விற்பனையில்

பள்ளிச் சிறுவர்கள் படிக்க அழகிய வண்ணப் படக்கதை, கவிதைகளுடன் வெளிவந்துள்ளது...




ஒகஸ்ட், செப்ரெம்பர் மாத இதழ்கள்

வாங்குங்கள் வாசியுங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு - 06, வெள்ளவத்தை, பெரகும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட்மார்க் என்டர் பிறைஸ் ஸ்தாபனத்தினால், 2012 செப்ரெம்பர் 12 ஆம் திகதி வெளியிடப்பட்டது.